@NewsRotary /RotaryNewsIndia

# ரோட்டரி நியூஸ்

மே 2018

Rotary



கண்ணியமான பள்ளிப்படிப்பு

# ராஸின் ராஜே சந்திப்பு



RIPE பேரி ராஸின் இந்தியா வந்த போது RID C பாஸ்கருடன் ராஜஸ்தான் முதலமைச்சர் வசுந்தரா ராஜே சின்ஹாவை சந்தித்தார். இந்த சந்திப்பைப்பற்றி பேசும்பொழுது ராஜே அவர்கள் மிகுந்த வலிமை மற்றும் சக்தி வாய்ந்த ஒரு தலைவர் இந்தியாவின் முன்னேற்றத்திற்கான மாற்றங்களை நிகழ்த்துகிறார். குறிப்பாக ரோட்டரியுடன் இணைந்து செயலாற்ற ஆர்வம் காட்டுகிறார் என்று ராஸின் கூறினார்.

# உள்ளே




**12** பள்ளிக் குழந்தைகள் இனி தரையில் உட்காரப் போவதில்லை

1,000 பள்ளிகளில் இருக்கும் குழந்தைகள், அவர்களின் வகுப்பறைகளில் பெஞ்சு மற்றும் டெஸ்க்குகளைப் பயன்படுத்துகிறார்கள், இதற்கு RC சோன்கட்ச் ரொட்டேரியன்களுக்கு நன்றி.





**20** தாராள மனப்பான்மைக்கு ஒரு பாராட்டு விழா

மும்பை மற்றும் சென்னையில் TRFக்கு நன்கொடையளித்த தாராள குணம் கொண்ட நன்கொடையாளர்களை RIPE பேரி ராஸின் பாராட்டுகிறார்.





**72** நடன வாழ்க்கை

இந்த இதழ் மூலம் இந்தியாவின் பல்வேறு நடன வகைகளை உங்களுக்கு வழங்குகிறோம்.

**24** ரோட்டரியும், எழுத்துப் பணியும் இவருக்கு இரு கண்கள்

முன்னாள் கவர்னர் பிரேம் பல்லா ரோட்டரியின் மீது ஈடுபாடு கொண்டவர் மட்டுமல்ல; அவர் ஆர்வமுள்ள எழுத்தாளரும் கூட.

**36** ரோட்டரி சேவையில் மாத்யூஸ்

(அமெரிக்கா மற்றும் கனடா) 25-26 மண்டலங்களின் RI டைரக்டர் ஜான் சி மேத்யூஸ்ஸுடன், அவரது ரோட்டரி பயணம் மற்றும் அவற்றில் இருந்த சவால்களைப் பற்றிய ஒரு உரையாடல்.

**41** சத்தீஸ்கர் மாநிலம் தம்தரியில் ஒரு மருத்துவ முகாம்

சத்தீஸ்கர், தம்தாரியில் D 3080 மற்றும் 3261 ஏற்பாடு செய்திருந்த மருத்துவ முகாமில், 20,000 க்கு மேற்பட்டவர்களுக்கு கலந்துகொண்டு சிகிச்சை பெற்றனர்.





**44** ரொட்டேரியன்களின் உள்ளத்தை தட்டியெழுப்புவோம்:பேரி ராஸின்

சென்னையில் 3000 மற்றும் 3232 மாவட்டங்களின் புதிய பிரசிடென்டுகள் மற்றும் செக்ரட்டரிகளை ஊக்கப்படுத்துகிறார் RIPE பேரி ராஸின்.

**70** என்றும் இளமை

திறமையான வாழ்க்கைமுறைப் பயிற்சிகள் கருணைமிகு முதுமைக் காலத்தில் உதவுகிறது.





**52** வெப்ப வாயு பலூன்களில் ஃபேரி சிம்னிக்களுக்கு மேலே பயணம்

ஒரு வெப்ப வாயு பலூனில் பறந்து துருக்கி கேப்படோசியாவின் அழகைப் பார்க்கலாம்.


**அட்டையில்:** RC சோன்கட்ச், D 3040 வழங்கிய நல்ல இருக்கை வசதியால், மாணவர்கள் தங்களுடைய பள்ளிப் படிப்பை சிறப்பாக அனுபவிக்கிறார்கள்.

**படங்கள்:** ரஷீதா பகத்

## வியக்கத்தக்க ரேணுத்தாய்

*ஏப்ரல் இதழில் வெளியான ரேணுத்தாய் கதை என்னை மிகவும் நெகிழ வைத்தது. தன் வாழ்க்கைப் பயணத்தில் எதிர் கொள்ளும் தடைகளை கடந்து உறுதிகொண்ட குறிப்பிடத்தக்க பெண்ணாக இருக்கிறார். சமுதாயத்தில் பின்தங்கிய குழந்தைகளை பிரதான வாழ்க்கை முறைக்கு கொண்டு வருவதில் தான் இந்த நாட்டின் வருங்காலம் உள்ளது. அந்தக் கதை எட்டு வயது குழந்தை பாலுக்கு பதில் பீர் கேட்பது போல் அதிர்ச்சி தரும் நிகழ்வுகளைக் கொண்டிருந்தது. வரும் காலங்களில் குழந்தைகளின் வாழ்கையை அவர் காப்பாற்றுவார் என நம்புகிறேன். ரேணுத்தாய் மற்றும் கைலாஷ் சத்யார்த்தி போன்றவர்களுடன் நாம் பணிபுரிவதில் ஒரு ரொட்டேரியனாக நான் பெருமைப்படுகிறேன்.*

N. *கோபிநாத்*, RC *பெங்களூர் இந்திராநகர்* — D 3190

*சில மக்கள் தங்களின் கடின உழைப்பு மற்றும் திறமையினால் செல்வந்தர் ஆகிறார்கள். மற்றவர்கள் அனுபவம் என்னும் சொத்து உடையவர்கள். புனேவை சேர்ந்த ரேணுத்தாயைப் பொறுத்த வரை செல்வத்தின் உருவக பயன்பாடு என்பது மன உறுதி மிக்க மற்றும் துணிச்சலான செயலாகும். இப்போதைய காலத்தில் பெண்கள் பல துறைகளில் பணிபுரிந்து சமூக அநீதி மற்றும் வன்முறைக்கு எதிராக உண்மையான போர்புரிகிறார்கள். உங்கள் மதிப்புமிக்க தலையங்கம் மற்றும் யதார்த்தமான அட்டைப்*



*பக்க கதை ஒரு தைரியமான மற்றும் அடிமைத்தளைகளை அறுத்த பெண்ணினத்தைப் பற்றிய உண்மைகளை அழகாக விளக்கிக் கூறுகிறது.*

*அருண்குமார் டேஷ்*
RC *பரிபாடா* — D 3262

*ரேணுத்தாய் (ஆஷா ஷெட்யே) மற்றும் அவரின் வியக்கத்தக்க செயலை ரோட்டரி நியூஸ் வெளியிட்டதைக் கண்டு மகிழ்ச்சி கொண்டேன். ஆஷா ஷெட்யேயும் நானும் மும்பை, தாதரில் உள்ள* Sane Guruji Vidyalaya*வில் ஒரே வகுப்பில் படித்தோம். அவர் ஒரு திறமைமிக்க மாணவி. நாங்கள் இருவரும் சேர்ந்து பள்ளிகளுக்கு இடையான போட்டிகளிலும் கலந்து கொண்டோம். இந்த கவர் ஸ்டோரி அனைத்து கடந்தகால தருணங்களையும் நினைவுறுத்தியது.*

*அவர் ஒரு திறமையான நபர், மனித நேயமிக்கவர் மற்றும் குழந்தைகளுக்கு செய்யும் சேவையைப் பேசிக்கொண்டே இருக்கலாம். அவர்கள் பள்ளிக் காலம் முதலே ஒரு சிறந்த பேச்சாளர் மற்றும் கதை சொல்லுவதில் வல்லுநர். இப்போது அவரின் பேச்சுக்கள் அவருடைய மனிதநேயமிக்க செயல்பாடுகளின் சிறந்த அனுபவங்களால் சுவை சேர்க்கப்பட்டுள்ளன. ரேணுத்தாய் அவர்களின் உன்னதமான பணியில் இணைந்து ஆதரவு தரும் ரொட்டேரியன்கள் சதானந்த், தீபாபகவத் மற்றும்* RC *புனே லஷ்மி உறுப்பினர்களை பாராட்டுகிறேன். ரேணுத்தாயின் பணி பற்றி அட்டைப்பட கதையாக வெளியிட்ட ஆசிரியர் ரஷீதா பகத் மற்றும் அவரது குழுவினரை நான் பாராட்டியே ஆகவேண்டும். இந்தக் கதை* RI*யின் ஆறு பிரதான துறைகளில் ஒன்றான தாய் சேய் நலச்சேவை துறையில் நிறைய சேவை புரிய மற்ற ரோட்டரி சங்கங்களுக்கு ஊக்கமளிக்கும் என நான் உறுதியாக நம்புகிறேன்.*

IPDG *பிரசாந்த் பூஷன்* — D 3131

*ரேணுத்தாயின் குழந்தை கடத்தல் தடுப்பு வேலை பற்றிய அட்டைப்பட கதை அனைவரும் அறியச் செய்யும் ஒரு செய்தி.* RC *புனே லக்ஷ்மி ரோடு ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவராகிய சதானந்த் பகவத் தன்னால் இயன்ற முயற்சி செய்தாலும், மற்ற ரோட்டரி சங்கங்களும் புனேயில் இத்தகைய சிறப்பான சேவைக்கு உதவ வேண்டும் என நான் கருதுகிறேன்.*

*குழுத் தலைவர் விஜி தியோதர்*
RC *நாசிக்* — D 3030

### தலையங்கத்தால் ஊக்கமளிக்கப்பட்ட ஒரு சேவைத் திட்டம்

RC அஹ்மதாபாத் மேற்கு சங்கத்தின் (RID 3054)யின் தலைவராக உள்ளேன். மார்ச் பதிப்பில் நீங்கள் நான்கு வழி சோதனை முறையை உண்மையான பயன்பாட்டில் பயன்படுத்த வலியுறுத்தியது பிடித்திருந்தது. இதனை செயல்படுத்த உங்கள் பரிந்துரைகளை நான் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

சந்தேஷ் முத்ரா
RC அகமதாபாத் — D 3054

### திட்டங்களுக்கு அதிக இடம் ஒதுக்குங்கள்

ரோட்டரி நியூஸ் மிக சுவாரசியமான பிரசுரமாக்கியதற்கு வாழ்த்துக்கள். ரோட்டரி உலகத்தில் நடக்கின்ற பல நிகழ்ச்சிகளையும், நாடு தழுவிய சுவாரசியமான திட்டங்களையும், உலகளாவிய நிகழ்வுகள் பற்றி மட்டும் தான் இந்த இதழ் மூலம் அறிய முடிகிறது. ரோட்டரி தலைவர்களின் படங்கள் அதிகமாக உள்ளன மற்றும் குறைந்தபட்சம் 7-8 பக்கத்திற்கு 'பொது வான விஷயங்கள்' தான் உள்ளது. ரோட்டரி திட்டங்களுக்கு அதிக இடம் தரும்படி வேண்டுகிறேன்.

பேராசிரியர் தினேஷ் ஹெச் சோனி,
RC லாத்தூர் மிட்டவுன் — D 3132

ஒரு உதவிக் கரம் (மார்ச் இதழில் வெளியானது) என்ற கட்டுரை அற்புதமாக இருந்தது ஏழ்மையில் தவிப்பவர்களுக்கு குறிப்பாக புற்று நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு தாராளமாக உதவ மிகுந்த விருப்பத்துடன் இருப்பதை வலியுறுத்து கிறது. RC பாம்பே மிட்சிட்டி ரோட்டரி

சங்கம் இந்த திட்டத்திற்காக ஒரு பலத்த கைத்தட்டலுக்குத் தகுதி உடையதாகிறது. இத்தகைய அற்புதமான கட்டுரைகளை வெளியிட்டமைக்கு நன்றி.

டி டீ பாட்டியா, RC தில்லி மயூர் விஹார் — D 3012

ஏப்ரல் இதழில் RID 3000க்கு பிரேசில் குழு வருகை பற்றி வெளியிட்டமைக்கு நன்றி-ஜெய்ஸ்ரீ எழுதிய தமிழ்நாடு பிரெசிலிய பார்வையாளர்ளை வசியப்படுத்தியது. பிரெசிலிய குழுவினர் தங்கள் நன்றியை தெரிவித்தனர். ரோட்டரி தோற்றத்தை மேம்படுத்துவதற்காக உங்கள் பணிக்கு நாங்கள் நன்றி தெரிவிக்கிறோம்.

DG பி கோபாலகிருஷ்ணன் — D 3000

## படைப்பாற்றலில் புதுமை

விஷன் க்வெஸ்ட் என்ற கட்டுரை RIக்கு நன்மை செய்யும் பரிந்துரைகள் மற்றும் முடிவுகளை ஒரு ஆவணமாக அளிக்கிறது. RI தலைவராக தேர்ந்தெடுக் கப்பட்டுள்ள பேரி ரஸ்ஸின் ஒரு புதுமையான மற்றும் படைப்பாற்றல் மிக்க முறையில் எங்களுக்கு தீர்வுகளை வழங்குகிறார். ரோட்டரி என்பது பேரிடர் பாதித்த இடங்களுக்கும், நன்கொடையாளர்களுக்கும் இடையில் ஒரு சிறந்த ஊக்கமளிக்கும் தகவல் தொடர்பாளராகவும், வினையூக்கியாக வும், நீண்ட கால மீட்பு முயற்சியை வழங்குவதாகவும் இருக்க வேண்டும் என்றார். மேலும் ஒவ்வொரு சங்கமும் ஒரு உயர்நிலையிலான தாக்கம் ஏற்படுத்துகின்ற சேவைத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்றார். ரஸ்ஸின் ரோட்டரி சங்கங்களைத் தொடங்க புதிய வழிகளை ஆராய வேண்டும் என விரும்புகிறார் மற்றும் ரோட்டராக்டர்கள் ரோட்டரியின் ஆயுள் காப்பீடு போன்றவர்கள், அவர்கள் ரோட்டரிக்குள் வர ஒரு தடையற்ற மாற்றத்தை நாம் உறுதி செய்ய வேண்டும் என்றார். இணிஃ மூலம் ரோட்டரி நிர்வாகக் கொள்கையில் விரைவான சீர்திருத்த கொள்கை மாற்றங்கள் ஏற்படுத்துவது பற்றிய கருத்துக்கள் பாராட்டப்படுகின்றன.

வி கே பன்சால், RC தில்லி அப்டவுன் - D 3012

## ஒரு மாதிரி ரோட்டரி பள்ளி

சில ஆண்டுகளுக்கு முன்னர் முடாபித்ரியில் ஒரு மாநில அளவிலான அபாகஸ் போட்டிக்கு சென்றிருந்தேன் மற்றும் ரோட்டரி பள்ளியில் ஆசிரியர்களுக்கான பட்டறை ஒன்றை நடத்த முன்வந்தேன். சில மணி நேரத்திலேயே என்னால் இத்தகைய நிகழ்வை பள்ளியில் நிகழ்த்த முடிந்தது. பேருந்து வசதி மற்றும் வகுப்பறைகள் நல்ல வடிவத்தில் இருந்தன. ஆசிரியர் வகுப்பில் இல்லாதபோது ஒரு மாணவன் அந்த வகுப்பை வழி நடத்தும் முறை இருப்பதை நான் தெரிந்துகொண்டேன்.

வசந்தி ரங்கநாதன்
TRF கேடர் — D 3232

## ஒரு சுவாரசியமான பதிப்பு

ஏப்ரல் வெளியீடு மிக சுவாரசியமான தலைப்புகளுடனும் மற்றும் தகுந்த அட்டைப் படத்துடனும் வெளியாகி உள்ளது. ஆசிரியரின் குறிப்பில், இரண்டு பெண்களுக்கு இடையேயான முரண்பட்ட கதை எடுத்துரைக்கப்பட்டது; முதலில் ஹாங்காங்கை சேர்ந்த ஜோவ் குயின்ஃபி அவர்கள் கந்தலில் இருந்து செல்வந்தர் ஆன கதை; மற்றும் இரண்டாவது கதை புனேவில் வசிக்கும் ரேணுத்தாய் என்னும் பெண்ணின் வேறு வித செல்வமாக தெருவில் வாழும் குழந்தைகளுக்கு சேவை செய்யும் எண்ணில் அடங்கா அன்பெனும் செல்வத்தை பிரதிபலிப்பதாகவும் இருந்தது.

RIPE பேரி ரஸ்ஸின் தொலை நோக்குத் தேடல், சமூக ஊடகங்கள் மூலம் ரோட்டரி நடவடிக்கைகளுக்கு சிறந்த வரவேற்பு என்ற அவரது யோசனை சிறப்பு வாய்ந்ததாகும். தொலைநோக்குப் பார்வை அறிக்கையின் முக்கியத்துவம், பொது மேடையில் முதன்முதலாக அவரின் பேச்சு பற்றிய அவரது நகைச்சுவைக் கதை ஆகியவை வாசிக்கத் தகுந்தவை. ரோட்டரி நிர்வாகக் கொள்கைகளில் முக்கிய முடிவுகளை எடுத்துக் கொள்ளும் காலத்தைக் குறைப்பதில் அவரது கருத்துகள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது.

வாரணாசியின் அழகான படங்கள்; மாற்றுத் திறனாளிகளுக்கென்றே பிரத்தியேகமான புதிய ரோட்டரி சங்கம் பெங்களூரில் என்பதை அறிந்து மகிழ்ச்சியடைந்தேன்.

எம் டி ஃபிலிப், RC திருவனந்தபுரம் சப்அர்பன் — D 3211



## RIDன் செய்திகள்

*மார்ச் வெளியீட்டில், RID C பாஸ்கர் அவர்களின் செய்தி சுத்தமான தண்ணீர் மற்றும் சுகாதாரத்திற்கு செய்யவேண்டியதையும் செய்யக் கூடாததையும் பற்றி ரொட்டேரியன்கள் புரிந்து கொள்ள உதவியது. அவர் சுட்டிக் காட்டியபடி, கடந்த மூன்று ஆண்டுகளில் D 3262 ல் WinS திட்டங்கள் கடந்த மூன்று ஆண்டு களாக மாணவர்களின் நடத்தையை மாற்றுவதில் நேர்மறையான முடிவுகளைக் காண்பித்துள்ளது. சுகாதாரத்தையும் உடல்நலத்தையும் மேம்படுத்துவதற்கு நாம் மேலும் பல பள்ளிகளை அணுகவேண்டும்.*

*ஆர் முரளிகிருஷ்ணா*
*RC பெர்ஹாம்பூர் — D 3262*

*இந்தத் தகவல் ரோட்டரியின் பங்குடன் சுத்தமான நீர் மற்றும் சுகாதாரத்தின் முக்கியத்துவம் பற்றி பேசுகிறது. சுத்தமான குடிநீர் மற்றும் சுகாதார பராமரிப்பு பற்றியும், அதனால் குழந்தைகளின் உடல் நலத்தில் ஏற்படும் பாதிப்பு பற்றியும் WinSன் பங்கு பற்றியும் விவரித்துள்ளார். ரொட்டேரியன்களாகிய நாம் போலியோவிற்கு எதிரான ஒரு நீண்ட மற்றும் வெற்றிகரமான போராட்டத்தை நடத்தினோம்.*

*விஜய் ஹட்டிஹோலி*
*RC ஹூப்ளி வடக்கு — D 3170*

*உங்களுடைய கருத்துக்களை நாங்கள் வரவேற்கிறோம். ஆசிரியருக்கு எழுதுங்கள்:* rotarynews@rosaonline.org ; rushbhagat@gmail.com

## Governors Council

| | | |
|---|---|---|
| RI Dist 2981 | DG | P S Ramesh Babu |
| RI Dist 2982 | DG | Dharmesh R Patel |
| RI Dist 3000 | DG | P Gopalakrishnan |
| RI Dist 3011 | DG | Ravi Choudhary |
| RI Dist 3012 | DG | Sattish Singhal |
| RI Dist 3020 | DG | G V Rama Rao |
| RI Dist 3030 | DG | Dr K Sunder Rajan |
| RI Dist 3040 | DG | Dr Zamin Hussain |
| RI Dist 3053 | DG | Rajkumar Bhutoria |
| RI Dist 3054 | DG | Maullin Manubhai Patel |
| RI Dist 3060 | DG | Ruchir Anirudh Jani |
| RI Dist 3070 | DG | Parvinder Jit Singh |
| RI Dist 3080 | DG | T K Ruby |
| RI Dist 3090 | DG | Bagh Singh Pannu |
| RI Dist 3110 | DG | Vinay Kumar Asthana |
| RI Dist 3120 | DG | Ranjeet Singh |
| RI Dist 3131 | DG | Abhay Gadgil |
| RI Dist 3132 | DG | Vyankatesh Vithal Channa |
| RI Dist 3141 | DG | Prafull J Sharma |
| RI Dist 3142 | DG | B M Sivarraj |
| RI Dist 3150 | DG | J Abraham |
| RI Dist 3160 | DG | Madhu Prasad Kuruvadi |
| RI Dist 3170 | DG | Anand G Kulkarni |
| RI Dist 3181 | DG | M M Chengappa |
| RI Dist 3182 | DG | G N Prakash |
| RI Dist 3190 | DG | Asha Prasanna Kumar |
| RI Dist 3201 | DG | Vinod Krishnan Kutty |
| RI Dist 3202 | DG | Sivashankaran P M |
| RI Dist 3211 | DG | Suresh Mathew |
| RI Dist 3212 | DG | Chinnadurai Abdullah |
| RI Dist 3231 | DG | Jawarilal Jain K |
| RI Dist 3232 | DG | R Srinivasan |
| RI Dist 3240 | DG | Sunil Saraf |
| RI Dist 3250 | DG | Vivek Kumar |
| RI Dist 3261 | DG | Harjit Singh Hura |
| RI Dist 3262 | DG | Ajay Agarwal |
| RI Dist 3291 | DG | Brojo Gopal Kundu |

## Board of Permanent Trustees & Executive Committee

| | | |
|---|---|---|
| PRIP | Rajendra K Saboo | RI Dist 3080 |
| PRIP | Kalyan Banerjee | RI Dist 3060 |
| PRID | Sudarshan Agarwal | RI Dist 3011 |
| PRID | Panduranga Setty | RI Dist 3190 |
| PRID | Sushil Gupta | RI Dist 3011 |
| PRID | Ashok Mahajan | RI Dist 3141 |
| PRID | Yash Pal Das | RI Dist 3080 |
| PRID | Shekhar Mehta | RI Dist 3291 |
| PRID | P T Prabhakhar | RI Dist 3232 |
| PRID | Dr Manoj D Desai | RI Dist 3060 |
| RID | C Basker | RI Dist 3000 |

### Executive Committee Members (2017–18)

DG B M Sivarraj — RI Dist 3142
Chair – Governors Council

DG R Srinivasan — RI Dist 3232
Secretary – Governors Council

DG Abhay Gadgil — RI Dist 3131
Secretary – Executive Committee

DG Vivek Kumar — RI Dist 3250
Treasurer – Executive Committee

DG P Gopalakrishnan — RI Dist 3000
Member – Advisory Committee



## ROTARY NEWS / ROTARY SAMACHAR

**Editor**
Rasheeda Bhagat

**Senior Assistant Editor**
Jaishree Padmanabhan

## Send all correspondence and subscriptions to

ROTARY NEWS TRUST
3rd Floor, Dugar Towers, 34 Marshalls Road
Egmore, Chennai 600 008, India.
Phone : 044 42145666
e-mail : rotarynews@rosaonline.org
Website : www.rotarynewsonline.org

Printed by Mukesh Arneja at Thomson Press (India) Ltd, Plot A-9, Industrial Complex, Maraimalai Nagar 603209, India and published by Mukesh Arneja on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.



The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions – original content – is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced, but with permission from RNT.



# அதிகரித்துவரும் பாலியல் வன்முறைகள்,
# இந்தியப் பெண்களுக்கு ஒரு சவால்!

அண்மையில் காஷ்மீர், உத்தரப் பிரதேசம் ஆகிய இடங்களில் எப்போதும் இல்லாத வகையில் நடந்த சிறுமியர் மீதான பாலியல் பலாத்காரச் சம்பவங்கள் நாடு முழுவதும் கோபத்தையும் வேதனையையும் ஏற்படுத்திவிட்டன.

தில்லியில் 2012ஆம் ஆண்டு டிசம்பரில் நிர்பயா மீதான கொடூரமான அனைவரது மனத்தையும் அதிரவைத்த பாலியல் வன்முறைச் சம்பவத்தை அடுத்து மெழுகுவர்த்தி போராட்டம், அமைதி ஊர்வலம் நடைபெற்றன. இந்த முறை எட்டு வயது ஆசிஃபா பானுவுக்கு போதைப் பொருள் கொடுத்து, கடத்தி, பாலியல் வன்முறை நடத்தியிருக்கிறார்கள். அவர்களில் இருவர் காவல்துறையினர், ஒருவன் சிறுவன். உத்தரப் பிரதேச சம்பவத்தில் பெண்ணைப் பாலியல் பலாத்காரம் செய்தவர் சட்டப்பேரவை உறுப்பினர். இத்தனைக்கும் அவரை அண்ணா என்று அழைப்பார் அந்தப் பெண்.

ஆனால், அரசியல்வாதிகள் வழக்கம் போல இதற்கு மற்றவர்கள் மீது பழிபோட்டு தப்பிக்கப் பார்க்கிறார்கள். வயது வந்த பெண்ணிடம் பாலியல் வன்முறை நடத்துவதே மிகவும் மோசமான குற்றம். இந்நிலையில், அப்பாவிச் சிறுமியை மிருகத்தனமாக வேட்டையாடியிருப்பது மிகவும் கொடூரமானது. இப்படி மனிதத்தன்மை இல்லாதவர்கள் இருப்பது ஒரு புறம் இருக்க சில ஆண்களும், வெட்கமில்லாத சில பெண்களும் கூட இச்சம்பவத்தை மூடி மறைக்கப் பார்ப்பது வேதனை.

2013ம் ஆண்டு சுவிட்சர்லாந்தில் உலகின் 140 பத்திரிகையாளர்கள் பங்கேற்ற சர்வதேச நிகழ்ச்சிக்கு சென்றபோது, பல பத்திரிகையாளர்கள் என்னை, இந்தியாவில் ஆண்களுக்கு என்ன ஆயிற்று? பெண்கள் இந்தியாவில் பாதுகாப்பாக இருக்கிறார்களா? என்று கேட்டுத் துளைத்தெடுத்துவிட்டனர்.

இது என் மனத்தைக் குடைந்து கொண்டிருந்தது. நம் பிள்ளைகளைச் சரியாக வளர்க்கத் தவறிவிட்டோமா என்றெல்லாம் யோசனை தோன்றியது.

உண்மையில் உலகில் உள்ள மற்ற பெண்களைப் போலவே இந்தியப் பெண்கள் புத்திசாலிகள், துடிப்பானவர்கள், சக்தி படைத்த சிறப்பானவர்கள் என்பது நமக்குத் தெரியும். இல்லையென்றால், ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பில் தகுதியான பெண்களை நியமித்திருப்பார்களா? பார்ரி ரஸ்ஸின் உள்பட எல்லா ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவர்களையும் பேட்டி கண்டிருக்கிறேன். பாலின வேறுபாட்டை நீக்காமல் எதிர்காலம் இல்லை என்றுதான் கூறியிருக்கிறார்கள். இந்தியாவில் ரோட்டரியில் ஆண் பெண் சம அளவு இருப்பதை நிலைநாட்டுவதற்குப் பாடுபட்டு வருகிறோம். அதிகமான பெண்கள் இருந்தால், அதிக அளவுக்குத் திட்டங்கள் செயல்படுத்தப்படும். இந்தியாவில் திறமை மிக்க பெண்கள் இருக்கிறார்கள். ரோட்டரி சங்கத்தினர்தான் அவர்களை இனம் காண வேண்டும்.

நமது பெண்கள் தங்களது புதல்வர்களை விட புதல்வியரைத் தயார் செய்வதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும். காரணம், மகள் என்பவள் ஆடை அலங்காரம் செய்ய வேண்டியதற்கும் மேலானவள் என்பதை உணரவேண்டும். அவள் கருவிலேயே சிதைக்கப்பட வேண்டியவள் அல்ல. சுமை ஒதுக்கப்பட வேண்டியவள் அல்ல. இல்லாவிட்டால், யாருக்காவது திருமணம் செய்து தள்ளி விட வேண்டிய நபரும் அல்ல.

காலம் மாறிக்கொண்டு வருகிறது. இப்படி பாலியல் வன்முறை நடக்கும்போது இந்தியப் பெண்கள் கொதித்து எழுகிறார்கள். பல ஆண்களும் அதே உணர்வுடன் இருக்கிறார்கள். பாலியல் வன்முறையை அனுமதிக்க மாட்டோம், நீதி வேண்டும் என்று பெண்கள் கூரையிலிருந்து கூக்குரல் எழுப்ப வேண்டும்.

இதற்கெல்லாம் அரசியல்வாதிகளின் வெற்று வாக்குறுதிகளை நம்பியிருக்க வேண்டாம். துர்கையையும், பராசக்தியையும் கடவுளாக வழிபடும் நாம், பெண்களின் சக்தியை கொண்டாடுவோம்.

ரஷீதா பகத்



# நம் அனைவரையும் இணைக்கும் ரோட்டரி மந்திரம்

ரோட்டரி அமைப்பு மிகப் பெரிய அதே சமயம் சிக்கல்கள் நிறைந்தது. உலகம் முழுதும் உள்ள 35,633 ரோட்டரி சங்கங்களில் மொத்தம் 12 லட்சம் பேர் இடம்பெற்றுள்ளனர்.

ரோட்டரி இயக்கத்தின் பல்வேறு திட்டச் செயல்பாடுகளான ரோட்டராக்ட், இன்டராக்ட், இளைஞர் பரிமாற்றம், ரோட்டரி இளம் தலைவர் விருதுகள், ரோட்டரி சமுதாயப் பணிக்குழுக்கள், ரோட்டரி அமைதி மையங்கள் ஆகியவையும்; உள்ளூர் அளவிலும் மற்றும் ரோட்டரி ஃபவுண்டேஷன் ஆதரவிலும் தேசிய, மாவட்ட உள்ளூர் அளவில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் ஆகிய ஏராளமான ரோட்டரி திட்டங்களில் பல்லாயிரக் கணக்கானோர் ஈடுபட்டு வருகின்றனர். ஒவ்வோர் ஆண்டும் ரோட்டரியின் பெயர் எண்ணற்ற திட்டங்களுடன் தொடர்புள்ளதாக இருக்கிறது. ரத்த வங்கிகள் முதல் உணவு வங்கிகள், பள்ளிகளில் சுகாதாரப் பராமரிப்பு முதல் இளம்பிள்ளை வாதம் ஒழிப்பு வரையில் ரோட்டரியின் பங்கு இல்லாத இடமேயில்லை.

ஒவ்வொரு ரோட்டரி சங்கத்துக்கும் தனித்தனியான வரலாறு உண்டு, முக்கியத்துவம் உண்டு. அதன் தொடர்ச்சியாக ரோட்டரி சங்கத்தினரின் தனித்தன்மை, ஒவ்வொரு ரோட்டரி உறுப்பினரின் நோக்கம் பயன்பாடு, அவரது சேவையில் வெளிப்படுகிறது. ஒவ்வொரு ரோட்டரி உறுப்பினரும் ஒவ்வொரு ரோட்டரி சங்கமும் தங்களுக்குப் பொருந்தும் வகையிலான சிறந்த வகையில் பணியாற்ற வகை செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பன்முகத்தன்மை நம்மை வலிவுடையவராக மாற்றுகிறது. அதே சமயம் நமது அமைப்பின் தனித்தன்மைக்கு ஒரு சவாலாகவும் அமைகிறது. ரோட்டரி சங்கம் என்ன செய்கிறது, எப்படி அமைப்பு ரீதியில் செயல்படுகிறது, என்பது குறித்த ரோட்டரி அமைப்புக்கென சில யோசனைகள் உள்ளன என்பதை அறிந்த பலருக்கு இது வியப்பாக இல்லை. ரோட்டரி அமைப்புக்குள்ளேயும் பல உறுப்பினர்கள் நமது மிகப் பெரிய அமைப்பு, குறிக்கோள், வாய்ப்பு, திட்டங்களின் பரப்பு ஆகியவை குறித்து முழுமையான புரிதல் பல உறுப்பினர்களுக்கு இல்லை.

இத்தகைய விவகாரங்களை ஆராய்ந்து தீர்வு காண்பதற்கும் நமது தோற்றம், தனித்தன்மை ஆகியவற்றை வலுப்படுத்துவதற்கான கருவிகளை வடிவமைக்கவும் பல ஆண்டுகளுக்கு முன் ரோட்டரி சங்கம் முழுவதிலும் மிகவும் முக்கியமான முயற்சிகள் எடுக்கப்பட்டன. இன்று, பொது மக்களிடையிலே நமது பிம்பத்தைப் பரப்புவதற்காக அந்தக் கருவிகளைப் பயன்படுத்துகிறோம்.

கடந்த ஜூன் மாதம், உங்களது RI இயக்குநர்கள் குழு புதிய தொலைநோக்கு அறிக்கையை ஏற்றது. அது நமது தனித்தன்மையையும் பலதரப்பட்ட பணிகளை ஒன்றிணைக்கும் ஒற்றை நோக்கத்தையும் பிரதிபலிப்பதாக அமைந்தது. அது :

‘உலகம் முழுவதும், நமது சமுதாயத்தில், நமக்குள்ளேயும் நிரந்தரமான மாற்றத்தை உருவாக்க, நாம் ஒன்றிணைந்து மக்களுடன் இணைந்து நிற்கும், செயல்படும் உலகத்தைப் பார்க்கிறோம்.’

‘மாற்றத்தை உருவாக்கும் ரோட்டரி’ (Rotary: Making a Difference) என்ற லட்சியத்தின் மூலம் ரோட்டரி மூலம் இணைந்து சேவை புரிவதற்காக, செயல்படுவதற்காக இங்கே கூடியிருக்கிறோம்.



இயான் H.S. ரிஸ்லி,
தலைவர், ரோட்டரி இண்டர்நேஷனல்



# இளைஞர்களின் சக்தி

அன்புள்ள ரோட்டரி உறுப்பினர்களே,

உலகத்துக்கு பொதுவான சொத்தாக இருப்பது இளைஞர்களின் சக்திதான். இளைஞர்கள் நமது கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகும். நமது இளைஞர்களுக்கு இருக்கும் ஆற்றல், கொள்கை, உற்சாகம், வீரம் ஆகியவற்றுக்கு வேறு எந்த வயதினருக்கும் இணையாக மாட்டார்கள் என்றார் நோபல் பரிசு பெற்ற கைலாஷ் சத்யார்த்தி.

இந்த ஆண்டு ரோட்டராக்ட் சங்கம் தொடங்கி ஐம்பது ஆண்டுகள் நிறைவடைகின்றன. அது 1968ம் ஆண்டு மார்ச் 13 ஆம் தேதி தொடங்கப்பட்டது. அதன் தொடக்க வரலாறு இன்னும் பின்னால் போகிறது. RI அமைப்பை உருவாக்கிய பால் ஹாரிஸ் 1935ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியாவில் ரோட்டரி கொள்கையின் அடிப்படையில் இளைஞர் அமைப்புடன் பணியாற்றி வந்தார். 1950ஆம் ஆண்டுகளில் ரோட்டரி சங்கங்களின் ஆதரவில் பல இளைஞர் அமைப்புகள் பல்வேறு பெயர்களில் இயங்கத் தொடங்கின. அவற்றில் ஐரோப்பாவில் இயங்கிய 'பால் ஹாரிஸ் மையங்கள்', சில அமெரிக்க பல்கலைக்கழகங்களில் ரோட்டர்ஸ் சங்கங்கள் உருவாக்கப்பட்டன. இந்த அமைப்புகள் 1965ம் ஆண்டில் குறிப்பிடத் தக்க வளர்ச்சி யைப் பெற்றன. இத்தகைய அமைப்புகளைச் சேர்ந்த பலர் வயது வரம்பைக் கடந்த பிறகு 'மூத்த இன்டராக்டர்கள்' (Senior Interact) என்ற பெயரில் புதிய சங்கங்களை உருவாக்கினர்.

அதையடுத்து புதிய திட்டமாக ரோட்டராக்ட் என்ற அமைப்பை RI உருவாக்கியது. தலைமைப் பண்புகளை வளர்த்துக் கொள்வதற்கும் சமுதாயத்திற்குச் சேவை புரிவதற்கான அர்ப்பணிப்பு உணர்வுக்கும் அவர்களே பொறுப்பேற்கும் வகையில் ரோட்டரி அமைப்பு இளைஞர்களுக்கு ஊக்கம் அளிக்கிறது. நேர்மறையான தலைமைப் பண்புக்கான வாய்ப்புகள் இளைஞர்களிடையில் பொறுப்புள்ள மாற்றம் ஏற்படுவதற்குத் துணை புரிகின்றன. அத்துடன் சமூக மேம்பாடு, உணர்வு சார்ந்த நலன்கள் ஆகியவற்றுக்கும் உதவுகின்றன.

ரோட்டராக்ட் உறுப்பினர்கள் ரோட்டரி குடும்பத்தில் முக்கியமான உறுப்பினர்கள் ஆவர். ரொட்டேரியன்களுடன் இணைந்து சேவையில் பங்குதாரர்களாக பணியாற்றுகிறார்கள். தலைமைப் பண்பு குறித்து இளைஞர்களுக்கு விளக்குவது அவ்வளவு எளிதானதல்ல. அதைக் கற்றுக் கொள்வதற்கு நுட்பமான விஷயங்கள் இருக்கின்றன. எனவே, நமது இன்டராக்ட் மற்றும் ரொட்டராக்ட் அமைப்புகள் இளைஞர்களிடையே தலைமைப் பண்புகளை மேம்படுத்துவதும் மிக முக்கியம்.

இளைஞர்களை ஊக்கப்படுத்துவதன் மூலமும் சமுதாய நலனுக்காக கவனம் செலுத்துவதற்கும் இந்த ஆண்டைக் கொண்டாடலாம். ரோட்டராக்டின் பொன்விழாவைக் கொண்டாடும் வகையில் சங்கங்கள் இணைந்து திட்டமிட்டு, திட்டங்களை செயல்படுத்தலாம்.

உங்களது சங்கங்களுக்கு ரோட்டராக்ட் சங்கத்தில் இருந்த முன்னாள் உறுப்பினர்களை அழைப்பதற்கு இதுவே சரியான தருணம். அப்படிச் செய்து உங்களது உறுப்பினர் அடித்தளத்தை வலுப்படுத்திக் கொள்ளலாம். உலகை மாற்றும் பணியில் இளைஞர்களின் சக்தி மகத்தானது என்று ரோட்டரி நம்புகிறது. இளைஞர்களின் திறமை, ஆற்றலைக் கொண்டு ரோட்டரி சங்கம் ஓர் அர்த்தமுள்ளதாகவும் வலிமையுள்ளதாகவும் உருவாகும்.



C. பாஸ்கர்,
இயக்குனர், ரோட்டரி இண்டர்நேஷனல்.



# ரோட்டராக்ட்டர்களை ரோட்டரியில் சேர அழையுங்கள்

உலகின் மொத்த மக்கள் தொகையில் 50 சதவீதம் பேர் 30 வயதுக்கு உட்பட்டவர்கள். எனவே, நாம், இளைஞர்கள் என்ன விரும்புகிறார்கள்? என்று தெரிந்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. ரோட்டரி அமைப்புக்கு இது இன்று மிக முக்கியமான கேள்வியாகும். காரணம், சமூகத்திற்கு சிறந்த சேவையை ஆற்ற வேண்டுமானால், நமது ரோட்டரி சங்கங்கள் அதற்கேற்ப மாறிக் கொண்டே இருக்க வேண்டும்.

உலக பொருளாதாரப் பேரவை (World Economic Forum) அண்மையில் நடத்திய ஆய்வில் 186 நாடுகளில் முப்பது வயதுக்கு உள்பட்ட 30,000க்கும் மேற்பட்டோர் சிறந்த பயனுள்ள நுண்ணறிவு படைத்தவர்களாக இருப்பது தெரியவந்துள்ளது. அப்படி புள்ளி விவரங்களைத் திரட்டும்போது, அந்த இளைஞர்களில் பெரும்பாலனோர் பருவநிலை மாற்றம், அதனால் ஏற்படும் சிக்கல்கள் ஆகியவையே நாம் சந்திக்கும் மிகவும் முக்கியமான பிரச்சி னைக்குரிய விஷயங்கள் என்று குறிப்பிட்டுள்ளனர். இளைஞர்களுக்கு அதிகாரமளிக்கும் திட்டத்தில் சூழல் காப்புத் தொடக்கம் மற்றும் தொழில்முனைவுத் திறன் ஆகியவை மிக முக்கியமானவை ஆகும். ஆனால், தங்களது குரல் எங்கே எடுபடுமோ என்ற கவலையில் அவர்கள் இருக்கிறார்கள்.

சில நல்ல செய்திகளும் எனக்கு வந்தன. 12 நாடுகளில் நான் இந்த ஆண்டு மேற்கொண்ட பயணங்களின்போது, பல ரோட்டராக்ட் அமைப்பின் இளைஞர்கள் தங்களது கோரிக்கைக் குரல்களை ரோட்டரி தலைவர்கள் கேட்கிறார்கள் என்று திருப்தி தெரிவித்தனர்

ஒரு திட்டத்தைத் தாங்கள் மேற்கொள்ளும்போது, நல்ல முடிவுகள் வரவேண்டும் என்பதற்காக இளைஞர்கள் உறுதியுடன் அர்ப்பணிப்புடன் செயல்படுகிறார்கள்.

அமெரிக்கா, நியூஜெர்சி நகரில் இயங்கும் பிராஞ்ச்பெர்க் டவுன்ஷிப் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர்களான துளசியும் அவரது மகன் அனில் மகராஜன் ஆகியோர் சிறந்த உதாரணம். TRF நிதியுதவியில் அவர்கள் இருவரும் நேபாளத்தில் 2015ம் ஆண்டு ஏற்பட்ட நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உதவும் வகையில் சிறு கடனுதவிகள், மாணவர்க்கான உதவித் தொகைகள், வீடுகள் கட்டித் தரும் திட்டங்கள் ஆகிய பணிகளைச் செயல்படுதுகிறார்கள்.

ரோட்டரி சங்கங்களும் அந்நாட்டு சட்ட மேலவையும் இந்த மாற்றத்தை 2016ம் ஆண்டு ஏற்படுத்தின. இதனால், அவர்கள் தங்களது சுமுகமான வாழ்க்கையை எளிதாகத் தொடங்கிவிட்டனர்.

மேலும், ரோட்டரி சங்கத்தினர் தற்போது உள்ள வாய்ப்பு வசதிகளைச் சரியாகப் பயன்படுத் திக் கொண்டு, ரோட்டராக்டர்களை மிகவும் ஊக்கப்படுத்த வேண்டும் என்று நாங்கள் உங்களைத் தனிப்பட்ட முறையில் கேட்டுக் கொள்கிறேன். இதன் மூலம் அவர்கள் TRF குறித்து அறிந்து செயல்பட உதவும்.

இதை இன்றே செயல்படுத்துவதன் மூலம் உலகம் முழுதும் மேலும் 2,00,000 ரோட்டரி எதிர்காலத் தலைவர்கள் உருவாக வழியமைப்போம்.



பால் ஏ நெட்ஸெல்
ரோட்டரி அறக்கட்டளை அறங்காவலர் தலைவர்

இளைஞர்களை ரோட்டரி பணிகளில் எப்படி பயன்படுத்திக் கொள்ளலாம்? குறித்து உங்களது சிந்தனைகளை அறிய விரும்புகிறேன். தொடர்புக்கு மின்னஞ்சல்: paul.netzel@rotary.org




# A PART OF HISTORY

The german kitchen.
Since 1898.

Head Office and Showroom:
A- 248, Mahipalpur Extension, NH-8,
Delhi-Gurgaon Road, New Delhi-110037,
[T] +91-11-46102000 [E] info@hacker-kitchens.com

**häcker**
kitchen.germanMade.

www.haecker-india.com
www.haecker-kuechen.com

| AHMEDABAD | BANGALURU | CHENNAI | COIMBATORE | DELHI |
|---|---|---|---|---|
| 9879538977 | 9740999350 | 9442081111 | 9500210555 | 9313134488 |

| HYDERABAD | INDORE | JAIPUR | KOCHI | LUDHIANA | MUMBAI | MANGALURU | THRISSUR |
|---|---|---|---|---|---|---|---|
| 9700058285 | 9425803599 | 9414058718 | 9895058285 | 9815048222 | 9322987229 | 7899119955 | 7025991000 |

# பள்ளிக் குழந்தைகள் இனி தரையில் உட்காரப் போவதில்லை

ரஷீதா பகத்

இது டெல்லியோ, மும்பையோ அல்லது சென்னையோ அல்ல, ஒரு பின்தங்கிய மாநிலமான மத்திய பிரதேசத்தில் ஏறக்குறைய 20,000 மக்கள்தொகை இருக்கிற ஒரு சாதாரண சிறுநகரம் தான் சோன்கட்ச். இது வெறும் தாலுகா மட்டுமே, ஒரு மாவட்டத் தலைநகர் கூட இல்லை. வெறும் 40 உறுப்பினர்களே உள்ள, ரொம்ப சிறிய ஆனால் துடிப்பான சோன்கட்ச் ரோட்டரி சங்கம் (D 3040), இந்தப் பகுதிகளில் பிரம்மிப்பூட்டும் விதமாக 1,000 பள்ளிகளுக்கு, பள்ளி சாமான்களான-டெஸ்க் மற்றும் பெஞ்சுகளை வழங்கியுள்ளது. ஒட்டுமொத்த டெஸ்க் மற்றும் பெஞ்சுகளுக்கான தொகை-ரூ.3 கோடி!

“இந்த பகுதியிலும் இதைச் சுற்றியுள்ள இடங்களிலும் உள்ள எந்த பள்ளிக்குச் சென்றாலும், ரோட்டரியால் வழங்கப்பட்ட டெஸ்க் மற்றும் பெஞ்சுகளை பார்க்க வாய்ப்பிருக்கும்,” என்கிறார் இந்த சங்கத்தின் உறுப்பினர் PDG S N லத்தி.

ஏறக்குறைய இந்தூரிலிருந்து 75 கிமீ தூரத்திலுள்ள இந்த சின்ன இடத்தில், அவரும் டாக்டர் ஜாமின் ஹுசைனும் சேர்ந்து ஒரு நெகிழ்வான வரவேற்பை எனக்குத் தந்தனர், பள்ளியின் டெஸ்க் மற்றும்



பெஞ்சுகளைப் பார்வையிட நாங்கள் கிளம்பினோம். சோன்கட்ச்சில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளி தான் நாங்கள் பார்வையிட்ட முதல் இடம், இங்கே 1,000-க்கு அதிகமான மாணவ மாணவிகள் படிக்கிறார்கள்.

அந்த குழந்தைகள் ரொட்டேரியன்களை உடனே அடையாளம் கண்டுகொண்டு எங்களை வாய்நிறைய சிரிப்புடன் வரவேற்றனர். அங்கு நான் 7 மற்றும் 8ம் வகுப்பு படிக்கும் மாணவ மாணவிகளுடன் பேசினேன், அவர்களுடைய கனவுகள் இந்தியாவில் எந்த இடத்திலும் இருக்கும், இதே வயதுள்ள குழந்தைகளுக்கு இருப்பது போலத்தான் இருக்கிறது... அவர்கள் ஆசிரியராக, டாக்டராக, இஞ்சினீராக வரவேண்டும் என்றே விரும்புகின்றனர். வித்தியாசமாக ஒரு மாணவி ஃபாஜி (இராணுவ வீரர்) ஆகவும், மற்றொரு மாணவி






*ஜெர்மனி D 1880வின் ரோட்டரியினர் DG ஜமீன் ஹீசைனுடன் சாயன்மைனா கிராமத்தில் கழிவறை கட்டடம் அடிக்கல் நாட்டு விழாவில்.*

பைலட்டாகவும் விரும்புகிறாள், இப்படி பல விருப்பங்கள்.

“6ம் வகுப்பு முதல் 11ம் வகுப்பு வரை நான் இந்த பள்ளியில் படித்தேன். அந்த நாட்களில் பெரிய அலுவலர்கள், அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள் மற்றும் சாமானியர் குழந்தைகள் என அனைவரும் அரசு பள்ளிகளில் தான் படித்தனர். சிறந்த கல்வி கிடைத்தது என்பதை கண்டிப்பாகச் சொல்லியாக வேண்டும்.” என்றார் டாக்டர் ஹீசைன் பெருமையாக. அவர் மருத்துவராக இருப்பதே அதற்குப் போதுமான சாட்சியாக இருக்கிறது.

முன்னாள் சங்கத் தலைவர் சௌபாக் சிங் தாகூர், ஒரு குறிப்பிட்ட பள்ளியில் நிகழ்ந்த ஒரு நெகிழவைக்கும் கதையை நினைவுபடுத்தினார், “ஆரம்பத்தில் எல்லா குழந்தைகளுக்கும் இந்த பெஞ்சுகள் போதவில்லை. அதனால், பெஞ்சில் உட்கார வேண்டுமென்றால் குழந்தைகள் காலை 7.30 மணிக்கு ஆரம்பிக்கும் பள்ளிக்கு, 6.30 மணிக்கெல்லாம் சீக்கிரமாக வர ஆரம்பித்தனர்!”

2012-13 காலக்கட்டத்தில் இந்த டெஸ்க் மற்றும் பெஞ்சு

கொடுக்கப்பட்டது. இந்த ரோட்டரி திட்டம் என்ன மாற்றத்தை ஏற்படுத்தியது என்று வகுப்பாசிரியர் மகேஷ் சமாரியாவிடம் கேட்டேன். “ரொம்ப பெரிய மாற்றம்” என்றார் அவர். “முன்பு தரையில் உட்கார்ந்து குறிப்புகள் எடுக்க இந்தக் குழந்தைகளுக்கு கஷ்டமாக இருந்தது. இப்போது அவர்கள் சோர்வை உணரவில்லை, ரொம்ப சௌகரியமாக இருக்கிறார்கள்.”

நிறைய பள்ளிகளில், ரொட்டேரியன்கள் தண்ணீர்த் தொட்டிகளையும் கட்டியுள்ளனர், அத்துடன் நான் ஒரு பள்ளியில் பார்த்தேன், 2002ல் கட்டியிருந்தாலும் கூட கிட்டத்தட்ட புதிது போலவே தெரிந்தது.

ரோட்டரியிலிருந்து அவர்கள் இன்னும் என்ன எதிர்பார்கிறார்கள்? ஆசிரியரிடமிருந்து தட்டிக்கொடுப்பது போல் பதில் வருகிறது “ஒரு வாட்டர் கூலர் வேண்டும், போர்வெல், ஒரு தண்ணீர்த்தொட்டி மற்றும் நல்ல தண்ணீர் வசதியும் இருக்கிறது, ஆனால் கோடைகாலத்தில் தண்ணீர் ரொம்ப சூடாக இருக்கிறது. வாட்டர் கூலர் இந்த குழந்தைகளுக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கும்.”

அடுத்த பள்ளியிலும் அதேதான், இது பெண்களுக்கான பள்ளி, இங்கேயும் வாட்டர் கூலருக்கான அதே கோரிக்கை வந்தது. 800 மாணவிகள் இருக்கும் இந்தப் பள்ளியில் ரொட்டேரியன்கள், சானிடரி நாப்கின்களை வழங்கினர், மேலும் ஒரு சானிடரி பேடை ரூ.5க்கு வழங்கும் இயந்திரத்தை

## மின்சாரமில்லாமல் ஒரு பள்ளி

இந்தூரிலிருந்து 100 கிமீ தூரமுள்ள சாயான்மைனா கிராமத்தின் அரசு நடுநிலைப் பள்ளியில் மின்சாரமே இல்லையென்று தெரிந்தபோது வேதனையடைந்தேன். ஆசிரியர் நந்தலால் ரத்தோர், கம்ப்யூட்டரைப் பெற RC சோன்கட்ச் ரொட்டேரியன்களிடம் கேட்க விரும்புவதாகச் சொன்னார். ‘எங்களது கோரிக்கையை அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என உறுதியாக இருக்கிறேன், ஆனால் மின்சார இணைப்பு இல்லாததால் இன்டர்நெட்டை பயன்படுத்த முடியாது. என்னிடம் லேப்டாப் இருப்பதால் வீட்டிலேயே சார்ஜ் போட்டு, இன்டெர்நெட்டில் இருக்கும் அற்புதமான விஷயங்களின் செய்திகளை மாணவர்களுக்குத் தருகிறேன்.‘

இந்தப் பள்ளியில் மின்சாரம் இல்லையென்பது வேதனையாக இருந்தாலும், இந்த கிராமத்தை ரோட்டரி தத்தெடுத்து ஒவ்வொரு வீட்டிலும் கழிவறையைக் கட்டியுள்ளது. குழந்தைகளிடம் உங்களின் வீடுகளில் மின்சாரம் இருக்கிறதா என்ற கேள்விக்கு, ஆமாம் என்று தலையாட்டுகிறார்கள். இது ரொம்ப புதிதாக இருக்கிறது; கிராமத்தில் இருக்கிற எல்லா வீடுகளில் மின்சாரம் இருக்கிறது. ஆனால் ஒரு அரசுப்பள்ளியில் ஏன் இல்லை? PDG லத்தி பதிலளிக்கையில், “பில் கா சக்கர் ஹை....யார் மின்கட்டணம் கட்டுவது.” RC சோன்கட்ச் ஏன் இதைச் செய்யவில்லை என்ற என்னுடைய கேள்விக்கு, பல ரோட்டரி சங்கங்கள் இந்த மாவட்டத்தில் பல பள்ளிகளுக்கு மின்கட்டணங்களைச் செலுத்துகின்றன என்கிறார் DG ஜாமீன் ஹுசைன், இந்த சங்கத்தின் உறுப்பினர். “இந்தப் பள்ளி 60லிருந்து 70 சதவீதம் தேர்ச்சி பெற்றால் எங்கள் சங்கம் ஒரு ஊக்குவிப்பாக இதைச் செய்ய நினைக்கிறோம்,” என அவர் ஒப்புக்கொள்கிறார்.

“எங்கள் மாவட்டத்தில் நிறைய பள்ளிகளுக்கு மின் இணைப்பு இல்லாமல் இருக்கிறது. எனக்கு நன்கொடை யாளர்களைத் தெரியும், அவர்களிடம் கேட்டுப்பார்க்கிறேன், ஒருவேளை அவர்கள் மின்கட்டணங்களைச் செலுத்தலாம். ஒவ்வொரு பள்ளிக்கும், ரூ.500 மின்கட்டணமாக வரும்.”

வகுப்பறைகளில் மின்விசிறியிருந்தும், மின் இணைப்பு இல்லாதால், கோடைகாலத்தில் குழந்தைகள் அறையில் எப்படி உட்கார்ந்திருக்கிறார்கள், என்று கேட்டேன். ‘பாடம் படிக்கும்போது நாங்கள் வெளியே போய் உட்கார்ந்து கொள்வோம்’ என்று 8ம் வகுப்பு மாணவி துர்கா சொல்கிறார். ரோட்டரி, பள்ளிக்கு “பெஞ்சு டெஸ்க்சு கொடுத்தாலும் மறுபடியும் தரைக்குத் தான் செல்கின்றனர்! என்ன ஒரு பரிதாபம்!



*RCC உறுப்பினர் மற்றும் சங்கத்தின் ஆஸ்தான புகைப்பட கலைஞர் தினேஷ்ராதோர் ரோட்டரி கழிவறை முன்.*

வைத்துள்ளதாக DG ஹுசைன் கூறுகிறார். பயன்படுத்திய நாப்கின் சுகாதாரமாக அகற்றுவதற்கு எரிஉலைகளும் வழங்கப்பட்டுள்ளது.

ஒரு வகுப்பாசிரியரான அனில் திவாரியிடமிருந்து கற்றுக்கொள்வது அருமையானது, பின்தங்கிய குடும்பத்திலிருந்து இந்த மாணவிகள் வந்தாலும், இவர்களில் நிறைய பேர் உயர்கல்விக்குச் செல்கிறார்கள். “அவர்கள் கடுமையாக படிகிறார்கள், மேல்நிலைத் தேர்வுகளில் 70லிருந்து 80 சதவீதம் தேர்ச்சி பெறுகிறோம். இந்த பிரிவிலிருந்து, 60சதவீதம் பேர் கல்லூரிக்குச் செல்கிறார்கள், இது சிறுநகரப் பகுதி மற்றும் அவர்களின் பெற்றோர் அவசரப்படுத்துவதால், 40 சதவீதம் பேர் கல்யாணம் செய்துகொள்கின்றனர்.” ஒரு மாணவர் ஐஐடி காரக்பூரில் படித்து வருடம் 15 இலட்ச ரூபாயில்



Dinesh Rathore

Rtn *தாவே டி்ஃபென்ட்ஸ்* (RC *க்ளீவ் லேண்ட்,* USA) *சாயன்மைனாவில் ரோட்டரியின் கம்ப்யூட்டர் பயிற்சிக்கூடத்தை பார்வையிடுகிறார்.*

வேலை கிடைத்ததை அவர் பெருமையுடன் சொல்கிறார்.

மற்ற இடங்களுக்குச் செல்லும்போது, ஒரு சுவரொட்டி கண்ணில் பட்டது: பேட்டி ஹை தோ கல் ஹை. (இன்றைய சிறுமிகளே நாளைய எதிர்காலம்) இதை யாராவது மறுக்கமுடியுமா?

இந்தியாவின் ஒரு சிறுநகர் பகுதியில் ரொம்ப நாட்களுக்கு முன்னால் TRF பயன்படுத்தத் தொடங்கிய நீடித்திருக்கும் மந்திரத்தை, நிதிச் சிக்கனமாக மட்டு மல்லாமல் ஒரு நீடித்து நிற்கக்கூடிய திட்டமாகவும் செய்வதற்கு 40 உறுப்பினர் கள் உள்ள ஒரு சிறிய சங்கத்திற்குப் பின்னால் உள்ள இரகசியம் என்ன என்று DG ஹுசைனைக் கேட்டேன். “மேடம் இது ரொம்ப சாதாரணம்,” என பதிலளிக்கிறார். “முதலில் சங்கத்தில் எவ்விதமான அரசியலும் இல்லை. எப் போதும் திட்டங்களைப் பற்றி எங்களுடைய பார்ட்னர்களுக்கு முழுத் தகவலையும், அவர் களுடைய பணம் எப்படி செலவழிக்கப்பட்டது என்பதையும் பற்றிய தெளிவான கணக்குகளுடன் சொல்லிவிடுவோம். அவர்களுடைய பணத்தை எப்படி நியாயமாக பயன் படுத்தியுள்ளோம் என்பதைக் காட்டுவோம். பொதுவாக, டெஸ்க் மற்றும் பெஞ்சு வழங்கிய பள்ளிகளின் பட்டியலை அவர்களுக்கு அடிக்கடி அனுப்பி, எந்த பள்ளியைப் பார்வையிட விரும்புகிறீர்கள் என்பதை அவர்களிடமே கேட்போம், அதனால் இது வெளிப்படையானது.”

இந்தச் சங்கம், நிறைய TRF மானியத் திட்டங்களை செயல்படுத்தியுள்ளது, இப்போது உலகளவிலான மானியத் திட்டத்தை செயல் படுத்திக் கொண்டுள்ளது. 1988ம் ஆண்டில் சங்கத்தில் சேர்ந்து, தொடர்ச்சியாக இரு ஆண்டுகளுக்கு அதன் தலைவராக இருந்தார் (1998-2000).

இது பொதுவான வழக்கமில்லையே, இது அனுமதிக்கப்படுகிறதா? “பொதுவாக இது அனுமதிக்கப்படாது, ஆனால் அந்த வருடம் இது அனுமதிக்கப்பட்டது, நிறைய திட்டங்களைத் தொடங்கிய நானும், சங்க உறுப்பினர்களும் நான் தொடர்ந்து இருக்க வேண்டும் என வலியுறுத்தினர்.”

டெஸ்க், பெஞ்சு திட்டங்களை எப்படி தொடங்கினீர்கள் என்றதற்கு, “20 வருடங்களுக்கு முன்பாக, அரசுப் பள்ளிகளில் போதுமான அளவு டெஸ்க் மற்றும் பெஞ்சுகள் இல்லை, குழந்தைகள் தரையில் உட்கார்வதன் காரணமாக இரண்டு முக்கிய உடல் பிரச்சனைகளை சந்திக்கிறார்கள் என்பதால் அதை அவர்களுக்கு வழங்க எங்கள் சங்கம் முடிவெடுத்தது. எழுதும் போது குனிந்து நிமிருவதால் அவர்களின் முதுகெலும்பும் வளைகிறது; கண்ணிற்கும் புத்தகத்திற்கும் இடையே உள்ள தூரம் கண்டிப்பாக 25 செமீ இருக்கவேண்டும். இதைக் கடைப்பிடிக்கவில்லை என்றால் அவர்களின் கண்களுக்கு அதிக அழுத்தம் ஏற்பட்டு பார்வை பாதிக்கப்படும்.”

ஏன் ரோட்டரி சங்கம், வெல்ட் செய்யப்பட்டு ஒன்றாக இணைக்கப்பட்டிருக்கும்



*DG ஜமீன் ஹுசைன் தன் மனைவி ரஷிதா மற்றும் PDG S N லாதி மற்றும் இதர ரோட்டரியினருடன் ஒரு பள்ளியில்.*

இரும்பிற்குப் பதிலாக, மரத்தால் அல்லது வேறொரு பொருளால் செய்யப்பட்ட பெஞ்சுகள் மற்றும் டெஸ்குகளை கொடுப்பதில்லை என்ற கேள்விக்கு, நீடித்து உழைக்கும் தன்மைக்காக என்றார். ஒவ்வொரு செட்டும் ரூ.2,000 மதிப்புள்ளது; “ஒரு நல்ல விற்பனையாளர் எங்களுக்குக் கிடைத்தார், தொடர்ந்து இதே விலையில் வாங்க அவரிடம் கடுமையாக பேரம் பேசினோம், பிறகு ஒப்புக்கொண்டார், ஏனென்றால் இது அரசுப்பள்ளிக் குழந்தைகளுக்கு என்று அவருக்குத் தெரியும்.”

அத்துடன் பெஞ்சுகளை டெஸ்க்களுடன் வெல்டு அடிப்பதும் நல்லது தான்; “இதை ஒன்றாக இணைத்துச் செய்ததற்கான காரணம் என்னவென்றால் அடிக்கடி பள்ளி அல்லது அரசு நிகழ்ச்சிகளுக்குக் கூட பெஞ்சுகள் அல்லது சேர்களை வெளியே எடுத்துச் செல்கின்றனர், அது திரும்ப வருமா அல்லது வராதா என்று யாருக்குத் தெரியும்! இந்த அமைப்பு பெரியதாக இருப்பதால் யாரும் இதை எடுக்க மாட்டார்கள்! மேலும் இது அசைக்க அல்லது தள்ளவோ குழந்தைகளுக்கு ரொம்ப கனமாக இருக்கும்.”

வெல்டிங் சொர சொரப்பு இல்லாமல் அடிக்கப்பட்டுள்ளதையும், சொரசொரப்பான ஓரங்கள் அல்லது கூரான முனைப்பகுதிகள் இல்லாதிருப்பதையும் உறுதிசெய்வதில் கவனம் செலுத்துகிறேன், ஏனென்றால் இது குழந்தைகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தலாம். ஒரு பள்ளியில், பெஞ்சுகளில் 1999-2000 என்று இருந்ததைப் பார்த்தேன், அவை நல்ல வடிவில் இருந்தது; அதிலிருந்த எழுத்துக்கள் அழியாமல் இருந்தது, இந்தத் திட்டம் TRF மானியத்திலிருந்து RC கிளீவ்லாண்ட், D 6630, அமெரிக்கா; RC மிலானோ, D 2040, இத்தாலி; மற்றும் RC சோன்கட்ச், D 3040 உடன் இணைந்து முடிக்கப்பட்டது என்று இருந்தது.

தங்களுடைய சங்கம் துவக்கத்தில் ரொம்ப சிறிய திட்டங்களை செய்தோம், ஒரு இரண்டு வருடங்களுக்கு TRF-இலிருந்து கிடைக்கும் பொருத்தமான மானியங்களைப் பற்றி எங்களுக்குத் தெரியாது” என்று கவர்னர் விளக்குகிறார். “பால்வாடியில் நாங்கள் கொடுத்த டெஸ்க் மற்றும் பெஞ்சுகளுக்கு 1978 ஆம் ஆண்டில் எங்களது முதல் மானியத்தைப் பெற்றோம்.”

1998 ஆண்டு முதல் திட்டம் வேகம் எடுத்தது. இப்போது வரை இந்த ரொட்டேரியன்கள் பலவிதமான மானியங்களுடன் 1,000 பள்ளிகள் வரை திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளனர், இந்தத் திட்டத்தின் மொத்தத் தொகை ரூ.3 கோடியைத் தாண்டியுள்ளது. மேலும் ஹுசைன் சொல்கிறார், ‘நாங்கள் 20 மானியங்களுக்கு மேல் முடித்துள்ளோம், மேலும் தற்சமயம் உலக அளவில் ரூ 40 இலட்ச மானியத்தில் திட்டம் நடந்துகொண்டிருக்கிறது. சுவாரஸ்யமாக, ரொட்டேரியன்கள் கடுமையாக செயல்பட்டு வருகின்றனர். ‘சோன்கட்ச் பகுதியில் திட்டம் முழுவதுமாக முடிக்கப்பட்டுள்ளது, இப்போது மத்திய பிரதேசத்தில் உள்ள மற்ற பள்ளிகளுக்கு டெஸ்க், பெஞ்சுகளை பிற ரோட்டரி சங்கங்கள் மூலம் வழங்கிக் கொண்டிருக்கின்றோம். இது எங்களின் முக்கியத் திட்டம், இந்த பகுதியின் ரோட்டரியானது பள்ளிகளில் டெஸ்க் மற்றும் பெஞ்சுகள் வழங்கியதற்காகப் பிரபலமாக உள்ளது.”

மேலும் அவர் சொல்கிறார், D3040-ல் உள்ள ஏதேனும் ஒரு சங்கம் ஒரு பள்ளிக்குச் டெஸ்க் மற்றும் பெஞ்சு வழங்க விரும்பினால், “ரூ 25,000 மட்டும் TRFக்கு வழங்குமாறு சொல்லிவிட்டு அந்த பள்ளிக்கு இலவசமாக டெஸ்க் மற்றும் பெஞ்சுகளை வழங்குவோம்.”

இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படுவதற்கும் இதற்கு ஆதரவு வழங்கப்படுவதற்கும் மற்றொரு காரணம், “எங்களுடைய பார்ட்னர்கள் எங்கள் மீது நிறைய நம்பிக்கை வைத்துள்ளனர், ஏனென்றால் இந்த திட்டச் செயல் பாட்டைப் பற்றிய தகவல்களையும் கணக்குகளையும், மற்றும் பணம் எப்படிச் செலவழிக்கப்படுகிறது என்பதையும் தொடர்ந்து அவர்களுடன் பகிர்ந்து கொள்கிறோம். எங்களுடைய பார்ட்னர்கள் இத்தாலி, அமெரிக்கா, அல்லது ஜெர்மனி போன்ற எந்த நாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்களிடம் வெளிப்படைத் தன்மை, பொறுப்புணர்வு மற்றும் நம்பகத்தன்மையும் இருக்கிறது-ஜெர்மனியின் நர்ன்பர்க்-ரெயிஸ்வால்ட், ரோட்டரி கிளப்பைச் சேர்ந்த, தற்போதைய RI இயக்குனர் பீட்டர் இப்ளேர் ஒரு திட்டத்தைப் பார்வையிட்டுள்ளார்- அவர்கள் மூலம் இந்த திட்டத்தை தொடங்க வைத்து, மலர்மாலை, ரோஜா இதழ்கள், டிரம்ஸ் போன்றவைளுடன் பெரும் வரவேற்பை அளிக்கிறோம். என்ன நடந்திருக்கிறது என்பதைப் பார்த்து அவர்கள் தங்களுடைய பார்ட்னர்களுக்குத் தெரிவிக்கிறார்கள்,” என்றார் DG.

ஒருமுறை இத்தாலியிலிருந்து ஒரு ரொட்டேரியன் தங்களுடைய டெஸ்க் மற்றும் பெஞ்சு திட்டத்தைப் பார்வையிட வந்தபோது நடந்ததை நினைவு கூறுகிறார் PDG லத்தி, “அவருக்கு சஃபா, மலர்மாலை கொண்டு வண்ணமயமான ராஜ மரியாதையளித்தோம். எங்களின் வரவேற்பு பற்றி அவர் தன்னுடைய சங்க உறுப்பினர்களிடம் சொல்லும் போது, அதை நம்பவில்லை. அடுத்த முறை 20 உறுப்பினர்களைத் தன்னுடன் அழைத்து வந்தார், அவர்களுக்கும் அதே வரவேற்பை அளித்தோம். அவர்கள் ஆச்சரியமடைந்து, பின் எங்களுடைய நிரந்தர பார்ட்னர்களாக மாறிவிட்டனர்.”



அடுத்து சாயன்மைனா கிராமத்திற்கு பயணமானோம், தினேஷ் ரத்தோர் போன்ற RCC (Rotary Community Corps)யின் உற்சாகமான உறுப்பினர்களிடமிருந்து உதவியை இந்த ரொட்டேரியன்கள் ஏற்றுக்கொண்டு மாற்றமடைந்தனர், அனைவருமே 30 வயதில் இருப்ப வர்கள். ரோட்டரியைப் பற்றி பேசும் போது பெருமகிழ்ச்சியடைகிறார். இந்த இளைஞர் ஒரு கம்ப்யூட்டர் பயிற்சி நிலையம் நடத்துகிறார், அத்துடன் ரோட்டரி நிகழ்ச்சிகளில் ஃபோட்டோகிராபராகவும் இருக்கிறார், இது அவருடைய ஜீவனத்திற்குப் போதுமானதாக இருக்கிறது.

போகிற வழியில் லத்தி, குறைந்த பட்சம் மூன்று பள்ளிகளை சுட்டிக் காட்டி அங்கே “இந்த வளாகத்தின் உள்புற பகுதிகளில் ரோட்டரி டெஸ்க் மற்றும் பெஞ்சுகள் இருக்கிறது, ஜஹா கவர்மென்ட் ஸ்கூல் ஹை வஹா ரோட்டரி ஜிந்தா ஹை, (எங்கெல்லாம் அரசுப்பள்ளி இருக்கிறதோ அங்கெல்லாம் ரோட்டரி இருக்கிறது.) சோன்கட்சிலிருந்து சாயன்மைனா கிராமம் வரை, எங்கள் டெஸ்க் மற்றும் பெஞ்சு உள்ள ஐந்து பள்ளிகளைப் பார்க்கலாம். 20லிருந்து 50 குடும்பங்கள் உள்ள சின்ன இடத்தில் இருக்கின்ற பள்ளிகளில் கூட எந்தக் குழந்தையும் தரையில் உட்காரக்கூடாது என்று டெஸ்க் மற்றும் பெஞ்சு கொடுத்திருக்கிறோம்,” என்கிறார் பெருமையாக.

ஹூசைன் மேலும் சொல்கிறார், ‘மாவட்ட (தேவாஸ்) கல்வி அதிகாரி எல்லா பள்ளிகளையும் பெஞ்சு டெஸ்கிற்காக ரோட்டரிக்கு விண்ணப்பிக்கச் சொல்லியிருக்கிறார்.‘ லத்தி மேலும் சொல்கிறார் ‘உள்ளூர் அரசியல்வாதிகள், MPக்கள், MLAக்களும் எங்களை அழைத்துச் சொல்கிறார்கள்: பள்ளிக்கு பெஞ்சு டெஸ்க் ரோட்டரி தருவதாக அறிவித்துள்ளோம், எனவே இது போன்ற பள்ளிகளுக்கு நிறைய பொருட்களை தயவுசெய்து அனுப்புங்கள்!”

ஹுசைன், 1998ம் ஆண்டில் பிரசிடென்டாக இருந்தபோது, TRF Children's Opportunity Grantஐ அறிவித்து, சங்கங்களிலிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டன என்பதை நினைவு கூறுகிறார். “உடனடியாக விண்ணப்பங்களை அனுப்பி 1,200 மாணவ மாணவிகளுக்கு புத்தகங்கள் மற்றும் சீருடைகளை வழங்க மானியங்களைப் பெற்றோம், இந்த மாவட்டத்தில் எங்களுடைய சங்கம் மட்டுமே இதைச் செய்தது. நாங்கள் யாருமே கமிஷனை எதிர்பார்க்கவில்லை, குறைந்த விலையில் எங்களுக்கு செய்து கொடுங்கள்; 2,100 குழந்தைகளுக்கு கொடுக்கவேண்டும் என்று விற்பனையாளரிடம் பேரம் பேசினோம்!”

லத்தி குறிப்பிட்ட ஒரு திட்டத்தை பளிச்சென்று நினைவுபடுத்தி

சொல்கிறார். ஏனென்றால் "இந்த பகுதியில் நிறைய ஆதிவாசிகள் (பழங்குடியினர்) இருக்கிறார்கள். அத்துடன் இங்கிருந்து ஏறக்குறைய 60 கிலோமீட்டரில் இருக்கின்ற பாக்லியில் உள்ள குழந்தைகளுக்கு புதிய சீருடைகளை வழங்கினோம், ஒரு குழந்தையின் அம்மா கண்களில் கண்ணீருடன் எங்களிடம் சொன்னார்: என்னுடைய குழந்தை வாழ்க்கையில் முதல் தடவையாக புதுத்துணியை உடுத்தியிருக்கிறாள் என்று."



மறுபடியும் ஒரு சிறப்பான வரவேற்பு சாயன்மைனாவில் ரொட்டேரியன்களுக்குக் கிடைத்தது. இப்பகுதியில் 1990 ஆண்டிலிருந்து இங்கே அவர்கள் பணி செய்து கொண்டிருக்கின்றனர்; ஹுசைன் சொல்லுகையில், "3H மானியத்தின் கீழ், 200 கழிவறைகளைக் கட்டித் தந்தோம். இந்திய அரசாங்கம் இப்போது கழிவறையின் தேவையைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறது, ஆனால் ரொம்ப காலத்திற்கு முன்னதாகவே இந்த கிராமத்தில் ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு கழிவறை இருப்பதை உறுதிசெய்தோம். ஒவ்வொன்றும் ரோட்டரி கழிவறை, ரோட்டரியின் சின்னத்தைக் கொண்டிருக்கிறது!"

கிட்டத்தட்ட 2,000 மக்கள்தொகை இருக்கிற ஒரு சாதாரணமான இந்திய கிராமம்; புழுதிபடிந்த குறுகலான தெருக்கள் மற்றும் எங்களின் குக்ங கார் செல்ல கடினமாக இருந்தது. மரத்திற்கு அடியில் கயிற்றுக் கட்டிலில் ஒரு வயதானவர் தூங்கிக்கொண்டிருந்தார்; சாணி வறட்டி காய்ந்துகொண்டிருந்தது, பள்ளியிலிருந்து கொஞ்ச தூரத்தில் இரண்டு டூவீலர்களுடன் ஒரு டிராக்டர் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது, இது தான் இந்த கிராமத்தின் மொத்த வாகன எண்ணிக்கை ஆகும். "இது தான் உண்மையான இந்தியா, இங்கே தான் ரோட்டரி அதிகமாகத் தேவைப்படுகிறது," என்கிறார் லத்தி.

வீடுகள் பாதி கூரையாகவும், பாதி கான்கிரீட்டிலும் இருந்தது, ஆனால் ஒவ்வொன்றிற்கும் ஒரு கழிவறை கொண்டுள்ளது. ஒவ்வொரு கழிவறையிலும் பொறிக்கப்பட்ட ரோட்டரி ச க்கரத்தை குறிப்பிட்டுக் காட்டினார் தினேஷ் ரத்தோர். "2011ம் ஆண்டில் 180 கழிவறைகள் கட்டினோம், ஒவ்வொரு கழிவறைக்கும் ரூ.16,000 செலவு ஆனது" என்கிறார் லத்தி.

இந்த கிராமத்தில்,110 குழந்தைகள் உள்ள அரசு நடுநிலைப் பள்ளியைப் பார்வையிட்டோம். ஒரு டாக்டரின் மகளாகிய துர்கா வர்மா, அவருடைய தோழிகள் ரஞ்சனா, சாக்சி என அனைவருமே ஆசிரியையாக விரும்பினார்கள். 8 ஆம் வகுப்பில் அவர்களுடன் படிக்கும் ஹர்ஷ்வர்தன் இஞ்சினீராக வேண்டும் என விரும்புகிறான், ஆனால் ஒரு ஆசிரியரின் மகன் ஆயுஷ் போலீஸாக விரும்புகிறான். மேதா மற்றும் நிஷா இருவரும் டாக்டராகவும், ரூபாலி ராணுவத்தில் சேரவும் விரும்பினார்கள். இந்த மாணவிகள் அனைவரும் உறுதியாக கல்லூரிக்குச் சென்று அவர்களின் மேற்படிப்பை முடிக்க விரும்புகிறார்கள் என்பதைக் காணும்போது ஆச்சரியமாக இருக்கிறது, மேலும், இதனால் அவர்களின் குடும்பம் அவர்களை சீக்கிரமாக திருமணம் செய்ய கட்டாயப்படுத்த முடியாது!

ரோட்டரியிலிருந்து மேலும் என்ன கேட்கிறார்கள் என்று கேட்கும்போது, "ஒரு புரொஜெக்டர். என்னிடம் லேப்டாப் இருக்கிறது, இன்டர்நெட்டிலிருந்து நிறைய விஷயங்களை இவர்களுக்கு காட்ட விரும்புகிறேன்."

இந்த கடைசி வார்த்தை DG ஹுசைனுக்கானது. ரோட்டரிக்காக அவருடைய சங்கம் மூலம் செய்யப்படும் இந்த திட்டங்களில் அவருடைய ஆர்வத்தையும் கவனத்தையும் பார்க்கும்போது, இவற்றையெல்லாம் செய்ய ஒரு டாக்டருக்கு எப்படி நேரம் இருக்கிறது என்பதை நினைத்து வியக்கிறேன். தலையை சொரிந்து, சிரித்துக்கொண்டே, "நல்ல கேள்வி. இதையே எனக்கு நானே அடிக்கடி கேட்கிறேன்... இது போன்றவற்றில் அலாதியான விருப்பம் கொள்ள ரோட்டரி எனக்குத் தருவதாக நினைக்கிறேன்."

நடுநிலையாகச் சொல்கிறார்: "எங்கள் மாவட்டத்தில் தேர்தல் ஒரு மிகப்பெரிய திட்டம்" எப்படி அவர் தேர்ந்தேடுக்கப்பட்டார்? "நான் ரொம்ப நடுநிலையாக இருந்து சொன்னேன் மே தரு நஹி பிலாவூங்கா (நான் உங்களுடன் சேர்ந்து மது அருந்த மாட்டேன்); உங்கள் நம்பிக்கைக்கு தகுதியான வனாக இருந்தால் மட்டுமே என்னைத் தேர்ந்தெடுங்கள் இல்லையென்றால் உங்கள் தலைவனாக நான் விரும்பவில்லை."

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

# Ergo Bed

## Smart. Adjustable. Technology.




EQUIPPED WITH 5 ZONE
5 ZONE PIN CORE LATEX
MATTRESS

Serta AMERICA'S #1 Mattress Brand NOW IN INDIA

80 YEARS OF EXPERIENCE Serta

feast | surf the net | read a book | watch TV | massage

With advanced and improved technology, the sleek European design Ergo bed will let you choose your own style of comfort. With an easy push of a button, this bed will freely adjust to any position of activity you desire: you can dine on your bed, use your laptop, read comfortably, lie down while watching TV, or simply relax and enjoy different intensities of noiseless vibration massages. The mattress is made of superior 100% natural pin core latex with high-grade specifications for optimal body support and comfort. Further, it also provides health benefits with the use of the Zero G position which optimizes blood circulation.

ADJUSTABLE ERGO BASE WARRANTY 20 YEARS LIMITED

LATEX MATTRESS WARRANTY 10 YEARS LIMITED

**Company Showrooms:** Mumbai – 022-49739066 , Bangalore – 080-41654425, Chennai - 044-48516188
**Authorised Franchisees:** Décor World – Hyderabad – 040-66746622, Adinath Furnitures – Surat – 0261-2634567, Impex United – Cochin - 9746471257, Dimensions Furniture & Lifestyle – Indore – 0731- 2552855, Foam Home – Mumbai – 022-23514135, Galaxy Impex – Pune – 9823815169, ND Enterprises – Navi Mumbai – 022-65111155, Diya Enterprises – Coimbatore – 9500806444, Naaz Mattress Gallery – Gurgaon – 9871170247/8700309691
**Authorised Dealers:** Shangar Furnishing – Vadodara – 0265-2321775, The Handloom Emporium – New Delhi – 011-22443311, Jain Foam Palace – New Delhi -011-41554162, Rajwada Décor – New Delhi - 011-45508926, Luxe Furnishing – Hyderabad – 040-23002977, Trisul Foams – Vijayawada – 0866-2489122/2579122

*Manufactured & Marketed by: Emirates Sleep Systems Pvt. Ltd. (Under license from Serta Inc, USA.)*

EMIRATES Sleep Systems Pvt. Ltd.

**Sales & Marketing Office:** Office No # 0955 L-9, Raheja Towers, East Wing, No.26/27 MG Road, Bangalore 560001, India. Email: admin@sleepsystems.in

/sertaindia @sertaindia /sertaindia

Serta®

WE MAKE THE WORLD'S BEST MATTRESS.™

www.sertaindia.com

# தாராள மனப்பான்மைக்கு ஒரு பாராட்டு விழா

ஜெய்ஸ்ரீ

*இந்தியாவிற்கு வருகைதந்த RIPE பேரி ராஸின்–ஐ கவுரவிக்கும் வகையில் TRF இரவு விருந்தை மாவட்டங்கள் 3141 மற்றும் 3232 ஏற்பாடு செய்தது, மும்பை மற்றும் சென்னையில் உள்ள இந்திய நன்கொடையாளர்களின் தாராளகுணத்தை அவர் பாராட்டினர்.*

‘உங்கள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களின் தலைமைத்துவமும் ஆதரவும் தான் இந்த அறக்கட்டளை உலகம் முழுவதும் மனிதநேயத்திற்காக பல விஷயங்களைச் செய்ய உதவியாக இருக்கிறது,’ என்று AKS உறுப்பினர்கள் மற்றும் TRFன் முக்கிய நன்கொடையாளர்களைக் கவுரவிக்க மும்பையில் நடந்த ஒரு நிகழ்ச்சியில், RI தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பேரி ராஸின் பேசினார். ரொட்டேரியன் அரவிந்த் ஜி ஜாலி மற்றும் அவரின் மனைவி ராஷ்மி இருவரையும் Arch Klumph Societyல் பதவியில் அமர்த்துவதற்கு, இந்த சிறப்பான நிகழ்ச்சியை RC மும்பை D 3141 ஏற்பாடு செய்திருந்தது. மாவட்டத்தின் கொடையாளிகளுக்கு நன்றி செலுத்துவதற்கு பொருத்தமாக, ‘நமன்’ என்று பெயரிடப்பட்டுள்ளது என்று DG பிராஃபுள் ஷர்மா தனது வரவேற்புரையில் கூறினார். இந்த மாவட்டத்தில் xxx முக்கிய நன்கொடையாளர்களும் ஐந்து AKS உறுப்பினர்களும் இருக்கிறார்கள் - ‘இந்த வரிசையில் இன்னும் சிலபேர் சேர இருக்கிறார்கள்’ என்றார்.

‘பணத்திற்காக யாரிடமும் நான் கேட்டதில்லை. நீங்கள் கொடுத்த நன்கொடைகளை வைத்து இந்த அறக்கட்டளை என்ன செய்கிறது என்பதை நீங்கள் உண்மையில் புரிந்து கொண்டிருந்தால், பணம் கேட்க வேண்டிய தேவையே இல்லை என நான் கருதுகிறேன்,‘ என்றார் RIPE. TRFயின் மந்திரத் தொடுதல்கள் மூலம் கவனம் செலுத்துகிற பல்வேறு துறைகளை பற்றிச் சொல்லும் போது, ஒவ்வொன்றின் உதாரணத்திலும் அவர், ‘இப்படித் தான் உங்கள் நன்கொடை உலகத்திற்குச் செய்கிறது, எனவே தான் இந்த அறக்கட்டளைக்கு நான் ஆதரவளிக்கிறேன்,’ என்றார்.

ரோட்டரிக்கு தொடர்ச்சியாக, குறிப்பாக போலியோ ஒழிப்புத் திட்டத்திற்கு ஆதரவளிக்கும் பில்கேட்ஸை RIPE மேற்கோள் காட்டும்போது, அவர் இதை ஏன் செய்கிறார் என்றால் ‘குழந்தைகளுக்கான உறுதிமொழியை நிறைவேற்றுவதை

*RIPE பேரி ராஸின் மற்றும் RID C பாஸ்கர், DG ப்ரஃபுல் சர்மா, AKS உறுப்பினர் அரவிந்த் ஜாலி மற்றும் அவர் மனைவி ராஷ்மி அவர்களை கவுரவிக்கின்றனர்.*



நம்மிடம் அவர் கொடுத்த ஒவ்வொரு டாலரும் சரியாக செலவழிக்கப்படுகிறது என்பது அவருக்குத் தெரியும். 2.5 பில்லியன் குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்பு மருந்தளிக்க $1.7 பில்லியன் திரட்டியிருக்கிறோம். வெகுவிரைவில் இந்த உலகம் போலியோவிலிருந்து மீண்டு விடும், உங்களைப் போன்ற தாராளகுணம் கொண்ட மக்களுக்கு இந்த நன்றிகள் அனைத்தும் உரித்தாகுக.

TRFக்கு ரொட்டேரியன்களின் பங்களிப்பு, சமரசம் மற்றும் பேச்சு வார்த்தைகளுக்கு ஆதரவளிக்கிறது, ஒவ்வொரு ஆண்டும் 1,300க்கு மேற்பட்ட அமைதிக்கான தூதுவர்கள் மூலம் சண்டையிடும் பகுதிகளில் புரிந்துணர்வை கொண்டுவரமுடியும். ஒரு இஸ்ரேலைச் சேர்ந்த ஒரு அமைதித் தூதுவர் பற்றிய ஒரு நிகழ்ச்சியைத் தொடர்புபடுத்தினார், அவரின் நிறுவன உள்பயிற்சியின் ஒரு பகுதியாக பாலஸ்தீனத்தில் ஒரு குடும்பத்துடன் தங்கியிருந்தார், தொடக்கத்தில் எதிர்ப்பு இருந்தாலும் பின்னர் குடும்பத்தினர் அதை ஏற்றுக்கொண்டனர்; அவர் விடைபெறும் போது, நாங்கள் இஸ்ரேலை ஏற்றுக்கொள்ளவில்லை, ஆனால் உங்களை வரவேற்கிறோம் என அந்த வீட்டில் இருந்த மூதாட்டி அவரிடம் சொன்னார்.

முன்னதாக அவர் டெல்லியில் WinS செயல்படுத்தப்பட்டுள்ள ஒரு சில பள்ளிகளுக்குப் பார்வையிடச் சென்றார். 'பள்ளித் திட்டப்பணிகளில் உங்கள் WASH திட்டத்தை நினைத்து பெருமை படவேண்டும். செல்லும் இடங்களில் எல்லாம் பள்ளிகளில் தண்ணீர் மற்றும் கழிவறை வசதியை அமைக்க இந்தத் திட்டப்பணியை முன்மாதிரியாகப், வெறும் கழிவறை வசதி கொடுப்பது மட்டுமல்ல; நடத்தையை மாற்றம் ஏற்படுத்துவது பற்றியதாகும்.'

2010ல் ஹைதியில் ஏற்பட்ட நிலநடுக்கத்திற்குப் பிறகு ரோட்டரியின் பணியை சுட்டிக்காட்டி, ஒரு பொருத்தமான மானியத்தின் மூலம் உள்ளூர் சங்கத்திற்கு வழங்கப்பட்ட ஒரு ஜீப்பை பயன்படுத்தி, தாய்-சேய் மரண விகிதத்தை 50 சதவீதம் குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை RIPE விளக்கினார். 'உள்ளூர் சங்கம் $100 பங்களித்தபோது, அறக்கட்டளை $70,000 கொடுத்து இந்தத் திட்டப் பணிக்கு உதவியது. ஹைதியில் பெரும்பாலான திட்டங்களுக்கு ஏறக்குறைய ஒரு மில்லியன் டாலர் உதவி செய்திருக்கிறோம், அந்த ஜீப் பற்றி மக்கள் அதிகமாகப் பேசினர்.''

D 3141 வரலாற்றில் TRF க்கு $1.2 மில்லியன் பங்களித்த முக்கிய நன்கொடையாளர்களில் ஒருவரை மேற்கோள் காட்டி, புதிய ஆளுநர் ஷாஷிகுமார் ஷர்மாவை $7 மில்லியனை இலக்காக வைக்குமாறு வலியுறுத்தினார். 'உங்களால் முடியும் அந்த நம்பிக்கை எனக்கிருக்கிறது,' என்றார். ரொட்டேரியன்களைப் பார்த்து, 'உங்கள் பணப்பையைத் திறந்து வையுங்கள். இது உங்களுடைய இலக்கோ அல்லது நன்கொடையும் கொடுக்க வேண்டிய தேவையோ மட்டுமல்ல. ஆனால் உங்களின் உதவி எங்களுக்குத் தேவை. வெளியே இருக்கும் மக்களுக்கு நீங்கள் தேவை.'

இவான்ஸ்டோனுக்கு வெளியே AKS நிகழ்ச்சி நடப்பது இது தான் முதல் முறை என்பதை குறிப்பிட்டு அதைப் பாராட்டினார் RI இயக்குனர் சி பாஸ்கர். 'இது நமது ரோட்டேரியன்களின் தாராள குணத்தையும், இதுபோன்ற முயற்சிகளுக்கு உத்வேகத்தை கொடுக்கும்,' என்று சொல்லி இந்திய ரொட்டேரியன்களின் தாராள மனப்பான்மையைக் குறிப்பிட்டு, TRFக்கு கொடுப்பதில் இந்தியாவை இரண்டாம் இடத்தில் வைத்திருக்கிறது என்ற தகவலைத் தெரிவித்தார். 'முக்கிய பரிசுகளைத் தருவதில் 1ம் இடத்திலும், மானியம் வழங்குவதில் 2ம் இடத்திலும், AKS வழங்குவதில் 3ம் இடத்திலும் இருக்கிறோம். உலகம் முழுவதும் 800 AKS உறுப்பினர்கள் இருக்கிறார்கள், இவர்களைப் போன்ற மக்களால் உலகம் பாதுகாப்பான இடத்தில் இருக்கிறது,' என்றார். TRFயின் நல்ல பணிகளைஎப் எடுத்துக்கூறி ரொட்டேரியன் அல்லாதவர்களுக்கு ஒரு உத்வேகத்தைக் கொடுத்து அவர்களின் நன்கொடைகளை சரியான முறையில் வழிமுறைப்படுத்துமாறு புதுத் தலைவர்களை அவர் வலியுறுத்தினார்.

ரொட்டேரியன் அரவிந்த் ஜோலிக்கும் அவரது மனைவி ரஷ்மிக்கும், AKS சான்றிதழை இரு தலைவர்கள் வழங்கினர். ஜோலி 1982 ஆண்டு முதல் RC மும்பையின் உறுப்பினராக இருக்கிறார், மகாராஷ்டிரா மற்றும் கோவாவிற்கான செக் குடியரசின் கௌரவ தூதுவராக ரஷ்மி இருக்கிறார். 'என்னுடைய பெயரை வெளிப்படுத்தாமல் நிறுவனத்திற்கு தொடர்ந்து பங்களிக்க நினைத்தேன், என்னுடைய செயல் மற்றவர்களுக்கு ஒரு உத்வேகமாக இருந்தால், எடுத்துக் காட்டாக இருந்து வழிநடத்துவதில் மகிழ்ச்சியடைகிறேன்' என்று தனது ஏற்புரையில் கூறினார் ஜோலி. எப்படி ராஷ்மி சங்கக் கூட்டங்களில் கலந்துகொண்டு முன்மாதிரியாக இருந்தார் என்பதை நினைவுகூர்ந்தார். 'இன்றைய காலத்தில் இது புதிது ஒன்றுமில்லை. ஆனால் அப்போது பெண்கள் வருவதை யாரும் விரும்பவில்லை. நாம் ஒரு நீண்ட பாதையைக் கடந்து வந்திருக்கிறோம். இப்போது பெண்கள் நம்மை விட அதிக சுறுசுறுப்பாக இருக்கிறார்கள்' என்றார்.

PRID அசோக் மகாஜன், 'அறக் கட்டளையின் குறிக்கோள்கள் திறமையான மற்றும் நம்பகமான வர்களின் கைகளில் இருக்கிறது. ரொட்டேரியன்களும், ரொட்டேரியன் அல்லாதவர்கள் அறக்கட்டளைக்கு



*RIPE பாரி ராஸின், PRID அசோக் மகாஜன், RIDN பரத் பாண்டியா, DG ப்ரஃபுல் சர்மா மற்றும் ரோட்டரியினர் மும்பை விழாவில்...*



DG R *ஸ்ரீனிவாசன்,* EMGA *சாம் படிபண்ட்லா,* RIDN *ஃப்லாயிட் லான்சியா,* RID C *பாஸ்கர்,* RIPE *பாரி ராஸின்,* PRID P T *பிரபாகர்,* RPIC *ராஜதுரை மைக்கெல் மற்றும்* PDG ISAK *நாசர் சென்னையில்...*

பங்களித்துக் கொண்டிருப்பவர்கள் நம்பிக்கை வைத்துள்ளனர். இந்த நம்பிக்கையை அனைத்து ரோட்டரி குடும்பங்களின் ஆதரவைப் பெறுவதற்குரிய ஒரு சக்தியாக வலுப்படுத்த வேண்டும். பொருளாதார மந்தம், போர்கள், சச்சரவுகள் மற்றும் பேரிடர்கள் இருந்தாலும் கூட TRF ஆரோக்கியமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. குறிப்பிட்ட பயிற்சி மற்றும் திட்டப்பணிகளைப் பற்றி ஒரு தெளிவான புரிதல், அறக்கட்டளைக்கு நிதியளிக்கும் பல ரொட்டேரியன்களுக்கு இல்லை. ஆனாலும் கூட அவர்கள் பங்களிக்கிறார்கள், ஏனென்றால் உலகத்திற்கு நன்மைகளை வெற்றி கரமாகவும் சிறப்பாகவும் இந்த அறக்கட்டளை செய்யும் என்பதை புரிந்திருக்கிறார்கள்.''

RIDN பரத் பாண்டையா, DGN ஹர்ஜித் சிங் தல்வார், RISAOலிருந்து TRF மேலாளர் சகுந்தலா ராஹா, RRFC விஜய் ஜலன், முன்னாள் ஆளுநர்கள், இதர AKS உறுப்பினர்கள் மற்றும் முக்கிய நன்கொடையாளர்களும் கலந்து கொண்டனர். RC மும்பை மிட்-டவுன் சீலேன்டைச் சேர்ந்த பிரீத்தி ஷா ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றினார். DGE சர்மா நன்றியுரை கூறினார்.

## சென்னை பயணம்

தங்களுடைய PETS மற்றும் SETSயில் 3000, 3231 மற்றும் 3232ன் புதிய தலைவர்களையும் செயலாளர்களையும் ஊக்கப்படுத்த இரண்டு ரோட்டரி தலைவர்களும் அடுத்த நாள் சென்னைக்குச் சென்றனர். அந்த பகுதியின் பெரிய மனது கொண்ட நன்கொடையாளர்களை பாராட்ட ஒரு மாலை நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது. அட்லாண்டாவிலிருந்து RIDN ஃப்ளாய்ட் லான்சியா மற்றும் அவரது மனைவி பெட்டி, இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

பிரதிநிதிகளை DG ஆர் ஸ்ரீனிவாசன் வரவேற்றார் மற்றும் அந்த மாவட்டத்தின் சேவைத் திட்டப்பணிகளை DRFC சாகர் குறிப்பிட்டார். இதுவரை $750,000ஐ பொதுநிதியில் சேர்த்துள்ளோம், கூடிய விரைவில் இந்த வருடத்தின் இலக்கான $1 மில்லியனை D 3232 எட்டப்போகிறது என்றார்.

AKS உறுப்பினர்களுக்கும் முக்கிய நன்கொடையாளர்களுக்கும் RIPE ராஸின் மற்றும் RID சி பாஸ்கர் பாராட்டுத் தெரிவித்தனர். DGND முத்து பழனியப்பன் AKS குழுவில் இணைந்தார், PDG ஜே பி கம்தர் தனது மொத்த பங்களிப்பான $410,000 மூலம் இரண்டாம் நிலையான Chair Circleக்கு முன்னேறினார். PDG ராஜா சீனிவாசன் தனது முந்தைய நன்கொடையான $281,000 உடன் மேலும் $10,000 வழங்கினார். PDG ISAK நாசர் இரண்டாம் நிலை முக்கிய நன்கொடையாளரானார் மற்றும் RC மெட்ராஸ் மிட்-டவுன் ரொட்டேரியன் அம்பலவாணன் நிலை III முக்கிய நன்கொடையாளரானார். பல புதிய நன்கொடையாளர்களும் இந்த நிகழ்ச்சியில் கௌரவிக்கப்பட்டனர்.

இந்தியாவில் ஒருவார பயணத்தின் போது டெல்லி, மும்பை, ஜெய்பூர், மற்றும் சென்னை போன்ற நான்கு நகரங்களில் ரொட்டேரியன்களின் பங்களிப்பு மற்றும் சுறுசுறுப்பால் ஈர்க்கப்பட்டதாக RIPE ராஸின் தெரிவித்தார். போலியோ ஒழிப்பில் இந்திய ரொட்டேரியன்களின் பணியினைப் பாராட்டினார். போலியோ ஒழிப்பில் கடைசியாக இருப்பதாக உங்கள் நாட்டை இந்த உலகம் நினைக்குமானால், ரோட்டரி அதை தவறு என்று நிரூபிக்கும். இந்த நாட்டை



*'உங்களது நல்ல பணியின் மூலம் மக்கள் வெறும் $11 கட்டணத்தில் முழுமையான இரத்த பரிசோதனை பெற முடியும். ஆனால் எங்கள் நாட்டில் இதற்கான கட்டணம் $400 to 500 ஆகும்.'*

போலியோ இல்லாததாக உருவாக்க வியக்கத்தக்கப் பணியினை வழங்கிய உங்களுக்கு நன்றி. அதிகமாக பெறும் நாடு என்ற நிலையிலிருந்து அதிகமாக கொடுக்கும் நாடு என்ற நிலைக்கு நீங்கள் முன்னேறி இருக்கிறீர்கள். வாழ்த்துக்கள் என்றார்.

முன்னதாக அன்றைய தினம் VHS மருத்துவமனைக்குச் சென்று பார்வையிட்டதை குறிப்பிடும்போது, ரோட்டரி தனது 3H மானியத்தின் மூலம் செய்த பணியை பார்த்து வியந்ததாக கூறினார். 'உங்களது நல்ல பணியின் மூலம் மக்கள் வெறும் $11 கட்டணத்தில் முழுமையான இரத்த பரிசோதனை பெற முடியும். ஆனால் எங்கள் நாட்டில் இதற்கான கட்டணம் $400&500 ஆகும்.'

VHS இரத்த வங்கியில் இரத்தம் ஏற்றிக்கொண்டிருந்த ஒரு 12 வயது சிறுமியை தொட்ட போது படுக்கையிலிருந்து எழுந்து வரவேற்றது நெகிழச் செய்வதாக இருந்தது என அவர் குறிப்பிட்டார். 'அவள் வாய் நிறைய சிரிப்புடன், என்னுடன் கை குலுக்கினாள். இரத்தம் ஏற்றுவதற்காக நான்கு வாரங்களுக்கு ஒருமுறை அவள் இரத்த வங்கிக்குச் செல்கிறாள், ரோட்டரி மூலம் அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது, மேலும் இது போன்ற 20 நபர்களுக்கு ஒவ்வொரு நாளும் அத்தகைய உதவி கிடைக்கிறது. இது உங்கள் இதயத்துக்குள் சென்று உங்களை நெகிழச் செய்கிறது. நீங்கள் அறக்கட்டளைக்குக் கொடுப்பதன் காரணமாகவே அவர்களால் இதை செய்ய முடிகிறது. நீங்கள் அவர்களிடம் நம்பிக்கையை விதைக்கிறீர்கள்,' என்று தொடர்புபடுத்தினார்.

அறக்கட்டளைக்கு வரும் நிதி வரவுகளைப் பற்றி பேசுகையில், TRFக்கு நன்கொடை அளிக்கப்பட்ட $100,000யின் 50 சதவீதம் எப்படி இந்த மாவட்டத்திற்கு திரும்ப வருகிறது என்பதைப் பற்றி விளக்கினார். 'வேறு எந்த ஒரு அறக்கட்டளையும் எனது நன்கொடையில் 50 சத வீதத்தை திரும்பத் தந்து, மூன்று வருடங்கள் கழித்து நீங்கள் விரும்பும் திட்டப்பணிகளில் செலவிடச் சொல்வதாக எனக்குத் தெரியவில்லை. நமக்கு உதவுவதற்கு உலகளாவிய நிதியுதவி நம்மிடம் இருக்கிறது. வேறு ஏதாவது ஒரு அமைப்பு இப்படி செயல்படுகிறதா? இதுதான் நம்மை தனித்துவமாக காட்டுகிறது.'

உலகளாவிய மானியத் திட்டங்கள் மூலம் மருத்துவ சிகிச்சை களில் கவனம் செலுத்தும் இந்த மாவட்டத்தை இயக்குனர் பாஸ்கர் பாராட்டினார், மேலும் சென்னை தான் நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள மக்களுக்கான மருத்துவ சிகிச்சையில் ஒரு மையமாக இருக்கிறது எனக் கூறினார். 'மருத்துவ உதவியைப் பெற வடகிழக்கிலிருந்து பெரும் பாலான பயணிகள் சென்னைக்கு பயணிக்கிறார்கள் என்பதை பார்க்கையில் ஆச்சரியமாக இருக்கிறது மற்றும் நிறைய மருத்துவமனைகளுக்கு அதிநவீன உயிர்-காக்கும் கருவிகளை வழங்குவதன் மூலமாக ரோட்டரி ஆதரவளிக்கிறது. உங்களுக்கு பரிச்சயமானவர்களுக்கு உத்வேகம் கொடுத்து அறக்கட்டளைக்கு பங்களிக்க இதுபோன்ற சம்பவங்களை சங்கத் தலைவர்கள் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்,' என்று தெரிவித்த அவர், ஒவ்வொரு உறுப்பினரும் TRF க்கு குறைந்தபட்சம் $100 நன்கொடையைக் கண்டிப்பாக அளிக்கவேண்டும் என்று மேலும் கூறினார்.

# ரோட்டரியும், எழுத்துப் பணியும் இவருக்கு இரு கண்கள்

ரஷீதா பகத்

அவர் ரோட்டரி சங்கப் பணிகளில் மட்டும் ஆர்வம் கொண்டவர் அல்ல. சிறந்த எழுத்தாளரும் கூட. ‘இல்லத்தரசிக்கு ஓர் கையேடு’ (A handbook for the Housewife) என்ற தலைப்பில் எழுதி, ஓரியன்ட் பேப்பர்பேக்ஸ் 1972ஆம் ஆண்டு வெளியிட்ட ஆங்கில புத்தகம் தொடங்கி இதுவரை சுமார் 50 புத்தகங்களை எழுதியிருக்கிறார்.

அவர்தான் ரோட்டரி 3080ஆவது மாவட்டத்தின் முன்னாள் மாவட்ட ஆளுநர் பிரேம் பல்லா. அவரது படைப்புகள் பலதரப்பட்டவை. ‘எப்படி வெல்வது..’ என்பது போன்ற பல ஆளுமைப் பயிற்சி, சுய முன்னேற்றம் குறித்த நூல்கள், சமையல் குறிப்புகள், தற்போது ஆன்மிக விஷயங்கள் என விதவிதமான தலைப்புகளில் நூல்களை எழுதிவருகிறார்.

அவரிடம் ‘இல்லத்தரசிக்கு ஓர் கையேடு’ என்ற நூல் எப்படி வெற்றிகரமாக விற்பனை ஆனது என்று கேட்டபோது, அதற்கு முக்கிய காரணம் உண்டு. நான் பார்த்த மெத்த படித்த பெண்கள் பலர் குறிப்பாக நமது குடும்பங்களைச் சார்ந்தவர்களே கல்வியில் சிறந்து விளங்குகிறார்கள். ஆனால், அவர்கள் குடும்பத்தை, வீட்டை எப்படி நடத்துவது, குழந்தைகளை எப்படி வளர்ப்பது, கணவனிடனம் எப்படி நடந்துகொள்வது, புகுந்த வீட்டினருடன் எப்படி உறவைப் பாராட்டுவது



PDG *பிரேம் பல்லா கர்வால் பள்ளி ஒன்றில்.*

குடும்பத்தில் யார்யாருக்கு என்னென்ன முக்கியத்துவம் தரவேண்டும் என்பன போன்ற விஷயங்களில் வழிகாட்டுதல் தேவைப்படுகிறது. அது குறித்து சிந்தித்தேன். இன்னும் கூட சிந்தித்து வருகிறேன். ஒரு குடும்பம் சுமுகமாக நடைபெறுவதற்கு இல்லத்தரசிகள் புத்திசாலிகளாக இருக்க வேண்டியது அவசியம். வீட்டையும் குடும்பத்தையும் பராமரிப்பது முடிவற்றது. இந்த நூலின் முதல் அத்தியாயம் மன மகிழ்ச்சி குறித்தது. ஒவ்வொரு பெண்ணும் மகிழ்ச்சியாக இருப்பது அவரது உரிமை என்று உறுதி செய்கிறது என்று பிரேம் பல்லா கூறினார்.

இந்தப் புத்தகம் மகத்தான வெற்றி பெற்று, நல்ல விற்பனை ஆனதையடுத்து, சிலர் அவரிடம், பெண்களுக்கு எழுதியது போல ஆண்களுக்கும் ஏன் ஒரு வழிகாட்டி கையேட்டை எழுதக் கூடாது? என்று கேட்டார்கள்.

எனவே, 'முற்போக்கான ஆண்களுக்கு ஓர் கையேடு' (A handbook for the progressive Man) என்ற தலைப்பில் நூல் எழுதினேன். அதையடுத்து, 'இளைஞர்களுக்கு ஓர் கையேடு' (A handbook for the Young People) என்ற தலைப்பிலும் நூலை எழுதினேன். அதை மும்பையில் உள்ள ஜெய்கோ புக்ஸ் (Young People) நிறுவனம் வெளியிட்டது. அதைத் தொடர்ந்து 'இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகள்' (Careers for Young People) என்ற தலைப்பில் நூல் வெளியானது என்று விவரித்தார்.

சரி, இப்படி பல நூல்களை எழுதுவதற்கு எங்கிருந்து உத்வேகமும் சக்தியும் பெறுகிறீர்கள்? என்று கேட்டோம். உடனே, தனது ரோட்டரி சங்கத்துடன் கொண்ட 56 ஆண்டு தொடர்பை விவரிக்கிறார். இப்படி நூல்களை எழுதுவதற்கு ரோட்டரி சங்கம் எனக்கு உத்வேகம் அளிப்பதில் முக்கியப் பங்கினை ஆற்றியிருக்கிறது. ரோட்டரி சங்கத்தில் இருக்கும்போது, எப்போதும் சமூகத்துக்குப் பணிகளை ஆற்றுவோம். இப்படி இளைஞர்களுக்கும் நாமறிந்தவற்றைப் பகிர்ந்து கொள்வதும் பணிதானே என்று யோசித்தேன்

## ரோட்டரி பயணம் தொடக்கம்

1962ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு இயங்கி வரும் ஹரித்வார் ரோட்டரி சங்கத்தின் நிறுவன உறுப்பினர்களில் தற்போது இருப்பவர் பல்லா மட்டுமே. அப்போது அவருக்கு 26 வயதுதான். இப்படி சமூகப் பணியாற்றுவதற்கும் நிறைய கற்றுக் கொள்ளவும் ஒரு நல்ல வாய்ப்பு என்று அறிந்து கொண்டேன். உண்மையில்



சொல்லப் போனால், கல்லூரியிலும் பல்கலைக்கழகத்திலும் எத்தகைய அறிவைப் பெற்றிருப்பேனோ அதை விடக் கூடுதலாகக் கற்றுக் கொண்டேன் என்றார் பல்லா.

ரோட்டரி குடும்பம் என்று குறிப்பிடுகிறோமே அதற்கு மிகவும் பொருத்த மானவர் பல்லா. அவரது தந்தை ஹரித்வார் ரோட்டரி சங்கத்தை நிறுவி முதல் தலைவராக இருந்தவர். அப்போதே தந்தையுடன் ரோட்டரியில் இணைந்தவர் பல்லா. தற்போது பல்லாவின் மகனும் ரோட்டரி சங்கப் பணிகளில் ஆர்வம் கொண்டவர். அவர் தற்போது ராணிப்பூர் ரோட்டரி சங்கத்தின் நிறுவன உறுப்பினராக இருக்கிறார். என் மகன் இதற்கு முன் ரோட்டராக்ட் சங்க உறுப்பினராக இருந்தான். பின்னர் அழைப்பின்பேரில் ரோட்டரி சங்கத்தில் உறுப்பினராக இணைந்தான். ரோட்டரி பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறான். தனது குழந்தைகளுக்கும் ரோட்டரி பணியில் ஆர்வத்தை ஏற்படுத்தியிருக்கிறான் என்றார் பல்லா.

பல்லா 34ஆவது வயதில் ரோட்டரி சங்கத் தலைவராகவும் 42 வயதில் மாவட்ட ஆளுநராக ஆனார். ரோட்டரி பணிகளில் மிகுந்த ஆர்வம் காட்டும் பல்லா, பின்தங்கிய சமூகப் பெண்களுக்கான ஹிம் ஜோதி பள்ளியை மேம்படுத்தியதில் மிகப் பெரிய பங்களிப்பைச் செலுத்தியிருக்கிறார். அந்தப் பள்ளியை ரோட்டரி இன்டர்நேஷனல் முன்னாள் இயக்குநர் சுதர்சன் அகர்வால் தொடங்கி வைத்தார். அந்தக் கல்வி நிறுவனம் இப்போது மிகச் சிறந்த கல்வி நிறுவனமாகத் திகழ்வதற்கு முக்கியப் பங்காற்றியவர் பல்லா.

அப்பள்ளியின் தொடக்க நாள் முதல் பணியாற்றிவந்தேன். அப்பள்ளியின் மேம்பாட்டுக்காக தி ரோட்டரி ஃபவுண்டேஷன் நிதியை மூன்று முறை பெற்றுத் தந்திருக்கிறேன். மொத்தம் ரூ. 1.62 கோடி அளவுக்கு நிதி கிடைத்திருக்கிறது. அப்பள்ளிக்கு மேசை நாற்காலிகள், உணவறை, இதர கட்டமைப்புகள், ஒரு பேருந்து, ஒரு வேன் ஆகியவற்றைப் பெற்றுத் தந்திருக்கிறோம். அத்துடன் வெந்நீருக்காக சூரிய ஒளிசக்தி வசதியையும் அமைத்திருக்கிறோம் என்று கூறினார்.

அந்தப் பள்ளியை இயக்கி வரும் ரோட்டரி அறக்கட்டளையில் பொருளாளராக ஒன்பது ஆண்டுகள் பணிபுரிந்திருக்கிறார் பல்லா. தொடக்க காலம் முதல் கவனித்து வருகிறேன் முதல் அணியைச் சேர்ந்த மாணவியரில் 8 முதல் 10 பேர் வரையில் 90 சதவீதத்துக்கும் மேல் மதிப்பெண் பெற்று சாதித்து வருகிறார்கள் என்று பெருமிதத்துடன் கூறினார்.

கேதார்நாத்தில் 2013ம் ஆண்டு நேர்ந்த பெரிய வெள்ளத்தில் கர்வால் இமயமலைப் பகுதிகளில் சீரழிந்த பள்ளிகளை மீண்டும் சீரமைத்துக் கட்டித் தருவதற்காக இவர் எடுத்துக் கொண்ட முயற்சி, ஆர்வம், அர்ப்பணிப்பு ஆகியவை இவர் மேற்கொண்ட மிகப் பெரிய திட்டமாகும். அந்தப் பகுதிகளில் 32 பள்ளிக் கூடங்களுக்குக் கட்டடங்கள் கட்டித் தந்தோம். அப்பணிகளில் ரோட்டரி இன்டர்நேஷனல் முன்னாள் இயக்குநர் ஒய்.பி. தாஸும் நானும் முழு அளவில் ஈடுபட்டோம். காண்ட்ராக்டர்களுக்கு ஏற்பாடு செய்வது, பொருட்களை வாங்குவது, கட்டுமானப் பணிகளை மேற்பார்வையிடுவது எல்லாவற்றையும் இணைந்து செய்தோம் என்றார் பல்லா.



PDG *பிரேம் பல்லா மற்றும்* PRID Y P *தாஸ் கர்வாலில் பள்ளிக்கட்டிடம் ஒன்றை சீரமைக்கும் போது.*

பல்லாவுடன் நீண்டகாலம் இணைந்து செயலாற்றி வந்த ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பின் முன்னாள் தலைவர் ராஜேந்திர சாஹூ 1970-71 ஆண்டில் இருவரும் வெவ்வேறு ரோட்டரி சங்கங்களின் தலைவர்களாக இருந்த காலத்தை அசைபோட்டார்.

மாவட்ட ஆளுநர் சோம் திங்க்ராவின் தலைமையில் நாங்கள் பணியாற்றி வந்தோம். பிரேம் பல்லாவுடன் மூன்றாண்டுகள் பயணம் மேற்கொண்டோம். மனித சமுதாயத்திற்கு அவர் ஆற்றும் தொண்டுக்காகவும் அர்ப்பணிப்பு உணர்வுக் காகவும் அவரைப் பெரிதும் மதிக்கிறேன். அதே சமயம் அவரது எழுத்துகளை ரசித்துப் போற்றுகிறேன். பல்லா ரோட்டரி சங்கத்தின் நெறிகளுக்கே முக்கியத்துவம் அளிப்பவர். அவர் தனது மனைவி உமாவுடன் இணைந்து விழுமியங்கள் நிறைந்த பயணத்தை மேற்கொள்வதை நினைத்து மிகுந்த மரியாதை கொள்கிறேன் என்றார்.

## ஹிந்து மதம் குறித்து எழுத்துகள்

ஓர் எழுத்தாளர் என்ற முறையில் பல்லா ஆங்கிலத்தில் மட்டும் எழுதுகிறார். அவற்றில் சில நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டு, அமேசான், ஃபிளிப்கார்ட் ஆகிய ஆன்லைன் தளங்கள் வாயிலாகவும் வாங்கலாம். அவர் எழுதிய இல்லத்தரசிகளுக்கான நூலுக்கு மத்திய அரசு நிதியுதவி அளித்திருக்கிறது. எல்லா அரசு நூலகங்களிலும் அந்நூல் கிடைக்கும் என்றார் ராஜேந்திர சாஹூ.

பல்லா பல ஆண்டுகளாகத் தொடர்ந்து எழுதி வருகிறார். 'வெற்றிக்கு ஏழு படிகள்' (7 steps to



PRIP கார்ல் ஸ்டென்ஹாமர் மற்றும் இந்திய தலைவர்களுடன் PRIP ராஜா சாபு, PRID சுதர்ஷன் அகர்வால் மற்றும் Y P தாஸ் உள்ளனர்.

success), 'நேர மேலாண்மை' (time management), 'தகவல் தொடர்பு ஆற்றல் (effective communications), 'தலைமைப் பண்பு' (leadership), 'குழு மனப்பான்மை' (team building), 'சிறந்த தலைமை' (better relationships) ஆகியவை குறிப்பிடத் தக்கவை. அதையடுத்து, ஆன்மிகம் தொடர்பான நூல்களையும் எழுதத் தொடங்கினார். ஹிந்து மதம் குறித்த பல நூல்களையும் அவர் படைத்திருக்கிறார்.

ஆளுமைப் பண்புகள் குறித்த நூல்களை எழுதிக் குவித்த பிறகு, ஓர் இடைவெளிக்குப் பிறகு, 2003ம் ஆண்டு மீண்டும் நூல்கள் எழுதத் தொடங்கினார். அப்போது, 'முழுமையான மனிதன், இங்கிதமும் நல்ல நடத்தைகளும்' (The Complete Man and Etiquette and Good-Manners) போன்ற நூல்களை எழுதத் தொடங்கினார்.

ஹரித்வாரில் வசித்த அவரது வாழ்க்கையின் பின்னணியில் அவரது நூல்களைப் பிரசுரித்த பதிப்பாளர் இந்து மதம் குறித்த நூல்களை ஏன் எழுதக் கூடாது? என்று தூண்டினார். ஆரம்பத்தில் தயங்கிய பல்லா எனக்கு அந்த விஷயத்தில் போதிய ஞானம் கிடையாதே என்று கூறியிருக்கிறார். பதிப்பாளர் அவருக்கு ஹிந்து மதம் குறித்து ஹிந்தியில் எழுதப்பட்ட சில புத்தகங்களை அளித்து, ஆங்கிலத்தில் எழுதித் தரும்படி கேட்டுக் கொண்டார்.

ஆனால், அதில் ஓர் இடைஞ்சல் இருந்தது. இந்தியா 1947ம் ஆண்டு விடுதலை பெறுவதற்கு முன்பு பள்ளிக் கூடங்களில் நாங்கள் உர்துடன், ஆங்கிலமும் கற்றோம். ஹிந்தி மொழி அல்ல. 5ம் வகுப்பு முதல் ஹிந்தி கற்கத் தொடங்கிய எனக்கு போதிய பாண்டித்யம் கிடையாது. அதிலே ரொம்ப மோசம் என்று கூறி தயங்கியிருக்கிறார். ஆனாலும் பதிப்பாளர் முயன்று பாருங்களேன் என்று வேண்டுகோள் விடுத்தார்.

எனவே, ஒரு போர் வீரரைப் போல் களத்தில் இறங்கி, இறைவனின் அருளுடன் ஆறு மாதத்தில் நூல் எழுதிவிட்டார். அதன் தலைப்பு: 'ஹிந்து மதச் சடங்குகள், நடைமுறைகள், பாரம்பரியங்கள்' (Hindu Rites, Rituals, Customs and Traditions).

இந்த நூல் மகத்தான வெற்றி பெற்று, பதிப்பகத்துக்கு நல்ல பொருள் ஈட்டித் தந்தது. நூலின் முதல் பதிப்பு 2006ம் ஆண்டு வெளியானது. தொடர்ந்து பல முறை பதிப்புகள் வெளியாயின. பல்லாயிரம் பிரதிகள் விற்பனை ஆயின பலருக்கு ஹிந்து மதம் குறித்துப் பேசுவதற்கான நூலாகவும் அமைந்தது என்று உற்சாகத்துடன் கூறினார் பல்லா.

இந்த வரவேற்பு அளித்த உற்சாகத்தினால், ஹிந்து மதம் குறித்த நூல்களை எழுதினார். ஹிந்து மதம் குறித்த ஞானத்தை ஆங்கிலம் மூலம் பரப்புவதும் ஒரு சேவை என்றார்.

## மகாபாரதம் மொழிபெயர்ப்பு:

இதையடுத்து, பல்லாவின் எழுத்துப் பணி தொடர்ந்தது. மேலும் பல ஹிந்து மதம் குறித்த நூல்களை அவர் தொடர்ந்து எழுதினார். மகாபாரதம் குறித்து அவர் தற்போது எழுதி வருகிறார். அந்த இதிகாசத்தில் இடம்பெற்றுள்ள பல அறிவுபூர்வமான கருத்துகளையும் அவற்றின் அம்சங்களையும் வெளியுலகத்திற்கு எடுத்துச் சொல்ல முயன்றேன். மகாபாரதம் மனித வாழ்வையும் அதன் பல்வேறு கூறுகளையும் சித்திரிக்கும் முழுமையான நூல் என்று நான் கருதுகிறேன். இந்நூலில் ஏராளமான கிளைக் கதைகளையும் சேர்த்து வருகிறேன். அப்போதுதான் சுவையாகவும் இருக்கும். நூலை ஒவ்வொரு கதையையும் எளிதாகவும் படித்துப் புரிந்து கொள்ளலாம்

இந்த நூலை எழுதும் பயணத்தில் பாதிக் கிணற்றைப் பல்லா தாண்டி விட்டார். இன்னும் ஓராண்டில் பூர்த்தியாகிவிடும் என்கிறார்.

நூல்களை எழுதும் ஆர்வம் உள்ளவர்களுக்கு பல்லா ஓர் அறிவுரையையும் கூறுகிறார்:

எழுதுவதில் ஓர் ஒழுக்கம் தேவைப்படுகிறது. நான் ஐம்பது

நூல்களை எழுதிக் குவித்துவிட்டேன். நாளொன்றுக்கு குறைந்தது 500 சொற்களாவது எழுத வேண்டும். இது தினசரி வாடிக்கையான செயலாகவே இருக்க வேண்டும். அதே சமயம் ஒன்றைக் கூறியாக வேண்டும். எழுத்து எனக்கு முழு நேரத் தொழில் அல்ல. ஓய்வு நேரத்தில் செய்யும் வேலைதான். காரணம், ரோட்டரி பணிகள் இருக்கின்றன. எனது விவசாயத் தொழிலிலும் ஈடுபடுகிறேன். நான் ஒரு விவசாயி என்பதால் அதுதான் எனக்குச் சோறு போடுகிறது.

அவரது குடும்பம் பெரிய விவசாயக் குடும்பம். ஒரு காலத்தில் அவர்களுக்குப் பெரிய பண்ணை இருந்தது. ஆனால், இரு முறை நில உச்ச வரம்புச் சட்டம் கொண்டுவரப்பட்டதை அடுத்து, எங்களைப் போன்றவர்களுக்கு விவசாயம் மிகவும் கடினமாகிவிட்டது. ஏராளமான நிலப் பகுதிகளைப் பிரிக்கவும் விற்கவும் வேண்டியதாயிற்று. இப்போது 15 ஏக்கர் நிலம்தான் மிஞ்சியிருக்கிறது. அதிலே அரிசி, கோதுமை விளைவிக்கிறேன். மாம்பழத் தோட்டம் வைத்திருக்கிறேன். ரிஷிகேஷுக்கும் ஹரித்வாருக்கும் இடையில் நதியின் கரையில் எங்கள் நிலம் அமைந்துள்ளது. அதில் ஒரு பகுதியைப் புனிதப் பயணம் செய்வோரின் வசதிக்காக உதவத் திட்டமிட்டுள்ளேன் என்றார்.

இதற்கிடையில் 55 ஆண்டுகளாக பிரேம் பல்லா மேற்கொண்டுவரும் ரோட்டரி பணிகளும் அவை தொடர்பான திட்டங்களும் தொடர்கின்றன. உதாரணத்திற்கு, ருத்ரப்ரயாகில் 32 பள்ளிகளைக் கட்டி முடித்த பிறகு மீதி இருந்த பணத்தைக் கொண்டு ஃபட்டாவில் உள்ள அரசு பொது சுகாதார மையத்தின் மேம்பாட்டுக்காக உதவலாம் என்று யாஷ் என்று அழைக்கப்படும் ரோட்டரி இன்டர்நேஷனல் முன்னாள் இயக்குநர் ஒய்.பி. தாஸிடம் தெரிவித்தேன். இந்த அரசு



*1978 போக்கா ராட்டனில் சர்வதேச மாநாட்டில் அப்போதைய RIPE க்ளெம் ரெனாஃபுடன்*

சுகாதார மையம் கேதார்நாத் புனிதப் பயணிகள் இதன் வழியாகத்தான் யாத்திரை செல்கிறார்கள். இங்கிருந்து ஹெலிகாப்டரில் அவர்கள் கேதார்நாத்துக்குச் செல்ல வேண்டும். ஃபட்டா அரசு சுகாதார மையத்தின் கட்டடத்தை ஸ்டீல் முதலிய கட்டுமானப் பொருட்களைக் கொண்டு முழுமையாகப் புதுப்பித்த. இக்கட்டிடம் 25 ஆண்டுகள் உறுதியாக இருக்கும். இந்த மையத்தில் மாதந்தோறும் 32 மகப்பேறுகள் நடக்கின்றன. இதற்காக ரூ.25 லட்சம் செலவிட்டிருக்கிறோம்.

2013ம் ஆண்டு வெள்ள சேதத்தைத் தொடர்ந்து இந்தப் பகுதியில் நாங்கள் செய்த பணிகள் ரோட்டரியின் நினைவாக அடையாளமாக அமைந்துள்ளன என்றார் பல்லா.

## உணவிலும் ஒழுக்கம்:

இத்தனை பணிகளை செய்த பிறகும், இந்த வயதிலும் உடம்பைக் கச்சி தமாக வைத்திருக்கிறார் பிரேம் பல்லா. அது குறித்துக் கேட்டதற்கு,

ஒரு ரகசியம் சொல்லட்டுமா, நான் என் வாழ்நாளில் யோகாசனமோ, இதற்காக காலை நடைபயிற்சியோ செய்ததே இல்லை. ஆனால், ஆயுள் முழுக்க விவசாயியாகவே இருந்து வருகிறேன். வயலில் இருக்கும்போது எல்லா இடத்துக்கும் நடந்தே செல்வேன். வங்கிக்கோ வேறு எங்காவதோ செல்ல வேண்டுமானால், காரை எடுப்பதில்லை. நடந்தே செல்வேன். அப்போது பலரைச் சந்திக்கலாம்.

இன்னொரு ரகசியம் உணவு விஷயத்தில் நான் கடைப்பிடிக்கும் கட்டுப்பாடும் ஒழுக்கமும் தான். நேரத்துக்கு சரியான அளவு சாப்பிடுவது. இதை நீண்ட காலமாகவே கடைப்பிடித்து வருகிறேன். சுவையான, நல்ல உணவை எனக்குப் பரிமாறினாலும் குறிப்பிட்ட அளவே எடுத்துக் கொள்வேன். எப்போதும் அளவுக்கு அதிகமாகச் சாப்பிடுவதேயில்லை.

பொதுவாக எல்லோருக்கும் உணவு தான் பலவீனமான பழக்கமாக இருக்கிறது. என் நண்பர்களுக்கும் இதேதான் பிரச்சினை. உணவில் ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதால், எனது எடை எப்போதும் 65 கிலோ முதல் 70 கிலோ வரையில்தான் இருக்கும் என்கிறார் பல்லா.

மன நிறைவாக நேர்காணல் முடியும்போது, பிரசுரிப்பதற்காக அவரிடம் ஏதாவது நல்ல புகைப்படங்கள் இருக்கின்றனவா என்று கேட்டதற்கு அவர் சொன்ன பதில் திகைக்கச் செய்தது.

நான் நல்ல போட்டோ கிராபர். இருந்தாலும், எனக்கான புகைப்படங்கள் மிகவும் குறைவாகவே இருக்கின்றன. ரோட்டரி மாவட்ட ஆளுநராக இருந்த சமயத்தில் வெளியான 12 இதழ்கள் எதிலுமே எனது புகைப்படத்தையோ, மனைவியின் படத்தையோ நீங்கள் பார்த்திருக்க முடியாது. மக்கள் தங்களது புகைப்படங்களையே பார்க்க விரும்புவார்களே தவிர, நமது படங்களைப் பார்க்க மாட்டார்கள் என்பதை அறிந்திருக்கிறேன் என்றார். ■

# District Wise TRF Contributions as on March 2018

(in US Dollars)

| District Number | APF | PolioPlus | Other Restricted | Endowment Fund | Total Contributions | EREY Donors (in numbers) | EREY % |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | India | | | |
| 2981 | 32,710 | 4,598 | 0 | 0 | 37,307 | 186 | 4.3% |
| 2982 | 53,630 | 720 | 2,725 | 0 | 57,075 | 347 | 12.8% |
| 3000 | 73,402 | 7,267 | 288,541 | 29,154 | 398,363 | 1947 | 38.5% |
| 3011 | 79,968 | 414 | 89,068 | 15,000 | 184,450 | 217 | 7.1% |
| 3012 | 39,251 | 6,693 | 112,590 | 3,016 | 161,549 | 213 | 6.1% |
| 3020 | 37,923 | 18,914 | 49,950 | 42,478 | 149,266 | 87 | 2.0% |
| 3030 | 923 | 22,724 | 1,050 | 0 | 24,697 | 3 | 0.1% |
| 3040 | 8,585 | 15 | 47,538 | 0 | 56,138 | 35 | 1.6% |
| 3053 | 7,883 | 78 | 22,129 | 0 | 30,090 | 22 | 0.8% |
| 3054 | 6,978 | 203 | 275,317 | 1,000 | 283,499 | 24 | 0.4% |
| 3060 | 100,531 | 1,365 | 39,133 | 22,492 | 163,520 | 815 | 21.4% |
| 3070 | 36,104 | 198 | 25,794 | 789 | 62,886 | 188 | 6.3% |
| 3080 | 104,713 | 15,301 | 21,078 | 92 | 141,185 | 174 | 5.3% |
| 3090 | 608 | 0 | 2,500 | 0 | 3,108 | 3 | 0.1% |
| 3100* | 12,229 | 0 | 0 | 0 | 12,229 | 48 | 3.0% |
| 3110 | 64,752 | 2,848 | 60,631 | 0 | 128,231 | 163 | 4.2% |
| 3120 | 81,367 | 508 | 50,000 | 0 | 131,875 | 111 | 3.8% |
| 3131 | 317,748 | 103 | 350,951 | 76,297 | 745,099 | 990 | 19.4% |
| 3132 | 61,742 | 1,306 | 7,875 | 16,000 | 86,923 | 171 | 3.9% |
| 3141 | 516,762 | 21,267 | 620,191 | 97,247 | 1,255,467 | 990 | 19.4% |
| 3142 | 263,599 | 4,315 | 350 | (1,000) | 267,264 | 583 | 21.6% |
| 3150 | 55,436 | 12,557 | 9,050 | 62,000 | 139,043 | 314 | 8.8% |
| 3160 | 122,213 | 1,000 | 0 | 8,338 | 131,552 | 161 | 6.9% |
| 3170 | 33,333 | 7,904 | 20,073 | 0 | 61,310 | 308 | 5.8% |
| 3181 | 81,102 | 1,091 | 0 | 78 | 82,271 | 537 | 17.8% |
| 3182 | 76,181 | 0 | 36,263 | 0 | 112,443 | 610 | 19.4% |
| 3190 | 85,140 | 18,371 | 105,539 | 24,708 | 233,758 | 77 | 1.5% |
| 3201 | 125,508 | 10,599 | 206,098 | 4,938 | 347,143 | 184 | 3.6% |
| 3202 | 43,837 | 7,719 | 0 | 2,773 | 54,329 | 102 | 2.1% |
| 3211 | 81,739 | 0 | 0 | 53,846 | 135,585 | 96 | 2.2% |
| 3212 | 243,343 | 35,120 | 32,500 | 2,000 | 312,963 | 537 | 14.5% |
| 3231 | 119,110 | 7,692 | 121,250 | 30,914 | 278,966 | 81 | 3.2% |
| 3232 | 208,845 | 33,795 | 104,882 | 600 | 348,122 | 239 | 6.5% |
| 3240 | 76,275 | 1,692 | 0 | 8,367 | 86,334 | 289 | 9.9% |
| 3250 | 50,941 | 100 | 8,723 | 10,000 | 69,764 | 177 | 5.0% |
| 3261 | 38,670 | 100 | 13,615 | 0 | 52,386 | 128 | 5.5% |
| 3262 | 72,482 | 227 | 0 | 0 | 72,709 | 250 | 7.6% |
| 3291 | 52,761 | 25,475 | 58,789 | 7,740 | 144,765 | 51 | 1.3% |
| **India Total** | **3,468,326** | **272,278** | **2,784,193** | **518,869** | **7,043,666** | **11,458** | **8.0%** |
| 3220 **Sri Lanka** | 106,475 | 10,293 | 6,840 | 1,217 | 124,826 | 508 | 26.7% |
| 3271 **Pakistan** | 39,401 | 70,699 | 2,100 | 0 | 112,199 | 84 | 5.9% |
| 3272 **Pakistan** | 16,677 | 1,595 | 0 | 1,000 | 19,272 | 52 | 1.9% |
| 3281 **Bangladesh** | 376,356 | 14,055 | 208,628 | 85,543 | 684,582 | 597 | 10.6% |
| 3282 **Bangladesh** | 93,382 | 1,816 | 0 | 1,000 | 96,197 | 415 | 11.0% |
| 3292 **Nepal** | 128,019 | 21,764 | 250,918 | 0 | 400,701 | 573 | 13.1% |
| **South Asia Total** | **4,228,635** | **392,499** | **3,252,680** | **607,629** | **8,481,443** | **13,687** | **8.0%** |
| **World Total** | **86,872,326** | **26,093,399** | **12,772,623** | **18,182,140** | **143,920,488** | | |

** Non-districted*

*Source: RI South Asia Office*




# நீங்கள் செய்வதற்கு நன்றி: பேரி ராஸின்

கிரண் ஜெஹ்ரா

தவில் மற்றும் நாதஸ்வரம் ஒலிக்க, புதிய தலைவர் மற்றும் D 3231 இன் ரொட்டேரியன்கள் சாம்பல் மற்றும் வெள்ளைநிற சூட்டிலும், அவர்களின் மனைவிகள் பட்டு சேலைகளிலும் உடையணிந்து, RIPE பேரி ராஸின் மற்றும் RI இயக்குனர் C பாஸ்கர் அவர்களுக்கு ஒரு பாரம்பரிய வரவேற்பளிக்க அறையின் வராந்தாவில் நின்றார்கள். ஆறு வாரங்களில், இது இந்தியாவில் RIPE -இன் 6வது PETS அமர்வு மற்றும் உலகளவில் 74வது PETS அமர்வு, ஆனால் இதுதான் அவர் பேசும் 1st PETS போல, அவரிடம் உற்சாகம் இருப்பது எனக்கு ஆச்சரியமளித்தது. உங்கள் (தலைவர்-தேர்வு) நம்பிக்கையை அதிகப்படுத்தவும், 2018-19 ரோட்டரி ஆண்டை மேம்படுத்துவதை உறுதி செய்யவும் பேரி இங்கே வந்திருக்கிறார்.

மாவட்டம் கடந்து வந்த பாதை, கடந்த வருடம் பிரிக்கப்பட்டது, TRF உதவித்தொகை உறுதியளிப்பு அமர்வின் முக்கிய நிகழ்வுகள் போன்றவற்றைப் பற்றி ஒரு ஒலி-ஒளிக் காட்சி திரையிடப்பட்டது. 2018-19 ஆண்டின் தலைவர்கள் அடுத்த வருடம் $4 மில்லியன் தொகை, 120 முக்கிய நன்கொடையாளர்கள் மற்றும் 8 AKS உறுப்பினர்கள் போன்றவற்றிற்கு பங்களிக்க உறுதியளித்துள்ளனர், என்றார் DG ஜவாரிலால் ஜெயின், பலத்த கைதட்டல்களுக்கிடையே. புதிய RI தலைவரை அவரின் பயணத்தின் இடையில் பார்ப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது என்றார். DGE C R சந்திர பாப், மேலும் எங்களுடையது புதிய மாவட்டம் மற்றும் சங்கங்களில் பெரும்பாலானவை சிறுநகரங்கள் மற்றும் கிராமங்களில் இருக்கிறது, 2018-19 ம் ஆண்டில் எங்களுடைய கவனம் எங்கள் சங்கங்களை பலப்படுத்துவதிலேயே இருக்கிறது, என்றார். இந்தப் பகுதியில் ரோட்டராக்ட் சங்கங்களின் எண்ணிக்கையை 55லிருந்து 100க்கு உயர்த்த இவரும் விரும்புகிறார்.

தனது உறுப்பினர்கள் சொல்வதைக் காது கொடுத்துக் கேட்பதும், தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு அவர்கள் ஒவ்வொருவருக்கும் வாய்ப்புக் கொடுப்பது ஒரு தலைவராக இருப்பவரின் மிகச் சிறந்த தகுதி என நினைவுபடுத்தினார் பாஸ்கர். ரோட்டரி என்றால் என்ன? என்ற கேள்விக்கு தொடர்ந்து பலவிதமான பதில்களைப் பெற்றதாகச் சொன்னார். மேலும், ரோட்டரி என்பதை நாம் அனைவரும் ஒரே மாதிரி வரையறுக்க வேண்டும். அடுத்த முறை உங்களிடம் கேட்கும் போது, தயவு செய்து இந்த பதிலைச் சொல்லுங்கள்: எண்ணங்களைப் பரிமாற்றவும், சமுதாயத்தை உயர்த்துவதற்குச் செயல்படவும் தலைவர்களை ரோட்டரி ஒன்றிணைத்துக் கொண்டிருக்கிறது, என்று கூறினார்.

DG ஜெயின் அவருடைய விடாமுயற்சியை பாராட்டி, RID மேலும் சொல்கிறார், அவரின் TRFகான இலக்கு $2 மில்லியன், ஆனால் இது டெல்லி அல்லது மும்பையிலிருந்து வரவில்லை ஒரு சிறுநகர் பகுதியிலிருந்து வந்துள்ளது, இது இந்தியாவில் உள்ள நிறைய ரொட்டேரியன்களை ஆச்சரியமடைய வைத்தது. அடுத்த 52 வாரங்களில் ஒரு புது மனிதராக தலைவர்கள் மாறிவிடுவார்கள் என்று சொல்லி, இந்த வாய்ப்பினை நல்லபடியாக பயன்படுத்தும்படி வலியுறுத்தினார். கவனித்து, கற்றுக்கொண்டு உங்கள் திறமைகளை மேம்படுத்தி ஒரு நல்ல தலைவராக சமூகம் உங்களை அங்கீகரிக்க வேண்டும்.

RIPE ராஸின், தலைவர்களை வணக்கம் என்று சொல்லி வரவேற்றபோது கைதட்டல்களால், அரங்கம் அதிர்ந்தது. அவர்களை உற்சாகமாக இருக்கவும் கேட்டுக்கொண்டு, உற்சாகம் என்பது பரவும் தன்மையுடையது, உங்கள் உறுப்பினர்கள் நிறைய செய்ய விரும்புவார்கள் என்றார். புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டத்தின் முதல் வருடத்தில் நீங்கள் $4 மில்லியன் கொடுக்க விரும்புகிறீர்கள். இது ஒரு துணிச்சலான செயல், ஆனால் அதைச் செய்துமுடிக்க முடியும். நாம் துணிச்சலுடன் இருக்க வேண்டும். உங்களுக்கு வாழ்த்துக்கள்.

ராஸின் கூடியிருந்த ரொட்டேரியன்களிடம் ரொட்டேரியன்கள் ஏன் ரோட்டரியை விட்டு வெளியேறுகிறார்கள் என்ற காரணத்தையும், மேலும் நாம் ஏதாவது தவறாக செய்து கொண்டிருக்கிறோமா என்று கேட்டார். 5 சதவீதத்திற்கு



RIPE *பேரி ராஸின்,* RID C *பாஸ்கர் அவர்களுடன்* DG (3231) *ஜவரிலால் ஜெயின்,* DGE C R *சந்திர பாப்,*
DGN *ஸ்ரீதர் பாபு மற்றும் முன்னாள் ஆளுநர்களும், வருங்கால சங்கத்தலைவர்களும்.*

குறைவாக ரோட்டராக்டர்கள் ரோட்டரியில் சேருவதற்கு, இதே கேள்வி பொருந்தும். துடிப்பான ரோட்டராக்டர்கள் கொண்டுவரும் அவசியத்தை விளக்குகையில், இளம் வல்லுனர்கள் தான் ரோட்டரியின் எதிர்காலம், நம்மை தலைவர் என்று நாமே அழைத்துகொண்டால், நாம் அதற்காக வழியமைத்து ரோட்டராக்டர்கள் ரோட்டரியில் சேருவதை உறுதிசெய்ய வேண்டும். உங்கள் மாவட்டம் 100 ரோட்டராக்ட் சங்கங்களை தொடங்க திட்டமிட்டிருப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது.

CSR, உங்கள் நாட்டில் ஒரு நல்ல வாய்ப்பு, இந்திய நிறுவனங்களுக்கு ரோட்டரியை விட ஒரு சிறந்த கூட்டாளி யார் இருக்கிறார்கள்! இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு தலைவர்களை வலியுறுத்தினார். உலகத்தில் ஒவ்வொரு நாட்டிலும் இந்தச் சட்டத்தைக் கொண்டுசெல்ல விரும்புகிறேன். அப்படிச் செய்தால் இதற்கு முன்பு நாம் செய்த சேவைகளை விட அதிகமாகச் செய்ய முடியும்

இந்த வருடத்தில் ரொட்டேரியன்களின் தலைமைப்பண்பு திறன்களை வளர்ப்பதில் கவனம் செலுத்துவதாகச் சொன்னார். நிறைய சமுதாயங்களில் நம்மை ஒரு சாப்பாட்டு சங்கம் என்றே நினைக்கிறார்கள். அதை நாம் மாற்ற வேண்டும். சமூக ஊடகங்களில் ஒரு வலிமையான இருப்பை அமைத்து, நாம் செய்து கொண்டிருக்கிற திட்டங்களைப் பற்றி பேச வேண்டும். நாம் உதவி செய்த குழந்தைகள், நாம் கட்டிய பள்ளிக்கட்டிடங்கள், மாற்றுத்திறனாளிகளுக்கான செய்த உதவிகள் போன்றவற்றை பகிர வேண்டும்.

ஆப்பிரிக்காவில் ஒரு பள்ளியை கட்டிய பின்பு ஒரு சிறுவன் நன்றி சொன்ன நிகழ்வை நினைவுபடுத்திய RIPE, அந்தப் பையன் அவனுடைய வகுப்பறை, கழிவறை மற்றும் தண்ணீர் போன்றவற்றிக்காக ரோட்டரிக்கு நன்றி சொன்னான். மேலும் நீங்கள் உதவி செய்த குழந்தைகளை பார்க்க போவதில்லை. எனவே அவர்கள் சார்பாகவும், ரோட்டரியைச் சார்ந்திருப்பவர்கள் சார்பாகவும், ஒரு சிறந்த உலகத்தை உருவாக்க பங்களிக்கும் உங்கள் ஒவ்வொருவருக்கும் என் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.



RIPE *பேரி ராஸின் மற்றும்* RID C *பாஸ்கர் அவர்களுக்கு பூர்ணக்கும்ப வரவேற்பு.*

# D 3054-யின் கதம்ப மாநாடு

ரஷீதா பகத்

வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஆக்ரா நகரத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட 3054-இன் மாவட்ட மாநாடு, ஆனந்த உத்சவ்-RC ஜெய்பூர் தெற்கு ஏற்பாடு செய்தது. இது பரபரப்பான பேச்சும் கற்பனைக்கு எட்டா வர்ணமயமும் கலந்து, கார்பா மற்றும் பாங்க்ரா நடனத்துடன், சிறப்பு விருந்தினர்களான இங்கிலாந்திலிருந்து RI இயக்குனர் பிரையன் ஸ்டாயில் மற்றும் நியூலாந்திலிருந்து முன்னாள் இயக்குனர் RIPR ஸ்டுவார்ட் ஹீல், அவர்களின் மனைவிகளுடன், கம்பீரமான குதிரை வண்டியில் வந்தனர். மேலும், DG, DGE, PDG-களும் அவர்களின் மனைவிகளும் கேட் வாக்கில் கலந்துகொண்டனர்.

மாலின் பட்டேல், DG ஆக இருக்கும் 224 நாட்களின் இதுநாள் வரை அவர் மேற்கொண்ட பயணத்தின் அறிக்கையைக் கொடுக்கும் போது, 500 புதிய உறுப்பினர்களில்; ஏற்கனவே 480 பேர் வந்திருக்கிறார்கள் என்றும் ஐந்து புதிய சங்கங்கள் சேர்க்கப்பட்டுள்ளது என்றும் கூறினார். TRF இலக்கு $500,000-லிருந்து ஏறக்குறைய பாதியளவு பங்களிக்கப்பட்டுள்ளது, மேலும் "இந்த ரோட்டரி ஆண்டின் முடிவில் $600,000 இலக்கை எட்டுவோம் என்று நினைக்கிறேன். அத்துடன், மாவட்டம் இதுவரை இல்லாத அளவுக்கு அதிகபட்சத் தொகையான $1.6 மில்லியன் பெற்றுள்ளது, ஜூன் முடிவில் $3 மில்லியனைத் தாண்டும்."

சேவைத் திட்டங்களில், மரம் நடுதல், வின்ஸ், இரத்த தானம், எழுத்தறிவு திட்டம், மாணவ கலாச்சாரப் பரிமாற்றம் மற்றும், வெள்ளம் பாதித்த பகுதிகளில் நிவாரணப் பொருட்கள் விநியோகித்தல் போன்ற நலத்திட்டங்களையும் சங்கம் செயல்படுத்தியுள்ளது.

RIPR ஸ்டுவார்ட் ஹீல் கூட்டத்தில் பேசுகையில், "இந்தியாவில் ரோட்டரி செய்கிற வேலைகளைப் பார்த்து நான் ரொம்ப வியந்து போகிறேன். ரோட்டரியின் ஒரு அங்கமாக இருப்பது எவ்வளவு அதிர்ஷ்டம் என்பதையும், மேலும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும்

*DG மவுலின் பட்டேல் மற்றும் அவர் துணைவி சோனல், RIPR ஸ்டுவார்ட் ஹூல் மற்றும் அவர் துணைவி ஏட்ரியனுடன், PDGs அசோக் குப்தா, ப்ரதுமான் பட்னி, அஜய்கலா மற்றும் நிர்மல் சிங்க்வி அவர்களும் உள்ளனர்.*



*இந்தியாவில் ரோட்டரி செய்கிற வேலைகளைப் பார்த்து நான் வியந்து போகிறேன். நாம் ரொட்டேரியன்களாக இருப்பதற்கு அதிர்ஷ்டம் செய்துள்ளோம் மற்றும் ரோட்டரியில் புதுமை ஏற்படுத்து வதற்கான நேரமிது.*

— RIPR ஸ்டுவார்ட் ஹூல்

வித்தியாசத்தை உருவாக்குவதற்கு அவர்கள் ரோட்டரியில் இருக்கிறார்கள் என்பதையும் நாம் உணர்வதற்கு நமக்கு உலகம் முழுவதும் ரொட்டேரியன்கள் தேவை.'' மேலும், எல்லா நேரங்களிலும் ரோட்டரி பரிமாண வளர்ச்சியைக் கொண்டிருக்க அதே நேரம், சில சமயம் புரட்சியும் தேவைப்படுகிறது மற்றும் ரோட்டரி செயல்பாடுகள் ஒரே இடத்தில் குவியாமல் வெவ்வேறு இடத்தில் பரவி இருக்கவேண்டும் என்று கூறினார்.

''பிராந்திய அலுவலகங்களின் கடமையைப் பரிசீலித்து, அவர்களுக்குக் கூடுதல் அதிகாரம் வழங்க வேண்டும். ரோட்டரியில் இது புதுமைக்கான நேரம் நீங்கள் மாற்றத்தின் மன்னர்கள் என்பதால், உலகளவிலான சமூக சேவைகளில் நாம் கவனம் செலுத்தவேண்டும்,'' என்று வலியுறுத்தினார்.

''எனக்கான வித்தியாசத்தை உருவாக்க'' ரோட்டரியில் சேர்ந்ததாக RI இயக்குனர் பிரையன் ஸ்டாயில் கூறினார். மேலும் ரோட்டரி அவருக்கு வழங்கிய சேவை வாய்ப்புகளைப் பற்றி பேசினார். ''ரோட்டரியில் உங்களைச் சுற்றியுள்ளவர்களின் பலன்களுக்காகத் தொடர்ந்து கற்றுக்கொண்டே இருக்கலாம்,'' என்று கூறினார்.

PRID மனோஜ் தேசாய் பேசுகையில், ''துறைமுகத்தில் நின்றுகொண்டிருந்தால் கப்பல் பாதுகாப்பாகத் தான் இருக்கும், அது பயணிப்பதற்காகவே உருவாக்கப்பட்டுள்ளது. அதேபோல ரொட்டேரியன்கள் தங்கள் குடும்பத்தின் எல்லையைத் தாண்டி, ரோட்டரியின் பயணத்தைத் தொடர வேண்டும்.'' வழக்கம்போல், தனக்குப் பிடித்த உருது கவிதையை வாசித்து, பார்வையாளர்களை மகிழ்வித்தார்.





RID *பிரையன் ஸ்டோயல், அவர் துணைவி மேக்ஸைன், RIPR ஸ்டுவர்ட் ஹூல், ஏட்ரியன், DG மவுலின் பட்டேல், சோனல், ஜெய்ப்பூர் தெற்கு சங்கத் தலைவர் வந்தனா பிரகாஷ் மற்றும் ராஜேந்திர பிரகாஷ்.*

AKS உறுப்பினர்களையும் TRFக்கு அதிகமாக பங்களித்த பொறுப்பாளர்களையும் கவுரவித்தனர், சுரேஷ் போடர் மற்றும் அவரது மனைவி கிரண் இந்த வருடம் $50,000 பங்களிப்பாக அளித்தனர். அவர்கள் AKS உறுப்பினர்களை இரட்டிப்பாக்கும் செயலில் ஈடுபட்டுள்ளனர். $250,000 வழங்கிய PDG அசோக்குப்தா மற்றும் விஜயா, ரூ.1.65 கோடி வழங்கிய PDG ரமேஷ் அகர்வால்; $70,000 வழங்கிய AKS உறுப்பினர்களான DG பட்டேல், PDG அனுராக் பந்தியா, சோனம் மற்றும் ரொட்டேரியன் மகேந்திர பந்தியா அனைவரும் கவுரவிக்கப்பட்டனர்.




16 நாடுகளைச் சேர்ந்த 26 இளைஞர்கள் கொண்ட International Youth Exchange குழு கலந்துகொண்டு, இளைஞர்கள் மாவட்டத்தில் பயணம் செய்தபோது தங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டனர், ''இந்தியா காரமும் இனிப்பும் கலந்தும், பாசம், தாராள குணம் மற்றும் நம்பிக்கை எல்லாவற்றையும் கொண்டுள்ளது'' என்பதையும் கண்டதாகச் சொன்னார்கள். PDG அணில் அகர்வாலுக்கு TRFலிருந்து போலியோவிற்காக 'மெரிடோரியஸ் சர்வீஸ் அவார்டு' வழங்கி கவுரவித்தனர்.

ரொட்டேரியன் மானு பலிவால் கார் பயணத்தின் காட்சியை வழங்கினார், இவர் தன் சகோதரருடன் 161 நாட்களில் 23 நாடுகளைக் கடந்து வந்தார், பயணத்தின் போது, போலியோ பல்ஸ் திட்டத்தை அவர் பிரபலப்படுத்தினர்.

இன்டர்நேஷனல் அசெம்பிளியில் கிடைத்த அற்புதமான அனுபவத்தைப் பற்றி DGE நீரஜ் சொகானி பேசினார். குஜராத் மற்றும் ராஜஸ்தானில் உள்ள 80 சங்கங்களிலிருந்து வந்த பிரதிநிதிகளை மாநாட்டின் தலைவர் ராஜேந்திர பிரகாஷ் வரவேற்றார். இணை இயக்குனர் ராஜேஷ் காத்ரி நன்றியுரை கூறினார்.■

# வாழ்வை மாற்றுகிற ரோட்டரி

# VHS: பேரி ராஸின்

வி முத்துக்குமரன்

சென்னையில் PRID பிடி பிரபாகர், RID 3232 DG ஆர் ஸ்ரீனிவாசன், இதர ரோட்டரி தலைவர்களுடன் சேர்ந்து, VHS மருத்துவமனையில் ரோட்டரி இரத்த வங்கியை RIPE பேரி ராஸின் பார்வையிட்டார். இரத்த வங்கியின் பல்வேறு வசதிகளை தலைமை மருத்துவ அதிகாரி டாக்டர் வி மைதிலி விளக்கினார். அதிநவீன வசதிகளைப் பயன்படுத்தி இரத்தத்தையும் அதன் பகுதிப் பொருட்களையும் பிரிப்பது, பரிசோதிப்பது மற்றும் சேமித்து வைக்கும் செயல்முறையை விளக்கமாக விவரித்தார் CMO. VHS மருத்துவமனை, மெட்ராஸ் சென்ட்ரல் ரோட்டரி சங்கம் மற்றும் TTK குழும நிறுவனங்களின் கூட்டு முயற்சியால் உருவானது.

அந்த இரத்த வங்கியில் தலசீமியா பிரிவில் சிகிச்சை பெறுகிற குழந்தைகளுடன் ராஸின் கலந்துரையாடினார், அடுத்து மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலவாழ்விற்காக புதிதாகத் திறக்கப்பட்ட அபிமன்யு பிளாக்கை பார்வையிட, மருத்துவ நிபுணரான ராஸின் ஒவ்வொரு சிறப்பு வார்டு மற்றும் படுக்கையறைகளையும் ஆய்வு செய்து, வழங்கப்படும் மருத்துச் சிகிச்சை களைப் பற்றி கேள்விகள் கேட்டார்.

ஆய்வகம் மற்றும் நோய்கண்டறியும் பிரிவிலும் கூட டெக்னீசியன்கள் மற்றும் பயோகெமிஸ்ட்டுகளிடம் கேள்விகள் கேட்டு அவர்களுடன் உரையாடினார்.

## மருத்துவமனையில் வீடு

பின்பு, கே எஸ் சஞ்சீவி ஹாலில் ரொட்டேரியன்கள் மத்தியில் மலிவான முறையில் மருத்துவ வசதிகளை வழங்குவதில் இருக்கும் சவால்களின் மத்தியில் VHS மருத்துவமனைக்கு ரோட்டரி உதவி செய்துகொண்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட்டார். VHS உடன் இணைந்து நிகழ்த்திய சாதனைகளை ரொட்டேரியன்கள் பெருமிதம் கொள்ளலாம்.

தனது அப்பா ஒரு அறுவைச் சிகிச்சை நிபுணராகவும், அம்மா ஒரு செவிலியராகவும் பணிபுரிந்த பஹமாஸ் மருத்துவமனையில் வளர்ந்த இவர், ‘VHSயில் இருப்பதற்கு உண்மையாகவே மகிழ்ச்சியடைகிறேன், ஆய்வக வசதி களைப் பார்ப்பதற்கு அற்புதமாக இருக்கிறது. இரத்தம் ஏற்றப்படும் குழந்தைகளின் முகத்தில் புன்னகையை வரவழைப்பதை விட வேறெதுவும் பெரிதில்லை’ என்றார்.

எக்ஸ்-ரே கட்டணமாக $200 மற்றும் CBC பரிசோதனைக்கு $50-$60 வாங்கப்படுகின்ற பஹமாஸ் மருத்துவச் செலவினங்களுடன் ஒப்பிடும்போது, சென்னையில் மருத்துவ வசதிகள் குறைந்த விலையில் கிடைக்கிறது என்றார்.

*RIPE பேரி ராஸின் தலசேமியா நோயால் பாதிக்கப்பட்ட குழந்தையுடன். RPIC ராஜதுரை மைக்கெல், Rtn Dr P ஸ்ரீனிவாசன், PRID PT பிரபாகர், DG R ஸ்ரீனிவாசன் மற்றும் DGE பாபு பேரம் அவர்களும் உடன் உள்ளனர்.*



V Muthukumaran

# ரோட்டரி சேவையில் மாத்யூஸ்

ரஷீதா பகத்

அவரைப் பார்த்தால் அப்படி ஓர் எளிமை. யாருடனும் சகஜமாகப் பழகும் தன்மை, நட்பு காட்டும் சுபாவம், மனத்தைத் தொடும் வகையில் அரவணைக்கும் போக்கு இப்படி ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குநராக சிறந்தவையில் நிர்வகித்து வருகிறார் அவர். இத்தனை திறன்களுடன் கடற்படையில் இருபது ஆண்டுகள் பணிபுரிந்து கமாண்டராகவும், அமெரிக்காவின் மிகப் பெரிய வர்த்தக நிறுவனமான கோஸ்ட்கோவில் துணைத் தலைவராகப் பணியாற்றியவர். மனித ஆற்றல் மேம்பாட்டில் திறம்பட செயல்படுபவர், இடர்மேலாண்மை (Risk Management) வல்லுநராகவும் திகழ்பவர். தற்போது ரோட்டரி இயக்கத்தின் தலைவராகியிருக்கிறார்.

அவர்தான் ஜான் மாத்யூஸ். அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலம், மெர்செர் தீவு ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்தவர். அவர் குதூகலமான மனிதர் என்பது மட்டுமல்ல, நேர்காணல் செய்வதற்குச் சரியான நபராகவே தோன்றினார்.

மாத்யூஸை நான் சந்தித்ததும் உரையாடியதும் கோலாலம்பூர் கல்வி நிறுவனத்தில் (Kuala Lumpur Institute). பேட்டியைத் தொடங்குவதற்கு முன்பே ஒளிவுமறைவின்றி பட்டென்று கூறிவிட்டார் : நான் ரோட்டரி அமைப்பிலேயே காலம் தாழ்ந்து வெளிச்சத்திற்கு வந்திருக்கிறேன்

அதற்குக் காரணம் உண்டு, அவர் நீண்டகாலம் அமெரிக்க கடற்படையில் சேவை புரிந்துவிட்டு சாவகாசமாகத் தான் ரோட்டரி அமைப்பில், குறிப்பாக ரோட்டரி சங்கம் அமைப்பின் செயல்பாடுகளில் இணைந்திருக்கிறார்.

மாத்யூஸ் 1969ஆம் ஆண்டு அமெரிக்க கடற்படையில் சேர்ந்தார். அது பற்றிக் கேட்டபோது பதிலளித்தார்:

அப்போது நான் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன். அந்தக் காலத்தில் அமெரிக்காவில் ஒவ்வொரு இளைஞனும் ராணுவப் பணியில் கட்டாயம் சேர்ந்தாக வேண்டும். அதைப் போலவே எனக்கும் ஏதாவது ராணுவ சேவையில் ஈடுபடவேண்டும் என்ற எண்ணம் இருந்தது

மாத்யூஸின் தந்தையும் சகோதரரும் கூட ராணுவச் சேவையில் ஈடுபட்டனர். எனவே, கல்லூரிப் படிப்பை முடித்ததும் கடற்படையில் சேர்ந்து, மூன்றாண்டுகள் பணிபுரிந்தார். இருந்தாலும் அதே பணியில் நீடிக்கும் எண்ணம் அவருக்கில்லை. காரணம், கொலம்பியா பட்டப்படிப்புக் கல்லூரியில் வங்கியியல் குறித்த மேற்படிப்பைத் தொடர நினைத்தார்.

ஆனால், மூன்றாண்டு சேவை முடித்தபிறகு, என்ன செய்யலாம் என்று இருந்தேன். அப்போது எனக்கு வழிகாட்டியாக இருந்தவர் (Detailer) பரிமாற்றத் திட்டத்தின் கீழ் ஆஸ்திரேலிய கடற்படையில் பணியாற்றுவதற்காக 'சிட்னி செல்லத் தயாரா?' என்று கேட்டார். நான் எனது வீட்டுக்குத் திரும்பி மனைவி மேரியைக் கேட்டேன், 'சிட்னிக்குப் போகலாமா?' என்று. அவள் அதற்கு சம்மதம் தெரிவித்தாள் என்றார்.

அப்போது அவர்களுக்குக் குழந்தை பிறக்கவில்லை என்பதால், சிட்னி பயணம் செல்வது எளிதாகவே இருந்தது. சிட்னியில் நன்றாகச் சுற்றிப் பார்த்தோம். நல்ல அனுபவம் கிடைத்தது. திரும்பி அமெரிக்காவுக்கு வந்தபோது, அதே வழிகாட்டி, 'மீண்டும் கல்லூரிப் படிப்பைத் தொடருகிறாயா?' என்று கேட்டார். எனவே, நிதி மேலாண்மை குறித்த ஒரு படிப்பில் சேர முடிவானது. அப்போது அமெரிக்க கடற்படைக்கும் பல்வேறு பல்கலைக்கழகங்களுக்கும் கல்வி தொடர்பான உடன்பாடு இருந்தது. அதன்படி, கடற்படையில் இருந்த நான் வாஷிங்டனில் உள்ள ஜார்ஜ் வாஷிங்டன் பல்கலைக்கழகத்தில் படித்திருக்க வேண்டும்.

அப்போது வியட்நாமுடன் போர் நீடித்துக் கொண்டிருந்ததால், குழப்பம் நிலவியது. அதனால், தனது பணியாளர்களைப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களாகச் சேர்த்துக் கொள்ளும் திட்டத்தை அமெரிக்க கடற்படை விலக்கிக் கொண்டது. அதையடுத்து, உன்னைப் படிப்புக்கு அனுப்ப முடியாது என்று என்னிடம் கடற்படை மேலிடம் கூறிவிட்டது. அதன் பிறகு, கடற்படை பட்டப் படிப்புக் கல்விநிலையத்தில் சேர்ந்து படித்தேன்.

கடற்படையில் பணியாற்றிய காலம் ரொம்ப குதூகலமானது. நான் அதை ரசித்து அனுபவித்தேன். உடன் இருந்தவர்களும் உற்சாகமானவர்கள். அப்போதெல்லாம் நான் அங்கேயே நீண்டகாலம் தங்கி பணியாற்றுவேன் என்றெல்லாம் நினைத்துப் பார்க்கவும் இல்லை. திட்டமிடவும் இல்லை. இதற்கிடையில் என் அம்மா, 'எப்போது வேலையை விட்டுவிட்டு, வீட்டுக்குத் திரும்பி வரப்போகிறாய்?' என்று கேட்டார். எங்களது வீடு நியூயார்க் மாநிலம் ரோசெஸ்டர் என்ற இடத்தில் இருக்கிறது. நியூயார்க் நகரில்தான் மரியானாவை முதல் முறை சந்தித்தேன். 15 வயதிலேயே காதல் அரும்பியது. சிறிது காலம் ஒன்றாகவே வாழ்ந்தோம் என்றார்.

மாத்யூஸ் அமெரிக்க கடற்படையில் பல்வேறு பிரிவுகளில் பல்வேறு பணிகளைச் செய்திருக்கிறார்.

USS Kitty Hawk என்ற போர்விமானம் தாங்கிக் கப்பலில் சப்ளை அலுவலக கமாண்டராக இருந்திருக்கிறார். பிறகு, வாஷிங்டனிலிருந்து கடற்படைக்கு சரக்குகளை ஏற்றிச் செல்லும் சேவையில் ஈடுபட்டிருக்கிறார். அமெரிக்க கடற்படையில் பணியாற்றிய இருபது ஆண்டுகளில் 13 முறை பயணம் செய்திருக்கிறார்.

அப்படி பயணத்திலேயே இருந்ததால், எனது குழந்தைகளுடன் நெருக்கம் அதிகமாக இல்லை என்பதை உணர்ந்திருக்கிறேன். எப்படி அவர்களுடன் இருந்தாலும், 18 மாதங்களுக்குள் பணிக்குத்



திரும்பிவிடுவேன் என்பது தெரியும். இப்படி அமெரிக்க கடற்படையில் பணியாற்றிவிட்டு பணியை நிறைவு செய்தேன். 22 வயதில் கடற்படையில் சேர்ந்தேன். பணியை நிறைவு செய்தபோது, எனக்கு வயது 42 வயது. சரியாக இருபது ஆண்டுகள் பணி புரிந்திருக்கிறேன் என்றார்.

### ரோட்டரியில் ஈடுபடுதல்

பின்னர் மாத்யூஸ் எப்படி ரோட்டரி பணியில் ஈடுபடத் தொடங்கினார்?

என் அப்பா ரோட்டேரியன். என் சித்தப்பாவும் ரோட்டரியின் முன்னாள் ஆளுநர். எனவே, ரோட்டரி அமைப்பு குறித்து நன்றாக அறிவேன். இறுதியில் நானும் ரோட்டரி சேவையில் ஈடுபடத் தொடங்கினேன். ஆனால், நான் பணியில் இருந்தபோது, இப்படி சேவை புரிய இயலவில்லை என்றார்.

அமெரிக்க கடற்படை விதிகள் ரோட்டரி அமைப்பில் சேர்ந்து பணியாற்ற இடம் கொடுத்தாலும், நடைமுறையில் அது இயலவில்லை. காரணம், நாம் அங்கே இருப்பதில்லையே ஒரு முறை சான்டியாகோ நகருக்கு மாலை நேரத்தில் கடற்பயணம் செய்தபோது, கலிபோர்னியாவில் உள்ள கோரோனாடோ ரோட்டரி சங்கத்தில் இணைந்தேன். அது நல்ல சங்கம். அங்கே நிறைய நண்பர்களைப் பெற்றேன். ஆனாலும், ரோட்டரி பணிகளில் முழுமையாகவும் முழு நேரமும் ஈடுபட இயலவில்லை. காரணம் கப்பலுக்குப் பணிக்குத் திரும்ப வேண்டியிருந்தது. இதனால், முழுமையான தொடர்பு இல்லாமலே போனது என்றார்.

அதன் பிறகு சிறிது காலம் கழித்து, 1995ம் ஆண்டில் சியாட்டில் நகருக்குக் குடிபெயர்ந்தார். அப்போது, அவர் கடற்படையிலிருந்து ஓய்வு பெற்று, கோஸ்ட்கோ வர்த்தக நிறுவனத்தில் இணைந்து பணியாற்றிக் கொண்டிருந்தார். அந்த சமயம் அவரது நண்பர் ஒருவர் எத்தியோப்பியா நாட்டில் நோய்த்தடுப்பு பிரசார முகாமுக்குச் செல்லப் போவதாகக் கூறினார். அவருடன் செல்வதென்று மாத்யூஸ் முடிவு செய்தார்.

அந்த சமயத்தில் ரோட்டரி அறக்கட்டளையின் தலைவர் பால் நெட்ஸெலைச் சந்தித்து, எத்தியோப்பியாவில் ரோட்டரி அமைப்பினர் மேற்கொள்ளும் சிறந்த சமூக சேவைத் திட்டங்களில் ஈடுபடுவது, புதிய அனுபவமாக அமையும் என்று கூறினேன். அந்த ரோட்டரி அமைப்பும் வலுவோடு செயல்பட்டது. அதன் மூலம் மகத்தான சேவைகளைச் செய்யலாம் என்று கருதினேன்.

எத்தியோப்பியாவிலிருந்து திரும்பிய பிறகு, 2002ம் ஆண்டு மெர்செர் தீவு ரோட்டரி சங்கத்தில் சேர்ந்து பணியைத் தொடர்ந்தேன். எங்களது மாவட்ட ஆளுநர் ரோஸ்மேரி என்னை அழைத்து, 'புதிய சமூக சேவை வாய்ப்புகளை மேற்கொள் வதற்காக என்னிடம் 10 ஆயிரம் டாலர் மானியம் கிடைத்துள்ளது. அதை மேற்கொள்வதற்கு நீங்கள் தயாரா?' என்று கேட்டார். அதற்கு, 'மானிய உதவியைக் கொடுங்கள்.' என்றேன். அந்த மானிய உதவி எத்தியோப்பியா தலைநகர் அடிஸ் அபபாவில் உள்ள ரோட்டரி மருத்துவமனைக்கு சேவைத் திட்டங்களுக்காக அனுப்பப்பட்டது என்றார் மாத்யூஸ்.

### தலைமைப் பண்புகள்:

மாத்யூஸ் இதையடுத்து, தனது பகுதி ரோட்டரி ஃபவுண்டேஷன் தலைவராகப் பொறுப்பேற்றார். அதைத் தொடர்ந்து, 2006-07ம் ஆண்டில் ரோட்டரி சங்கத்தின் தலைவராகவும் ஆனார். அதன் பின் மாவட்ட துணை ஆளுநராக




*ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குனர் ஜான் C மாத்யூஸ்*

Rtn Sridhar Bharathy

# உறுப்பினர்களின் விவாதம் நீடித்திருக்கச் செய்வோம்



ரோட்டரி இன்டர்நேஷனல் போர்டு உறுப்பினர் என்ற முறையில், இயக்குநர்களில் ஒருவரான ஜான் மாத்யூஸ், நம்மைச் சுற்றிலும் ஏராளமான விவாதங்கள் நடந்துகொண்டிருக்கின்றன என்றாலும் அங்கும் இங்கும் புரட்டிப் போட வேண்டியது நிறைய இருக்கிறது. 112 ஆண்டு கால ரோட்டரி வரலாற்றில் புதிதாக பல கட்டுமைப்புகளை உருவாக்கியதுதான் அத்தகைய சவால்களில் பெரியது. அதே சமயம் அவற்றில் எதுவும் நீக்கப்படவில்லை என்றார்.

உறுப்பினர்களைச் சேர்ப்பது குறித்துப் பேசுவது எளிதான விஷயங்களில் ஒன்று. அதைவிட முக்கியம் அதைச் செய்து முடிப்பதும் தொடர்ந்து மேற்கொள்வதும் முக்கியம். ரோட்டரி ஃபவுண்டேஷனை 80 ஆண்டுகளாக இயக்கி வருகிறோம். ஆனால், சொல்வதில் நிலைத்தன்மை இருப்பதில்லை. எனவே, பல நல்ல திட்டங்களைச் செயல்படுத்தியும், அதில் தோல்வியைக் கண்டோம். நீடித்த தன்மைக்கான நிலைகளை உருவாக்காமல், நேரம், ஆற்றல், பணம், வளங்களைப் பற்றியே நினைத்திருந்தோம். அவையெல்லாம் வீணாகி விட்டன. சில சமயம் சுத்தமான குடிநீர் வசதியைச் செய்வது போல செய்கிறோம், ஆனால், அது வேறொன்றில் முடிந்துவிடுகிறது. காரணம், உள்ளூர் மக்கள் அதில் ஈடுபடுவதில்லை, அதில் செயல்படுவது மில்லை. ஆகையால், தி ரோட்டரி ஃபவுண்டேஷன் (TRF) தற்போது நிலைத்த தன்மைக்கான அடித்தளத்தைக் கட்டமைப்பதில் ஈடுபட்டு வருகிறது. இது அற்புதமான செயல் என்று கூறிய மாத்யூஸ் தொடர்ந்தார்:

ஆனால், அதில் ஒரு சிக்கல் இருக்கிறது. அமைப்பின் செயல்பாடு ஒரு பகுதியில் நன்றாகப் பயன் அளிக்கும்போது, அதே போல் இதர பகுதிகளுக்கும் பலன் சென்றடைவதில்லை. நிலைத் தன்மை குறித்த யோசனையை உறுப்பினர்கள் சேர்க்கை குறித்த விவாதத்தின்போது தெரிவித்தால், தர்ம சங்கடமாகிவிடுகிறது. உறுப்பினர்களைத் தக்க வைத்துக் கொள்வதற்கு நாம் பெரிய செயல் எதையும் செய்வதில்லை. மக்கள் உறுப்பினர்களாகச் சேர்கிறார்கள்.பிறகு விலகிவிடுகிறார்கள். இப்படி 23 ஆண்டுகளாக மொத்தம் 12 லட்சம் பேர்தான் இருக்கிறார்கள். எங்கேயோ தவறு இருக்கிறது. சங்கம் வளர்வதில்லை. மாறாக தேய்ந்து வருகிறது. நாம் புதிது புதிதாக சங்கங்களை உருவாக்கி வருகிறோம். ஆனால், கடந்த பத்தாண்டு களில், 42 சங்கங்களில் இருந்து 34 சங்கங்களாகக் குறைந்துவிட்டது. சரா சரியாக 8 சங்கங்களே இருக்கின்றன என்றார்.

தொடர்ந்து பேசிய அவர், சங்கங்களின் எண்ணிக்கையின் நிலைத் தன்மை மட்டுமல்ல, பல சங்கங்கள் புதிய சங்கங்களை உருவாக்கு வதில்லை. எனவே, நாம் பேச வேண்டியது வேறு. ரோட்டரி ஃபவுண்டேஷனில் ஒவ்வொரு ரோட்டரி உறுப்பினரும் ஆண்டு தோறும் தனது பங்களிப்பைச் செலுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது முக்கியம், நாம் வளர்ச்சி பெற வேண்டும். நாம் எதிர்பார்ப்பது வளர்ச்சி பெற வேண்டும் என்பது மட்டும் அல்ல. ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சி காணவேண்டும். காரணம், உங்களது அலுவல்பணிகள் மூலம் வளர்ச்சி ஏற்படாமல், பின்னடைவு நேர்ந்தால், அது வளர்ச்சியே அல்ல. எனவே, நாம் உறுப்பினர்கள் சேர்க்கை குறித்த விவாதங்களில் நிலைத் தன்மை குறித்த அம்சம் இடம்பெறாவிட்டால், இன்று முதல் 50 ஆண்டுகள் நீடிப்போமோ என்பதற்கு உத்தரவாதம் இல்லை என்று குறிப்பிட்டார்.

‘எதிர்பார்க்கப்படும் உறுப்பினர்கள் எவ்வளவு பேர்.?’ என்று ரோட்டரி சங்கத்திடமும் கேட்டாக வேண்டும். ரோட்டரி தலைவர், செயலர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் பங்குபெறும் கருத் தரங்குகளில் (PETS & SETS) ரோட்டரியின் புதிய உறுப்பினர்களை ஈடுபடுத்த வேண்டும். ஆண்டுதோறும் புதிய உறுப்பினர்களை சேர்க்க வேண்டும், சேறவில்லை என்றால், நாம் புதிய சங்கத்தை உருவாக்க அறிவுறுத்த வேண்டும்.

இறுதியில், ஆயிரக்கணக் கான ரோட்டரி சங்கங்கள் உள்ளன அவை புதிய சங்கங்கள் எதையும் உருவாக்கவில்லை என்ற அதிர்ச்சி மிக்க அறிக்கையைவெளியிட்டார்.

ஆனார். 2010-11ம் ஆண்டில் மாவட்ட ஆளுநராகவும் உயர்ந்தார்.

இப்போது பார்த்துக் கொள்ளுங்கள் எவ்வளவு தாமதமாக ரோட்டரி யின் உயர் பதவியை அடைந்திருக்கிறேன் என்று என்றார்.

மாவட்ட ஆளுநராக மாத்யூஸ் இருந்தபோது, எங்கள் ரோட்டரி சங்கத் தலைவர்களுடன் இணைந்து ஏராளமான பணிகளையும் கோலாகலக் கொண்டாட்டங்களையும் நிகழ்த்தியிருக்கிறேன். அது நல்ல குழுவாகச் செயல்பட்டது. அனைவருடனும் தொடர்ந்து இணைப்பிலேயே இருந்தேன். பல லட்சம் டாலர் மதிப்பிலான விருந்திலும் பங்கேற்றோம்.

கோஸ்ட்கோ நிறுவனத்தின் துணைத் தலைவராக இருந்தபோது, கோஸ்ட்கோ நிறுவனத்தின் இதழில் 'இளம்பிள்ளை வாதமும் ரோட்டரி சங்கத்தின் செயல்பாடும்' என்ற கட்டுரையை வெளியிட்டேன். அக்கட்டுரை உலகம் முழுவதும் 7 கோடிப் பேருக்குப் போய்ச்சேர்ந்தது என்றார்.

அதே சமயம் மாத்யூஸ் தான் பணியாற்றிய நிறுவனத்திலும் சிறந்த தலைவராகச் செயல்பட்டிருக்கிறார். ஒரு நல்ல தலைவர் கம்பெனியில் பெரிய மாற்றத்தைக் கொண்டு வர இயலும் என்பதற்கு மாத்யூஸ் ஓர் உதாரணம்.

கோஸ்ட்கோ கம்பெனியில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, மேலதிகாரியிடம் மாத்யூஸ், 'நான் கம்பெனியின் நலனுக்காகக் கடுமையாக உழைப்பேன். எனது ரோட்டரி சங்கப் பணிகளால் அதற்கு எவ்வித பாதிப்பு நேராது என்று உறுதியளிக்கிறேன்' என்றேன். அப்போது கம்பெனி 10,000 கோடி டாலர் அளவுக்கு வணிகம் செய்யும் நிலைக்கு முன்னேறிக் கொண்டிருந்தது. அந்த சமயத்தில் எனது முழுமையான ஈடுபாடு தேவையென்பதால் அப்படிக் கூறினேன். அதற்கு எனது மேலதிகாரி என் தோளை அன்போடு தொட்டு, 'ஜான் மாத்யூஸ், நீங்கள் அதைப் பற்றிக் கவலைப்படவேண்டாம். நீங்கள் செய்வது சமுதாயத்திற்கு ஆற்றும் பணி. அது மிகவும் முக்கியம். இன்னும் சொல்லப் போனால், நாங்களும் பங்களிப்பு செலுத்த வேண்டும்' என்றார். அது எனது ரோட்டரி பணிகளுக்கு ஆசி கூறுவதைப் போல் அமைந்தது. நான் அதை மறக்கவே மாட்டேன் என்றார் மாத்யூஸ்.

கோஸ்ட்கோ நிறுவனத் தில் 25 ஆண்டுகள் பணியாற்றிவிட்டு கடந்த ஆண்டு ஓய்வு பெற்றார்.

## ரோட்டரி தந்த இன்ப அதிர்ச்சி!

ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குநர் என்ற முறையில் தான் எதிர்கொண்ட சவால்களைப் பற்றிக் குறிப்பிட்ட மாத்யூஸ், பல நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கிறேன். உலகம் முழுவதும் பரவியிருக்கும் வெவ் வேறு கலாசாரங்கள், சமுதாயங்களுக்கு ஏற்ப செயல்படுவது எனக்குப் சவாலாக இருக்கவில்லை. ஆனால், ரோட்டரி அமைப்பு எப்படி செயல்படுகிறது என்பதைப் புரிந்துகொள்வதுதான் பெரிய சவாலாக இருந்தது.

எனக்குப் புதிய சிந்தனை தோன்றுகிறது என்று நினைத்திருந்தேன். ஆனால், ஒவ்வொரு முறையும் ரோட்டரி சங்கத்தின் மூலம் நான் புதிதாகக் கற்றுக் கொள்ள நேர்ந்தது தொடர்ந்து வியப்பை அளித்துக் கொண்டேயிருந்தது. புதிதாகக் கற்றுக் கொள்வதை நான் மகிழ்வுடன் ஏற்பேன். அது ஜாலியான வேலை. அது சரி, அவற்றையெல்லாம் எப்படிக் கற்றுக் கொண்டேன் என்று கேட்கிறீர்களே.. என்னைக் கிண்டல் செய்கிறீர்களா என்று சிரித்தபடி கூறினார்.

அமெரிக்க கடற் படையிலும் பின்னர் கோஸ்ட்கோ நிறுவனத்திலும் பணியாற்றியதால் கிடைத்த அனுபவம் ரோட்டரி சங்கப் பயணத்தில் உதவினவா? என்று கேட்டபோது, நிச்சயமாக. அதே சமயம் ரோட்டரி பணியின்போது நான் பெற்ற அனுபவத்தை கோஸ்ட்கோ நிறுவனத்திலும் பயன்படுத்தினேன்.

அமெரிக்கா உள்ள ரோட்டரி சங்கத்தில் தங்களது புதிய உறுப்பினர்கள் சூழ் நிலைக்கு ஏற்ப செயல்படும் திறனை வளர்த்துக் கொள்வதற்குப் பயிற்சி தரப்படும். அந்தநுட்பத்தை கோஸ்ட்கோ நிறுவனத்தில் கடைப்பிடித்தேன். வாடிக் கையாளர்களைத் தக்க வைத்துக் கொள்வதற்கு இது உதவியது என்றார் மாத்யூஸ்.

ரோட்டரி மாவட்ட ஆளுநராக இருப்பவர் ரோட்டரி இன்டர்நேஷனல்





*RI இயக்குனர் ஜான் மாத்யூஸ், மனைவி மேரி எல்லன் மற்றும் PRIP ராஜேந்திர K சாபுவுடன்*

இயக்குநர் பதவியை எட்டுவதற்கு என்னவிதமான தலைமைப் பண்புகள் தேவைப்படுகின்றன? என்று கேட்டதற்கு மாத்யூஸ் பதிலளித்தார்:

ஊக்கத்தினால்தான் ரோட்டரி அமைப்புகள் இயங்குகின்றன என்று நம்புகிறேன். ரோட்டரி அமைப்புகளின் தலைமைப் பொறுப்பில் உள்ள பலருக்கு யாராவது ‘இப்படிச் செய்வதில் நீங்கள் கெட்டிக்காரர். இன்னும் செய்யுங்கள்’ என்று அளிக்கும் ஊக்கம் மிகுந்த சொற்கள்தான் அத்தலைமைப் பண்பை நீடிக்கச் செய்துள்ளன. ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குநர் ஆவேன் என்று எதிர்பார்க்கவேயில்லை. அந்த யோசனையை நண்பர்கள் எனக்குள் விதைத்ததை மகிழ்ச்சியுடன் ஏற்றேன் என்றார்.

ரோட்டரி சேவையில் உங்களது மனைவி மேரியின் பங்கு?

அதற்கு மாத்யூஸ், நாங்கள் ஒரு நல்ல குழுவைத் தயார் செய் திருப்பதாகவே நான் நினைக்கிறேன். அவள் (மேரியானா) எளிதில் அணுகக் கூடியவள். ரோட்டரி சங்கத்தினரோ ரோட்டரி சங்கத்தைச் சேராதவர்களோ யார் வேண்டுமானாலும் அவளை அணுகலாம். மேரியும் ரோட்டரி உறுப்பினர்தான். அவள் பனிச்சறுக்குப் அளிக்கும் பயிற்றுநராக இருந்தார். 15 ஆண்டுகள் பயிற்சி அளித்திருக்கிறார்.

# ஷாட் புகைப்படங்கள்



*போலியோ இல்லா உலகத்திற்காக சர்வதேச சேவை விருதிற்கு, D 3052 PDG மற்றும் INPC உறுப்பினர் அனில் அகர்வால் TRF யின் International PolioPlus Committee ஆல் தேர்ந்தெடுக்கப்பட்டார். கனடாவின் டொராண்டோவில் ஜூன் மாதத்தில் நடக்க இருக்கும் ரோட்டரி மாநாட்டில் இந்த விருதினை அவர் பெற்றுக்கொள்வார்.*



*RIPE பேரி ராஸினின் சமீபத்திய புனே விஜயத்தின் போது, RID சி பாஸ்கர் மற்றும் DG அபேய் காட்கில் முன்னிலையில் சுயநலமற்ற சேவைக்கான விருதினை, D 3131 PDG தீபக் ஷிகர்பூர் பெற்றார்.*



*இந்தியாவில் ரோட்டரி மேற்கொண்டுவரும் தட்டம்மை மற்றும் ரூபெல்லா திட்டப்பணிகள், சமூக பணிகள் மற்றும் கிராமப்புற முன்னேற்றத்திற்காக ஆதித்யா பிர்லா அறக்கட்டளையின் தலைவர் ராஜஸ்ரீ பிர்லா, ரூ.50 இலட்சத்திற்கான காசோலையை PRID அசோக் மகாஜனிடம் வழங்கினார்.*

# சத்தீஸ்கர் மாநிலம் தம்தரியில் ஒரு மருத்துவ முகாம்

ரஷீதா பகத்

சத்தீஸ்கர் மாநிலம் தம்தரியில் ரோட்டரி மருத்துவ முகாம் PRIP இராஜேந்திர சாபூ தலைமையில் வெற்றிகரமாக நடைபெற்றது. தலைநகர் ராய்ப்பூரிலிருந்து 80 கி.மீ. தொலைவில் உள்ள தம்தரியில் யமுனா நகர் ரோட்டரி சங்கம் (D 3080), ராய்ப்பூர் கிரேட்டர் ரோட்டரி சங்கம், ராய்ப்பூர் மில்லினியம் ரோட்டரி சங்கம் ஆகிய அமைப்புகள் இணைந்து இந்த முகாமை நடத்தின. சத்தீஸ்கர் மாநில அரசு இதற்கு உதவியது.

இந்த மருத்துவ முகாமை சத்தீஸ்கர் சுகாதார அமைச்சர் அஜய் சந்திராகர் கடந்த மார்ச் 4ஆம் தேதி தொடங்கி வைத்தார்.

இந்த மருத்துவ இயக்கத்தின் இயக்குநரான PDG சுபாஷ் கர்க் பேசுகையில், இந்த மருத்துவப் பிரசார முகாமில் கண் சிகிச்சை, பிளாஸ்டிக் சர்ஜரி, பொது சர்ஜரி, வயிற்றுக் கோளாறு மருத்துவ சிகிச்சை நிபுணர்கள், மகப்பேறு மருத்துவர்கள், எலும்பு சிகிச்சை நிபுணர்கள், மயக்கவியல் நிபுணர்கள், தோல்நோய் சிகிச்சை நிபுணர்கள், காது-மூக்கு-தொண்டை நிபுணர்கள், பல் மருத்துவர்கள் என பல்வேறு துறைகளைச் சேர்ந்த 21 மருத்துவ நிபுணர்கள் தொண்டாற்றினர். மேலும் 10 பயிற்சி மருத்துவர்கள், ரோட்டரி இன்டர்நேஷனல் முன்னாள் தலைவர் சாபூ, அவரது மனைவி உஷா உள்பட 10 தன்னார்வத் தொண்டர்களும் இந்த பத்து நாள் முகாமில் பங்கேற்றனர்.

ராய்ப்பூர் விமான நிலையத்தில் வந்து இறங்கிய ரோட்டரி





குழுவினருக்கு மாநில அரசு சிறப்பு வரவேற்பை அளித்தது. அங்கிருந்து அந்தக் குழுவினர் அதே நாளில் தம்தரிக்குப் பயணமாயினர் என்றார்.

இந்த சிறப்பு மருத்துவ இயக்க முகாமின் பின்னணி குறித்து விவரித்த மாவட்ட முன்னாள் ஆளுநர் சஷி வர்வந்த்கர், பெரிய அறுவைச் சிகிச்சைகளை நடத்துவதற்கு தம்தரியில் ஒரே ஒரு அரசு மாவட்ட மருத்துவமனைதான் உள்ளது. பெரிய ஆபரேஷன்களை நடத்துவதற்கு அங்கு சிறப்பு மருத்துவ நிபுணர்கள் இல்லை. கண் ஆபரேஷன் செய்யவும் சின்ன சின்ன ஆபரேஷன்களை நடத்தவும்தான் அங்கு நிபுணர்கள் இருக்கின்றனர். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டுதான் மாநில அரசு எங்களை தம்தரியில் ஒரு மருத்துவ சிகிச்சை முகாமை நடத்தும்படி கேட்டுக் கொண்டது என்று கூறினார். சஷி இந்த மருத்துவ பிரசார இயக்கத்திற்கு தலைவர்-ஒருங்கிணைப்பாளராக இருக்கிறார்.

அந்த மருத்துவ முகாம் நடை பெற்ற திடலில் 90 அடி உயரமும் 240 அடி பரப்பும் கொண்ட பிரம்மாண்டமான கூடாரம் அமைக்கப்பட்டது. மேலும்,



*PRIP ராஜா சாபூ மற்றும் அவர் துணைவி உஷா RAHAT மருத்துவ குழுவுடன்.*

நோயாளிகள், சிகிச்சை ஆலோசனை பெறுவவோர் குறித்து பதிவு செய்வதற்காக 8 வெவ்வேறு பணி உதவி மையங்கள் அமைக்கப்பட்டன. நோயாளிகளைப் பரிசோதிப்பதற்காக 20 அறைகளும் உருவாக்கப்பட்டன. உடனடியாக அறுவைச் சிகிச்சை செய்துகொள்ள வேண்டியவர்கள் யார் யார், இதர பரிசோதனைகள், ஆய்வுகள் நடத்தப்பட வேண்டியவர்கள் யார் யார் என்று தேர்ந்தெடுத்து பிரித்து அதற்கான நடைமுறைகள் இந்த அறைகளில் மேற்கொள்ளப்பட்டன.

இதையடுத்து, தம்தரியில் உள்ள மாவட்ட மருத்துவமனையிலும், கிறிஸ்டியன் மருத்துவமனையிலும் 1,883 பேருக்கு சர்ஜரி நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில் 149 பேருக்கு பெரிய அளவில் ஆபரேஷன்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. 393 பேருக்குக் கண் ஆபரேஷன், 106 பேருக்கு பிளாஸ்டிக் சர்ஜரி, 880 பேருக்கு பல் சிகிச்சை, 35 பேருக்கு முதுகெலும்பு சிகிச்சை உள்ளிட்ட அறுவைச் சிகிச்சைகள் நடத்தப்பட்டன.





மருத்துவ முகாமில், எய்ம்ஸ் மருத்துவ நிபுணர்கள், ராய்ப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சத்தீஸ்கர் ராம்கிருஷ்ணா நல மருத்துவமனை ஆகியவற்றைச் சேர்ந்த நிபுணர்கள் கலந்துகொண்டு மருத்துவ சேவையை ஆற்றினர். அவர்களது மருத்துவப் பணிக்கு உள்ளூர் மருத்துவர்கள் உதவினர். பலர் புற நோயாளிகளாக வந்து போதிய சிகிச்சையைப் பெற்றனர்.

இந்த மருத்துவ முகாமில் பங்கேற்ற அனைத்து நோயாளிகளுக்கும் இலவசமாக மருந்துகளும் உணவும் வழங்கப்பட்டன. நோயாளிகளுக்குத் துணையாக வந்தவர்களுக்கும் தங்கியிருந்து அனைத்து நாட்களிலும் உணவு வழங்கப்பட்டது.

செவிலியர் கல்லூரியில் இருந்தும் ஃப்ளஸோரன்ஸ் நர்சிங் கல்லூரியில் இருந்தும் ஏராளமான தன்னார்வத் தொண்டர்கள் வந்து சேவை புரிந்தனர். வாழும் கலை அமைப்பைச் சேர்ந்தவர்கள் உள்ளூர் தொழில் வர்த்தக சபையைச் சேர்ந்தவர்கள் உணவு விநியோகம், நிர்வாகப் பணிகள் ஆகியவற்றில் முழு அளவில் ஈடுபட்டனர்.

இந்த மருத்துவ இயக்க முகாமில் 22,700 பேர் பங்கேற்றனர். அவர்களில் 100 பேர் மேல் சிகிச்சை க்காக எய்ம்ஸ் மருத்துவமனைக்கும் ராய்ப்பூர் மருத்துவக் கல்லூரி மருத்து வமனைக்கும் மாற்றப்பட்டனர். ராய்ப்பூர் மில்லினியம் ரோட்டரி சங்கம் மற்றும் ராய்ப்பூர் கிரேட்டர் ரோட்டரி சங்கம் ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் கூடுதலான பொறுப்பை ஏற்றுக் கொண்டு அவர்களை எய்ம்ஸ் மற்றும் ராய்ப்பூர் மருத்துவ மனையில் சேர்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர். எந்தக் கட்டணமும் வாங்காமல், அவர்களை மருத்துவ வாகனங்களில் ஏற்றி அனுப்பியதுடன் தேவையான உணவையும் வழங்கினர் என்று மாவட்ட முன்னாள் ஆளுநர் வர்வந்த்கர் கூறினார்.

மாவட்ட முன்னாள் ஆளுநர் கர்க் பேசுகையில், இந்த இயக்கத்தின் வெற்றிக்காகப் பாடுபட்ட ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவர் சாபூ, அவரது மனைவி உஷா சாபூ, ரோட்டரி யமுனா நகர் (D 3080) அமைப்பைச் சேர்ந்த ரோட்டரி மாவட்ட ஆளுநர் டாக்டர் R.S. பார்மர் (மருத்துவ மிஷன் தலைவர்), D 3261 மாவட்ட ஆளுநர் ஹர்ஜித் சிங் ஹூரா, முன்னாள் மாவட்ட ஆளுநரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விவேக் தாங்க்ரா, சஷி வர்வந்த்கர், ராகேஷ் சதுர்வேதி (நிர்வாகத் தலைவர்), டாக்டர் R.S. சர்மா, D 3261 மாவட்டத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள், குறிப்பாக தம்தரி ரோட்டரி சங்கத்தின் தலைவர் அமித் ஜெய்ஸ்வால் அவரது குழுவினர் ஆகியோர் மிகுந்த பாராட்டுக்கும் நன்றிக்கும் உடையவர்கள் என்று கூறினார்.■

# ரொட்டேரியன்களின் உள்ளத்தை தட்டியெழுப்புவோம்: பேரி ராஸின்

வி முத்துக்குமரன்

"ஒரு நிமிடம் யோசித்து, ரோட்டரியைப் பற்றி மற்றவர்களின் பார்வை எப்படி இருக்கிறது என்று புரிந்துகொள்ளுங்கள், ஆணோ அல்லது பெண்ணோ உங்கள் சங்கத்தில் சேருவதற்கு ஆர்வம் காட்டினால், உங்களுடைய சங்கத்தின் தலைவராக நீங்கள் சரியான பாதையில் செல்கிறீர்கள். அதே வேளையில் சங்க செயல்பாடுகளில் உற்சாகத்தை வெளிக்காட்டவில்லை என்றால், அங்கே ஏதோ தவறு இருக்கிறது, அதைச் சரிசெய்ய வேண்டும்," என்று சென்னையில் 3000 மற்றும் 3232 மாவட்டங்களின் PETS and SETS நிகழ்ச்சியில் பேசுகையில் RIPE பேரி ராஸின் கூறினார்.

உறுப்பினர்கள் தங்களுடைய சமூகத்தில் நேரடியாகவும் மறை முகமாகவும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துவதற்காக இந்தியாவில் உள்ள ரோட்டரிக்கு அவர் அனைத்து பாராட்டுக்களையும் தெரிவித்தார். "இப்போது இந்தியாவில் உள்ள ரோட்டரி சங்கங்களுக்காக CSR நிதியம் புதிய வாய்ப்புகளைத் திறந்துள்ளது, மாவட்டங்களை ஒருங்கிணைத்து, கூட்டுத் திட்டங்களை நீங்கள் வடிவமைக்க வேண்டும்,". இந்தியப் பள்ளிகளில் WASH திட்டம் நிறைவடைந்துள்ளதை, தனது ஃபேஸ்புக் பக்கத்தில் பதிவிட்டிருந்தார், "இந்தியச் சங்கங்கள் எப்படி திட்டங்களை செயல்படுத்துகிறார்கள் என்ற விவரங்களை ரொட்டேரியன்கள் கேட்டிருக்கிறார்கள்."

உலகளாவிய தன்னார்வ நிறுவனத்தின் ஒரு உள்ளார்ந்த மதிப்பை ஒவ்வொரு ரொட்டேரியனும் உணரவேண்டும். "உங்கள் உறுப்பினர்கள் என்ன விரும்புகிறார்கள், எதில் ஈடுபாட்டுடன் இருக்கிறார்கள் மற்றும் உங்கள் சங்கத்திற்கு மதிப்பை எப்படி கொண்டுவருவார்கள் என்பதை அவர்களிடம் கேளுங்கள். முடிவாக, ரோட்டரி என்பது புதுமாற்றத்திற்கான திட்டப்பணிகளில் செயல்படும் நபர்களைக் கொண்டது" என்றார்.

### ஊக்கமளிக்கும் தலைமைத்துவம்

தலைமைப் பண்பிற்கான தகுதிகளைப் பட்டியலிட்டு, இந்த சமூகத்தில் 'நிலைத்திருந்து புதுமாற்றங்களை ஏற்படுத்தும் திட்டப்பணிகளைச் செய்ய அவர்களுக்கு இவையெல்லாம் உதவும்' என்று ராஸின் கூறினார். ரோட்டரி தலைவர்களுக்கு இரண்டு வாய்ப்புகள் இருக்கிறது; "வாழ்வதற்காக அவர்களின் வேலையைத் தொடருவது, உறுப்பினர்களுக்கு முன்மாதிரியாக இருந்து சங்கத்தில் இதுவரை இல்லாத அளவுக்கு சிறந்த தலைவர்களாக மாறுவது." இதைச் செய்ய, அனைத்து உறுப்பினர்களிடம் தனிக்கவனத்தைச் செலுத்தி, செயல்படுத்துவதற்கான ஆற்றல் ஒருவருக்கு இருக்கவேண்டும், இது மற்றவர்களுக்கும் பரவி சங்கங்களுக்கு "துணிச்சலான இலக்குகளை" நிர்ணயிக்கும்.

மிகப் பெரிய பொறுப்புகளை கவனித்துக் கொள்ளக்கூடிய இளம் திறமையாளர்களை வளர்க்க, தலைமைப்பண்பு பயிற்சிகளை ஆரம்பிக்க வேண்டும் எனத்




*சென்னையில் நடைபெற்ற PETSல் RIPE பேரி ராஸின், RID C பாஸ்கர், DG ஸ்ரீனிவாசன், DGE பாபு பேரம், PRID PT பிரபாகர், RPIC ராஜதுரை மைக்கெல் மற்றும் D 3232 PDGS, ரோட்டரியினர்.*




D 3000 DGE R V N *கண்ணன்,* RID C *பாஸ்கர்,* Rtn. R *ஆனந்த ஜோதி,* SETS *தலைவர்* J *அரவிந்த் முன்னிலையில்*
RIPE *பேரி ராஸினை கௌரவிக்கிறார்.*

தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை ராஸின் வலியுறுத்தினார். தலைமைப்பண்புத் திறன் களை மேம்படுத்தவும், பஹமாஸில் உள்ள ரோட்டராக்டர்கள் டோஸ்ட்மாஸ்டர்ஸ் சங்க உறுப்பினர்களுடன் கைகோர்த்துள்ளனர். ''ஆனால்



ரோட்டராக்டர்களை எப்படி கவர்ந்திழுப்பது என்பதைப் பற்றியும், அவர்களை ஊக்கப்படுத்தி அவர்களின் பயணத்தை ரோட்டரி சங்கங்களில் தொடர வைப்பது பற்றிய பேச வேண்டும்.''

வெறும் கனவு காண்பவர் களல்ல ரொட்டேரியன்கள், ''ஆனால் நிலைத்திருக்கக் கூடிய திட்டப்பணிகள் மூலம் சமூகத்தில் நீடித்திருக்கக்கூடிய மாற்றத்தை ஏற்படுத்தச் செயல்படுகிறோம். நாம் செய்கிற அற்புதமான பணியைப் பற்றியும் உலகத்தை மாற்றும் திட்டப்பணிகளைப் பற்றியும் சமூக வலைதளத்தில் மக்களிடம் கூறவேண்டும்,'' என்றார் ராஸின். போலியோ நோயால் பாதிக்கப்பட்ட கடைசி நபர்களை 2018–19 ஆண்டு பார்க்கும் என்ற நம்பிக்கையுடன் இருக்கிறார். அதன்பிறகு ''அடுத்த மூன்று ஆண்டுகளில் இந்த உலகம் போலியோ இல்லாததாக மாறிவிடும் என WHOஆல் சான்றளிக்கப்படும் நிலை வரும்'' என நம்பிக்கை தெரிவித்தார்.

ரொட்டேரியன்களாக இணைந்து பணியாற்றுவதன் திறனை குறைத்து மதிப்பிட வேண்டாம், 200 நாடுகளில் பரவியிருக்கிற 1.2 மில்லியன் நிலையான அமைப்புகள், உலக நன்மைக்காக ஆபத்துகால மீட்பு உட்பட, சமூகத் திட்டப்பணிகளை செயல்படுத்தி இருக்கிறார்கள். ஹைத்தி நிலநடுக்க (ஜனவரி 2010) இடிபாடுகளுக்குள் புதைந்து போன, மகளை இழந்த ஒரு கலங்கிய அப்பாவிற்கு நியூசிலாந்தில் நிம்மதியைத் தருவதாகட்டும் அல்லது ''புதிய பள்ளி கட்டிடங்கள், கழிவறைகள், புதிய தண்ணீர் மற்றும் கழிவுநீர் வசதிக்காக எனக்கு நன்றி சொன்ன'' மலாவியில் புன்சிரிப்புடன் இருந்த ஒரு ஆப்பிரிக்க குழந்தையாகட்டும், இந்த உலகத்தை எப்போதும் ஒரு பாதுகாப்பான இடத்தில் ரோட்டரி வைக்கிறது.

இருப்பினும், ''ரொட் டேரியன்களின் உள்ளத்தைத் தட்டியெழுப்புவதற்கான'' அவசியத்தையும், சங்கங் களை உருவாக்குவது பற்றியும் வலியுறுத்திச் பேசினார், இதனால் தாக்கத்தை ஏற்படுத்தும் திட்டப்பணிகளைச் செய்ய முடியும். எனவே, உந்து சக்தியாக இருங்கள் 2018–19 கான இலட்சிய வாசகத்தின் லோகோவில் ஒரு அலை இயற்கையின் சக்தியான நீடித் திருக்கக்கூடிய மாற்றத்திற்கு செல்கிறது.

''எதிர்காலத் தலைவர்கள் தங்களுக்குத் தெரியாத தகவல்களை இந்த செயல்பாடு மூலம் மட்டுமே பெறுகிறீர்கள் என்பதைப் போல், கற்றல் பயிற்சி யைத் தொடங்க வேண்டும். வாழ்க்கையை, எப்படி கற்றுக்கொள்கிறீர்கள் என்பதைப் பொறுத்தும், அதை நடைமுறையில் பயன்படுத்துவதைப் பொறுத்தும் இருக்கிறது'' என்று RI இயக்குனர் சி பாஸ்கர் வலியுறுத்தினார்.

பயிற்சி வகுப்புகளை நடத்துவதால் ஏற்படும் செலவுகளால் சில ரொட்டேரி யன்கள் கலக்கமடைவார்கள், அதற்கு ''திட்டப்பணிகளைச் சிறப்பாக செயல்படுத்த, உங்கள் திறன்களைக் மேலும் பலப்படுத்துவதற்காக வாய்ப்புகளை வழங்குவதால் பயிற்சிகளுக்கு பணம் செல வழிப்பது ஒரு மூலதனம் தான்,'' என்று கூறினார்.

PETS ஒரு சாமானிய நபரின் தலைமைப்பண்புகள் மூலம் மேம்படுத்துகின்ற தனித்துவமான பயிற்சித்திட்ட மாகும், தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் தங்கள் உறுப் பினர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும் என்பதைக்

குறிப்பிட்டார். "உங்களிடம் செயல்படுத்த ஒரு நல்ல திட்டம் இல்லையென்றால், 365 நாட்கள் 365 நொடிகள் போல பறந்துவிடும். இலட்சியத்தையும், எண்ணங்களையும் பகிர்ந்துகொண்டு, நல்ல குழுவை உருவாக்குங்கள்."

சங்கப் பொறுப்பாளர்களின் தேர்வுக்கான தகுதி, திறமையின் அடிப்படையில் இருக்க வேண்டும். அவர்களுக்கு DTA (District Training Assembly)யில் போதிய பயிற்சியும் தேவை. "தங்கள் பொறுப்பாளர்களை திறமை அடிப்படையில் தேர்ந்தெடுத் தாலே சங்கத் தலைவர்கள் 70 சதவீத வெற்றியுடன் தொடங்கலாம், மேலும் DTA பயிலரங்குகளில் பங்கெடுக்க விருப்பமில்லாதவர்களை நீக்குங்கள்" என்றும் சொன்னார்.

இலங்கையிலிருந்து வெறும் 32 சங்கங்களாக இது பிரிக்கப்பட்ட நாளிலிருந்து, மாவட்டம் 3000-த்தின் வளர்ச்சியை நினைவு கூறுகையில், அது RIDயின் சொந்த மாவட்டம் "இந்த மாவட்டம் வலிமையடைந்துள்ளது, ஒரு ஒழுங்கு முறையுடன் இப்போதுள்ளது, அதன் செயல்பாட்டு நிலைகள் புதிய உயரத்தை தொட்டுள்ளது, என்றால் பாராட்டுகளெல்லாம் PDGகள் மற்றும் முன்னாள் தலைவர்களுக்கே சேருகிறது, அவர்கள் தங்களுடைய நேரம் மற்றும் சக்திகளை அவர்களின் சங்கங்களை வடிவமைப்பதிலேயே செலவிட்டனர்." என்றார்.

சீருடையில் ரொட்டேரியன்களின் நீண்ட அணிவகுப்பை பார்த்த RIPE ராஸின் ஆச்சரியப்பட்டார், "புதிய சங்கப் பொறுப்பாளர்களால் பின்பற்றப்படும் ஒழுக்கத்தை மட்டுமே இது குறிக்கிறது," என்று சி. பாஸ்கர் குறிப்பிட்டார். நுணுக்கமான திட்டமிடலால் PETSஐ செயல்படுத்தியதற்காக DGE RVN கண்ணனை பாராட்டினார்.

D 3232யின் PETS நிகழ்ச்சியில் பேசுகையில் RID சி. பாஸ்கர், இனிமேலும் உறுப்பினர் சேர்க்கையை அதிகப்படுத்துவதன் மூலம், இந்த மண்டலம், RI போர்டில் அதிகமான இயக்குனர்களால் குறிக்கப்படலாம். அடுத்த இரண்டு ஆண்டுகளில் 4,200 ஆக இருக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்க இந்த மாவட்டம் எதிர்பார்க்கப்படுகிறது. "ரோட்டரியில் ஒரு மிகப்பெரிய சவால், அதன் தலைவராக இருந்து சங்கத்தை வழிநடத்துவது தான். ஒரு சங்கத் தலைவர் குறைவாக பேசி, கூட்டங்களிலும் திட்டப்பணிகளிலும் மற்றவர்களை பங்கேற்க அனுமதித்து, வளர்ச்சிக்கான புதுமையான யோச னைகளை வெளிப்படுத்த அவர்களை ஊக்குவிக்க வேண்டும்." பொதுத் தோற்றத்தை ரோட்டரி பெறுவதை புதுமையான திட்டப்பணிகள் உறுதி செய்யும்.

### ஆண்-பெண் வேற்றுமை

பெண் ரொட்டேரியன்களின் எண்ணிக்கையை ஆப்பிரிக்காவின் 49 சதவீதத்துடன் ஒப்பிடும்போது 11 சதவீத பெண் ரொட்டேரியன்கள் மட்டுமே இந்தியாவில் இருக்கிறார்கள் என்றார் பாஸ்கர். "பாகிஸ்தானில் ஒரு பெண் ஆளுநராகவும், பங்களாதேஷில் ஒரு பெண் DGE ஆக இருக்கிறார்கள்; நமது மண்டலத்தில் அதிகமான பெண் உறுப்பினர்கள், ஆளுநர்கள் தேவை. பெண் உறுப்பினர்களுக்கு அழைப்பு



D 3000ன் PDGs *மற்றும்* 2018–19 *சங்கத்தலைவர்களுடன்* RIPE *பேரி ராஸின்,* RID C *பாஸ்கர்,* DG *கோபாலகிருஷ்ணன்,* DGN RVN *கண்ணன்*




*PDG Sv Rm ராமநாதன் அவர் மனைவி நல்லமைமையுடன் RIPE பேரி ராஸின், RID C பாஸ்கர், DGE பாபு பேரம்.*



விடுத்து, நிதி மேலாண்மையில் பங்கேற்கவும், தலைமை பதவிகளை வகிக்க ஊக்கப்படுத்தவேண்டும்,'' என்றார்.

End Polioக்கான தொகுப்பு நிதியாக ரொட்டேரியன்கள் ஒவ்வொருவரும் ரூ.1000, கொடுக்க நடைமுறைப்படுத்தப்படும் என்றார் DGE பாபு பேரம். D 3000 மாநாட்டில் பேசுகையில், 27 வயதுள்ள மாவட்டம் ஒரு ஆற்றல்மிக்க குழுவைக் கொண்டிருப்பதாக DGE கண்ணன் சொன்னார், ''ரோட்டரியின் துணையுடன் மக்களை முன்னேற்றவும் அவர்களை வளப்படுத்தவும் கிராமங்களுக்குச் செல்கிறோம், அதனால் அவர்கள் ஒரு மகிழ்ச்சியான கிராமங்களுக்கு மாற்றமடைவார்கள்'' என்றார். இந்த மாவட்டம் 5000 உறுப்பினர்களுடன் 104 ரோட்டரி சங்கங்களைக் கொண்டுள்ளது.

பயிற்சி அமர்வில் பேசுகையில், பிரிக்கப்பட்ட பின்பு முதல் வருடம் D 3232க்கு சிறப்பானதாக அமைந்தது. 104 சங்கங்களும் சேவை திட்டப்பணிகளை சுறுசுறுப்புடன் செயல்படுத்தியது என்று DG ஆர் ஸ்ரீனிவாசன் கூறினார். ''மண்டலம் 5ல் 500 ரொட்டேரியன்களுடன் எங்கள் மாவட்டம் தான் முதல் உறுப்பினராகச் சேர்ந்தது. உத்வேகமும் முன்னணியில் நின்று வழிநடத்தும் ஒரு தலைவரின் பின்னால் அனைத்து உறுப்பினர்களும் அணிவகுக்க வேண்டும்.'' அவருடைய மாவட்டத்தில் உள்ள மூன்று சங்க உறுப்பினர்களின் சராசரி வயது 30க்கு குறைவு தான், மேலும் ''சில சங்கங்களில் புது உறுப்பினர்களுக்கான காத்திருப்புக் காலம் மூன்று வருடங்கள்.''

துபாய் இன்ஸ்டிடியூட்டில் இலட்சிய வாசகத்தை DGE பேரம் நினைவு கூர்ந்தார், உறுப்பினர் சேர்க்கை வளர்ச்சியின் அடுத்த ஆண்டிற்கு 15 சதவீதமாக இருக்கும் என்றார். மேலும் ரோட்டராக்டர்களுக்கு புதிய ரோட்டரி சங்கங்களைத் தொடங்க திட்டமிடுகிறார். ''நம்மிடம் தற்போதுள்ள 150 ரோட்டராக்ட் சங்கங்கள் மூலமும், அடுத்த வருடத்தில் புதிதாக நாங்கள் தொடங்க இருக்கும் சங்கங்கள் மூலமும், ரோட்டராக்டர்கள் மற்றும் கடந்தகால DRRகளுடன் இணைந்து திட்டப்பணிகளை செய்வோம்.''

வரும் ஆண்டில் CSR மானியத்தின் உதவியுடன், ஒவ்வொரு சங்கமும் $15,000 – 20,000 மதிப்புள்ள ஒரு பெரும் தாக்கம் ஏற்படுத்தும் திட்டப்பணியைத் தொடங்கவேண்டும், சமூகத்தில் ஒரு நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்த இது வழிவகுக்கும் என்றார். $5 மில்லியன் மதிப்புள்ள சேவை மற்றும் சமூகத் திட்டப்பணிகளை செயல்படுத்த, வரும் ஆண்டிற்காக TRFல் $2 மில்லியன் இலக்காக DGE நிர்ணயித்துள்ளது அடுத்த இரண்டு வருடங்களுக்கு TRFக்கு $500,000 நன்கொடையை அறிவித்ததற்கு PDG Sv Rm ராமநாதன் அவர்கள் ராஸின் மூலம் கவுரவிக்கப்பட்டார். AKS-நிலை 2 அறக்கட்டளைக்கு மற்றொரு $250,000 நன்கொடையை அறிவித்ததற்கு PDG ஜே பீ கம்தர் அவர்களும் கவுரவிக்கப்பட்டார்.

# பறவைகளின் தாகத்தைத் தணிக்கும் ரோட்டரி சங்கம்

ரஷீதா பகத்

கோடை தகித்து வருகிறது, ஆண்டுதோறும் கோடையில் மிக மோசமாக வாடுவது ராஜஸ்தான் மாநிலம். அந்தப் பாலைவன மாநிலத்தில் குடிமக்களை விட குடிநீரின் விலையும், மதிப்பும் அதிகம்.

பிகானீர் மருதரா ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த 58 உறுப்பினர்கள் சேர்ந்து. மனிதர்களைப் போல பறவைகளின் தாகத்தையும் தீர்ப்பதற்கான நல்ல முயற்சியில் இறங்கியுள்ளனர். பிகானீர் பகுதியில் வசிப்போருக்கு களிமண்ணால் ஆன பாண்டங்களை வழங்கிவருகின்றனர். அந்தப் பாண்டங்களை பால்கனிகள், மாடிகள், வரன்டாக்கள், தோட் டங்களில் வைத்து நீரை ஊற்றினால், தாகத்தால் தவிக்கும் பறவைகளின் தேகத்துக்கு உதவும். இது நான்காவது ஆண்டாக இந்தப் பணி மேற்கொள்ளப்படுகிறது.

இந்தப் பணியை 2015ம் ஆண்டு தொடங்கினோம். அப்போது 400 மட்பாண்டங்களை விநியோகம் செய்தோம். இந்த ஆண்டு ஏற்கெனவே 4,000 பாண்டங்களை வழங்கியிருக்கிறோம்



*பிகானீர் மருதரா ரோட்டரி சங்கத்தினர் பொது மக்களுக்கு மண்பாண்டங்கள் வழங்குகின்றனர்.*

என்று சங்கத்தின் புதிய செயலாளராகப் பொறுப்பேற்கும் ராஜேஷ் பவேஜா கூறினார். இப்படி ஒரு யோசனையை முன் வைத்ததே அவர்தான். இப்பாண்டங்களைத் தயாரிக்க உள்ளூரில் உள்ள மட்பாண்டக் கைவினைஞர்களிடம் கேட்டுக் கொள்வோம். ஒவ்வொரு பாத்திரத்தின் விலையும் ரூ.20. இவற்றை விநியோகிக்கும் பணியில் எங்களது குடும்பத்தின் குழந்தைகள் உள்பட பள்ளிச் சிறுவர்களை ஈடுபடுத்துகிறோம். பறவைகள், விலங்குகள் மீது அக்கறை செலுத்துவதற்கு இளம் குழந்தைகளின் மனத்தில் உணர்வை ஊட்டுவதற்காக இப்படிச் செய்கிறோம். அத்துடன் சேவை மனப்பான்மையையும் ஊட்டுகிறோம் என்றார் அவர்.



கடந்த நான்கு ஆண்டுகளில் நகரில் 10,000 மண்பாண்டங்களை விநியோகம் செய்துவிட்டனர். அவற்றைப் பெற்றவர்கள், அந்த மட்பாண்டங்களை அவ்வப்போது கழுவி, போதிய நீரை தினமும் ஊற்றிப் பயன்படுத்துகிறார்கள். சிலர் பறவைகள் சுலபமாக நீரை அருந்தும் வகையில் வசதியாக மரத்தில் தொட்டியைப் போல் தொங்கவைத்திருக்கிறார்கள் என்றார் பவேஜா.

அப்படியானால், ரோட்டரியின் எல்லா உறுப்பினர்களும் இந்தச் சிறிய மட்பாண்டங்களை வைத்துப் பராமரிக்கிறார்களா... என்று கேட்டபோது, எல்லோரும் செய்கிறார்கள். செய்ய வேண்டும், இது கட்டாயம் என்றார் பவேஜா. வழிபாட்டுத் தலங்களிலும் இந்த மட்பாண்டங்கள் விநியோகம் செய்யப்படுகின்றன. குறிப்பாக மசூதிகளில் வைக்கப்படுகின்றன.

வழிபாட்டுத் தலங்களிலும் இந்த மட்பாண்டங்கள் விநியோகம் செய்யப்படுகின்றன. மசூதிகளில் வைக்கப்படுகின்றன. மசூதிகளில் ரம்ஸான் காலத்தில் இஃப்தர் நோன்பு இருப்போருக்குத்தான் தண்ணீரின் அருமை அதிகமாகத் தெரியும்.




மசூதிகளில் ரம்ஸான் காலத்தில் இஃப்தர் நோன்பு இருப்போருக்குத்தான் தண்ணீரின் அருமை அதிகமாகத் தெரியும் என்றார் பவேஜா.

இந்தத் திட்டம் குறித்து உள்ளூர் பத்திரிகைகள், ஊடகங்கள் நல்லவகையில் வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கின்றன. அண்மையில் Big FM ரேடியோ தொகுப்பாளரை எங்களுடன் அழைத்துச் சென்று இப்பணிகளை விவரித்தோம். அவர் நன்றாக செய்தியை ஒலிபரப்பினர். அவர்கள் அனுப்பிய ஒலிப்பதிவில் நகர மக்களுக்காக ரோட்டரி விநியோகிக்கும் இந்த மட்பாண்டங்களைப் பெற்று, பயன்படுத்தும்படி வேண்டுகோள் விடுத்து, அவர்களுக்கு பறவைகளின் ஆசியும் கிடைக்கும் என்று அறிவித்தோம் என்றார் பவேஜா.

எல்லா பறவைகளுக்கும் தேவை கொஞ்சம் நிழல், கொஞ்சம் நீர்... அவ்வளவுதான்!■

# ரோட்டரி இன்டர்நேஷனல் தெற்காசிய அலுவலகம்

புதிய அலுவலக முகவரி கீழே. தொலைபேசி, ஃபேக்ஸ் ஆகிய எண்கள் மாறவில்லை.

**Rotary International South Asia Office, Pullman / Novotel Commercial Tower, First Floor, Asset No.2, Hospitality District, Aerocity (Near IGI Airport), New Delhi 110037**

ரோட்டரி சங்கத்தினர் தங்களது கூட்டங்கள், பயிலரங்குகளை நடத்துவதற்கென்று 35 இருக்கை கொண்ட அறை தயாராகியுள்ளது. அறையில் கூட்டம் நடத்து வதற்குப் பதிவு செய்வதற்கான நடைமுறைகள் விரைவில் அறிவிக்கப்படும். மேலும், இணையதள வசதி யுடன் கூடிய ரொட்டேரியின் தொழில்நுட்ப மையம் (The Rotarian Tech Center) அமைக்கப்படும். அதன் மூலம் அந்த மையத்துக்கு வரும் ரோட்டரி அமைப்பினர் ரோட்டரி குறித்த கணக்குகள் (My Rotary accounts), அது தொடர்பானவற்றை அறிந்து கொள்ளலாம். அதற்கான இணையதளம்: www.rotary.org. உறுப்பினர் கட்டண நிலுவையையும், நன்கொடையையும் தி ரோட்டரி ஃபவுண்டேஷன் (இந்தியா) செலுத்தலாம்.

★ தி ரோட்டரி ஃபவுண்டேஷனுக்கு நன்கொடை மற்றும் பணம் செலுத்தவதற்கான அறிவுரைகள்:

அ) இந்திய நன்கொடையாளர்கள் ஆன்லைன் மூலம் செலுத்துவதற்கு.
இந்தியாவில் உள்ள நன்கொடையாளர்கள் ரூபாய் வடிவில் ஆன்லைன் வழியாகவும் இந்தியாவில் உள்ள ரோட்டரி ஃபவுண்டேஷன் மூலமாகவும் நிதி செலுத்தலாம். அதற்கான இணையதளம் : www.rotaryfoundationindia.org. அத்துடன் சர்வதேச ரோட்டரி இணையதள முகவரி: www.rotary.org.

ரோட்டரி உறுப்பினர்களும், உறுப்பினர் அல்லாதோரும் நிதிப் பங்களிப்பை மேற்கொள்ளலாம். நன்கொடை அளிப்பதற்கு வருமான வரிச் சட்டம் 80G பிரிவின் கீழ் வரிச் சலுகை உண்டு.

ஆ) காசோலை, கேட்பு வரைவோலை (Demand Draft) மூலம் நிதிப் பங்களிப்புச் செலுத்துவதற்கு.

- காசோலை அல்லது கேட்பு வரைவோலையை "Rotary Foundation (India)" என்ற பெயரில் புது தில்லியில் செலுத்தத் தக்கதாக இருக்க (payable at New Delhi) வேண்டும்.
- நன்கொடையாளரின் பெயர், முகவரி, அவரது நிரந்த வருமானவரிக் கணக்கு எண் (Permanent Account Number) ஆகியவற்றை உரிய படிவத்தில் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.
- நிதி அளிப்பவரது பெயரில் தான் ரசீதுஅளிக்கப்படும்.
- அதைப் போல் நிதி கொடுப்பவரின் பெயரில் ஒரு கேட்பு வரைவோலை, பே ஆர்டர் ஆகியவற்றுக் கும் ரசீது தரப்படும். ஒவ்வொரு டிடி, பே ஆர்டருக் கும் யார் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதோ அவரது பெயரில் ரசீது தரப்படும்.

★ நன்கொடைகளில் மாற்றம் குறித்த தி ரோட்டரி ஃபவுண்டேஷன் வழிகாட்டுதல்கள்:

★ குறிப்பிட்ட பிரிவுக்காகக் கொடுக்கப்பட்ட நன் கொடையை இன்னொரு பிரிவுக்காக மாற்றுவதை ஏற்க இயலாது என்று கடந்த ஆண்டு அறிவித்திருந்தது. வரும் 2018, ஜூலை 1ம் தேதி முதல் நன்கொடை அளிக்கப்பட்ட நாளிலிருந்து 90 நாட்களுக்குள் அதை மாற்றிக் கொள்ளலாம் என தற்போது அனுமதிக்கப்படுகிறது. அந்தக் கால இடைவெளியும் (அதாவது 90 நாட்களும்) ஒரே நிதி ஆண்டிலேயே அமைந்திருக்க வேண்டும். இந்த வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவது ஆண்டுதோறும் மேற்கொள்ளப்படும் கணக்குத் தணிக்கையும் மாவட்ட நிதியையும் முறையாகப் பராமரிக்க உதவும்.

- மரம் நடும் சவால்: மரம் நடுவது சுற்றுச்சூழல் பாது காப்புக்குச் சிறந்த செயல்களில் ஒன்று. உங்களது ரோட்டரி பணிகளில் கூடுதலாக இடம்பெறும் சான்றாகவும் அமையும். அப்படி நட்ட மரங்கள் வளரும் வரையில் அவற்றைப் பாதுகாப்பதிலும் கவனம் எடுத்துக் கொள்ளுங்கள். மாற்றத்தை உருவாக்குதல் (Making A Difference) என்ற குறிக்கோளின்படி நல்ல புவியைப் பராமரிக்கும் சவாலை எதிர்கொள்ள எத்தனை ரோட்டரி உறுப்பினர்கள் வந்திருக்கிறார்கள் என்பதை அறிவதற்கு ரோட்டரி தலைவர் இயான் ரிஸில்லி தயாராக இருக்கிறார். ரோட்டரியின் பதிவில் மரங்கள் நடப்பட்டது குறித்த விவரங்களைப் பதிவு செய்யுங்கள்.
- ரோட்டரி சங்க அளவிலும் உலகளாவிய மானியத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் ரோட்டரி சங்கம் பல்வேறு கார்ப்பரேட் கூட்டாளிகளுடன் பணியாற்றுவதில் பெருமை கொள்கிறது.

கால அவகாசம் குறித்த கவனத்துக்கு:

- அறிக்கையிடுவதற்கான கால அவகாசம்: சங்கத்தின் செயல்பாடுகள் (31.03.2018) குறித்த இடைக்கால அறிக்கையை மே 31, 2018, தேதிக்குள் அளிக்காவிட்டால் ஜூன் 1ஆம் தேதி அந்த மானியம் கூடுதல் நிலுவையாகக் கருதப்படும். மானியக்கொடை அளிப்போர் ஃபவுண்டேஷன் மானியத்துக்கான அறிக்கையை நிலுவையாக வைத்திருந்தால், புதிதாக மானியம் கோரி அனுப்பப்படும் விண்ணப்பங்களை ஃபவுண்டேஷன் ஏற்காது. மேலும் அறிந்துகொள்ள: http://www.rotaryfoundationindia.org/reporting
- 2019-20 ஆம் ஆண்டுக்கான ரோட்டரி அமைதி ஃபெலோஷிப் திட்டத்துக்கான விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டு வருகின்றன. அது தொடர்பாக: https://my.rotary.org/en/peace-fellowship-application. இதற்கான கால அவகாசம் மே 31, 2018. பரிசீளத்த விண்ணப்பங்களை மாவட்ட ரோட்டரி அமைப்புகள் இசைவு தெரிவித்து, ஜூலை 1ம் தேதிக்குள் TRFக்கு அனுப்ப வேண்டும். மின்னஞ்சல்: rotarypeacecentersrotary.org ■

# மாவட்ட மாநாடு - 3090

ரோட்டரி செய்தி குழு



*பஞ்சாப் வனத்துறை மற்றும் வனவிலங்குப் பாதுகாப்பு அமைச்சர் சாது சிங் தரம்சோத் அவர்களை மாநாட்டில் கௌரவிக்கின்றனர்.*

ரோட்டரி 3090 மாவட்ட மாநாடு (District Conference) ஹிமாசலப் பிரதேசம் மலைப் பகுதி நகரான சைலில் அமைந்த தரிகா ஜங்கிள் விடுதியில் கோலாகலமாக நடைபெற்றது. அமைதிக்கான நிகழ்வு (Abode of Peace) என்ற தலைப்பிலான இந்த மாநாட்டில் மகளிர்க்கு அதிகாரமளித்தல், உடல் உறுப்பு தானம், சமூக சேவை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவை தொடர்பான அமர்வுகளுடன் கொண்டாட்டங்கள், கேளிக்கை நிகழ்ச்சிகள் ஆகியவையும் இடம்பெற்றன.

'இப்படி ஒரு மாநாடா?' என்று மற்றவர்களே வியந்து பின்பற்றும் வகையிலான இந்த மாநாட்டுக்கு மாவட்ட ஆளுநர் பாக் சிங் பன்னு தலைமை வகித்தார். மிகவும் பகட்டாக நடைபெற்ற நிகழ்வுகளுக்கு பஞ்சாப் மாநிலம் நாபா ரோட்டரி சங்கம் ஏற்பாடு செய்தது. பர்வாலா ரோட்டரி சங்கம், பட்ரான் மிட் டவுன் ரோட்டரி சங்கம், சமனா ரோட்டரி சங்கம் ஆகியவற்றின் ஆதரவுடன் இந்த மாநாடு நடைபெற்றது.

மாநாட்டின் தொடக்க நிகழ்ச்சியில் பஞ்சாப் வனத்துறை மற்றும் வனவிலங்குப் பாதுகாப்பு அமைச்சர் சாது சிங் தரம்சோத் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார்.

மாநாட்டின் முதல் நாள் 34 ஆண்டு கால நினைவலைகள் என்ற நூலின் மின்னூல் வெளியிடப்பட்டது. அதை ரோட்டரி சங்க உறுப்பினர் தரம் பால் வடிவமைத்துள்ளார். இந்த மின்னூலில் மாவட்ட முன்னாள் ஆளுநர்கள் குறித்த நினைவலைகள், சமூகத்திற்கு ஆற்றிய சேவைகள் விவரங்கள் கொண்ட பதிவுகள், செய்திகள் இடம்பெற்றுள்ளன.

உடல் உறுப்பு தானத்தின் அவசியம், அதற்கான நடைமுறைகள் குறித்து ரோட்டரி சங்க உறுப்பினர் டாக்டர் சந்தீப் சவுகான் விரிவாக விளக்கினார். நிகழ்ச்சியில் பேசிய தரம்சோத் ரோட்டரி சங்கம் சமூக மேம்பாட்டுக்காக தன்னலமற்ற சேவைகளை ஆற்றுவதைக் குறிப்பிட்டு பாராட்டினார்.

இரண்டாம் நாள் ரோட்டரி சங்கத்தின் முக்கிய அம்சங்கள் விவாதிக்கப்பட்டன. உறுப்பினர் சேர்க்கை, தி ரோட்டரி ஃபவுண்டேஷன், பள்ளியில் தூய்மை கடைப்பிடித்தல் (WinS) ஆகியவற்றின் அம்சங்கள் விவரிக்கப்பட்டன. நிகழ்ச்சியில் பங்கேற்ற ரோட்டரி சங்க உறுப்பினர் குல்பஹார் சிங் ரோட்டரி தலைமைப்பண்பு நிறுவனம் (Rotary Leadership Institute) குறித்துப் பேசினார். மாவட்ட ஆளுநர் பன்னு, பால் ஹாரிஸ் மார்பளவுச் சிலையை அனைத்து ரோட்டரி சங்கங்களின் வளாகங்கள், கட்டடங்களில் வைப்பதற்காக விநியோகம் செய்தார்.

வாழ்க்கைத் துணைகளுக்கென தனி நிகழ்வும் இடம்பெற்றது. ஆளுமை மேம் பாடு தொடர்பான பல்வேறு அம்சங்கள் இடம்பெற்றன. ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த டாக்டர் வனிதா அஹுஜா மகளிர்க்கு உத்வேகம் அளிக்கும் விதத்தில் அழகான சொற்பொழிவு நிகழ்த்தினார். அதையடுத்து, ரோட்டரி இளைஞர் தலைமை விருதுகள் (RYLA) குறித்த உரை நிகழ்த்தப்பட்டது. நெறிகள் குறித்து ஏஜி தேவிந்தர் சிங் பேசினார். மன ஓய்வு குறித்து தனி அமர்வு நடைபெற்றது. அதில் மன அழுத்தத்தைக் கையாள்வது குறித்து பிரம்ம குமாரி ஈஸ்வர்ய அறக்கட்டளை உறுப்பினர்கள் அழகாக விளக்கினர்.

நிறைவு நாளில், PDG S R பாஸ்ஸி மாநாட்டின் தீர்மானங்களைப் படித்தார். அவற்றை ரோட்டரி உறுப்பினர்கள் ஒருமித்த குரலில் நிறைவேற்றினர். நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்த குழுவினரை DG பன்னு பாராட்டினார். அத்துடன் அவர் சிம்லா ரோட்டரி சங்கத்திற்கு பால் ஹாரிஸ் மார்பளவு உருவச் சிலை வழங்கினார். அச்சிலை மால் ரோடில் அமைந்துள்ள அலுவல வளாகத்தில் நிறுவப்படும்.

ஹிமாசலப் பிரதேசம் ஜங்கிள் ஓய்வு இல்லத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 400க்கும் மேற்பட்ட ரோட்டரி உறுப்பினர்களும் அவர்களது வாழ்க்கைத் துணைவர்களும் பங்கேற்று இனிய நினைவுகளுடன் திரும்பினர்.■

# வெப்ப வாயு பலூன்களில்




ஒரு விடுமுறைக்கு துருக்கிக்குச் செல்வதாக இருந்தால், ஆட்டமன் பேரரசின் தலைநகரான வரலாற்றுச் சிறப்புமிக்க இஸ்தான்புல் நகரையும் (முந்தைய பெயர் கான்ஸ்டாண்டி நோபிள்) சேர்க்கவும். ஆனால் தென்மேற்கு துருக்கியின் அனடோலியன் பகுதியில் கேப்படோசியாவில் செங்குத்தான, மெலிந்த மற்றும் இயற்கையாக அரிக்கப்பட்ட பாறைகளுக்கு மேலே நிகழ்த்தப்படும் வெப்ப வாயு பலூன் பயணத்தின் புகழ்பெற்ற படங்களைப் பல வருடங்களாக பார்த்திருப்பதால், எங்களுடைய பயணத் திட்டத்தில் பலூன் அனுபவம் என்பது முக்கியமாக இருந்தது. துருக்கி மொழியில் கேப்படோசியா என்றால் ‘அழகிய குதிரைகளின் நகரம்‘ என்று பொருள்.

ஆனால் ஒரு கூடுதலான பரிசாக ‘குகை விடுதியில்’ தங்க வாய்ப்பு கிடைத்தது, இந்த பிராந்தியத்தில் இது நிறைய காணப்படுகிறது. இவை உண்மையிலேயே குகைகளைக் குடைந்து உருவாக்கப்பட்டுள்ளன, மேலும் இவை நவகால சௌகரியத்துடன் முற்காலத்தில் வாழ்வது

குகை விடுதியில்’ தங்க வாய்ப்பு கிடைத்தது, இந்த பிராந்தியத்தில் இது நிறைய காணப்படுகிறது. இவை உண்மையிலேயே குகைகளைக் குடைந்து உருவாக்கப்பட்டுள்ளன.

போன்ற உணர்வைத் தருகின்றன.

இஸ்தான்புல் சபீஹா கோக்சே விமானநிலையத் திற்கு விமானத்திலும் அங்கிருந்து உள்ளூர் விமானத்தில் ஒரு மணிநேர பயணத்தில் ஊர்கப் நகரத்திற்கு அருகில் உள்ள கேசெரிக்கும் அழைத்துச் சென்றனர், அதன்பின் ஒரு மணிநேர கோச் பயணத்திற்குப் பின் வந்து சேர்ந்தோம். ஆனால் நாங்கள் வந்தடைந்தபோது கிட்டத்தட்ட நள்ளிரவு ஆகிவிட்டது, சபீஹா விமானநிலையத்தில்



# ஃபேரி சிம்னிக்களுக்கு மேலே பயணம்

பர்வேஸ் பகத்

கொடுமையான 6 மணிநேர காத்திருத்தலுக்குப் பிறகு, நாங்கள் பெஸ்ட் வெஸ்டர்ன் பிரீமியம் ஹோட்டலில் வந்திறங்கினோம், எரிமலையின் பல மில்லியன் ஆண்டுகளின் செயல்பாட்டால் ஏற்பட்டிருந்த அழகான நில அமைப்பு மற்றும் பாறை உருவாக்கம் ஆகியவை நிறைந்த மாயாஜால சுற்றுச்சூழல் பற்றி எங்களுக்கு எதுவும் தெரிந்திருக்கவில்லை.

இந்த பிராந்தியத்தில் கேசெரி, நிவிஷிர், ஊர்கப் மற்றும் ஆர்டஹிசர் போன்றவை முக்கிய நகரங்களாக இருக்கின்றன. ஏப்ரல் மாதத்தில் பனிகள் சூழ்ந்த சிகரங்கள் கொண்ட, நகரத்திலிருந்து 3,900 உயரத்தில் அமைந்துள்ள மடிந்த எரிமலையாகிய எர்சியஸின் அடிவாரத்தில் கேசெரி அமைந்துள்ளது.

எங்களுடைய முக்கிய கவனம் வெப்பவாயு பலூனில் பறப்பது தான், உங்களின் சுற்றுலா ஏற்பாட்டாளரையும், பலூனின் அடிப்பகுதியுடன் இணைக்கப்பட்ட விக்கர் பேஸ்கட்டில் ஏற்றப்படும் ஆட்களையும் பொறுத்து இதற்கான கட்டணம் $175லிருந்து 250 வரை மாறுபடக்கூடும்.

## பொழுது புலர்தல்

அதிகாலை 4 மணிக்கெல்லாம் எழுந்து தூக்கக்கலக்கத்தில் 4.30 மணிக்கு எங்களை ஹோட்டலில் இருந்து அழைத்துச் சென்றனர்; அங்கு வெறும் 8 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் உடலைத் துளைக்கும்

கடும்குளிர் நிலவியது. 30 நிமிட பயணத்தில் பலூன் இயக்குபவரின் அலுவலகத்தைச் சென்றடைந்தோம்-இந்தப் பகுதியில் அவ்வாறான அலுவலகங்கள் நிறைய இருக்கின்றன-அங்கே மிதமான காலை உணவு வழங்கப்பட்டு, பறக்கும் இடத்திற்கு கூட்டிச் செல்லப்பட்டோம். சூரியன் ஏற்கனவே உதித்திருந்தது, வானத்தில் பறந்துகொண்டோ அல்லது பறப்பதற்குத் தயாராகவோ இருக்கிற குறைந்தபட்சம் 100 பலூன்களையாவது தொடுவானத்தில் நாம் பார்க்கலாம்.

நாங்கள் எங்கள் பலூனை நோக்கி நடந்தோம், பலூனுக்குள் காற்றை (புரப்பேன் வாயு) செலுத்தும் ஒரு காத்தாடி போல இருக்கும் உயரமான பொறியிலிருந்து 5-மீட்டர் இடைவெளி விட்டு இருக்க வேண்டும் என எங்களுக்கு ஏற்கனவே விவரிக்கப்பட்டது. அதேவேளையில் ஒரு பர்னரால் வாயு சூடேற்றப்பட்டது; இந்த சூடாக்கப்பட்ட புரப்பேன், பலூனை உயரே பறக்க வைக்கிறது. ஆனால் பலூனை பறக்க வைப்பது என்பது மிகவும் நுட்பமான சிக்கலான பணி, எங்களுடைய பைலட் மெஹ்மெத் அவருடைய 'விண்வெளிக் கப்பலை' நம்பிக்கையுடனும் திறமையுடனும் வானத்தில் செலுத்தினார். ஆனால் பலூன்கள் தரையில் இறங்கும் போது எச்சரிக்கையுடன் இருக்குமாறு எங்களுக்கு யாரும் சொல்லவில்லை. 'பேஸ்கட்டின் பக்கவாட்டில் அமைக்கப்பட்ட பக்க இணைப்பு வார்களைப் பிடித்துக்கொள்ளுங்கள், உங்கள் முட்டியை மடக்கியிருக்கவும், ஏனென்றால் இந்த பேஸ்கட் பக்கவாட்டில் திரும்பித் தான் தரை இறங்கும், அதன்பின்பே இது நேராகத் திருப்பப்படும்' என்று எங்களுக்குச் சொல்லப்பட்டது.

அது சுலபமானது போல தோன்றியது. எல்லாவற்றையும் விட, எங்களுடைய 60-நிமிட பயணம் தொடங்க ஆவலுடன் காத்திருந்தோம். சீக்கிரத்திலேயே பலூன் உயர ஆரம்பித்தது, கற்பனைக்கு எட்டாத படி மென்மையாக மேலே எழும்பியது, 15 நிமிடங்களுக்குள் பெரிய பள்ளத்தாக்கின் கூர்மையான பாறைகளுக்கு மேலாக இருந்தோம். இப்போது, வானம் முழுவதும் நூற்றுக்கணக்கான பலூன்களால் புள்ளி வைக்கப்பட்டது போல இருந்தது, கீழே தெரிந்த காட்சி மனத்தைக் கொள்ளை கொண்டது! ஒட்டுமொத்த பள்ளத்தாக்கும் அதன் பாறை அமைப்புகள், புறாக்கூடு குகைகள், மற்றும் காளான் வடிவ ஃபேரி சிம்னிக்கள் போன்றவற்றின் மீது அதிகாலை சூரியன் தன் பொன்னிறக் கதிர்களால் ஒளி பாய்ச்சினான்.



*புரோப்பேன் வாயு பலூனில் நிரப்பப்படுகிறது.*




TURCA

## ஃபேரி சிம்னிக்கள்

எவ்வித தெய்வீக செயல்களும் இல்லாமல் இருந்தாலும் கூட, ஃபேரி சிம்னிக்கள் உருவானதற்கு பின்னால் ஒரு சுவாரஸ்யமான கதை இருக்கிறது! சிம்னிக்கள் புவியியல் செயல்பாட்டின் விளைவாக உருவானவை ஆகும், பல மில்லியன் வருடங்களுக்கு முன்பு எரிமலை வெடிப்பினால் இந்த பகுதி முழுவதிலும் குழம்பு மழை பொழிந்தது, அது பின்பு மெதுவாக இறுகி எரிமலைப் பாறை அடுக்கினால் மூடப்பட்ட ஒரு மென்மையான, துளைகளைக் கொண்ட பாறைகளாக மாறியது. பல ஆயிரக்கணக்கான ஆண்டுகள் அரிக்கப்பட்டதன் காரணமாக, மென்மையான பகுதி தேய்ந்து போய், பல்வேறு வடிவங்கள் மற்றும் அளவுகளைக் கொண்ட தூண்கள் உருவாயின, இவற்றில் பல 130 அடி வரை உயரம் கொண்டவை. கடின எரிமலைப்பாறை மெதுவாக அரிக்கப்பட்டு, ஒன்றன் மீது ஒன்றாக அமைந்த காளான் வடிவ தொப்பி போல மாறியது. மாயாஜாலத்துக்கு சற்றும் குறைவில்லாத தோற்றத்தைக் கொண்டிருப்பதால் இவை ஃபேரி சிம்னிக்கள் என்று அழைக்கப்படுகிறது.

பள்ளத்தாக்கின் மீது மெதுவாக தனது பயணத்தை தொடர்ந்தது இந்த பலூன், ஒவ்வொரு முறையும் மெதுவாக கீழிறங்கத் தொடங்க ஆரம்பிக்கையில், பைலட் வெப்பத்தைத் தூண்டிவிட்டு மறுபடியும் பலூனை உயர எழும்ப வைத்தார். உட்புறமாக கொடுக்கப்பட்ட கயிறுகளை திறம்பட இழுத்து மெஹ்மெத் பலூனை திறமையாக முன்னோக்கிச் செலுத்தினார், மென்மையான காற்று துணைபுரிய பறந்து கொண்டிருந்தோம் - அன்றைய தினம் ஒரு அமைதியான நாளாக அமைந்ததால் நாங்கள் அதிர்ஷ்டம் பெற்றிருந்தோம், வானிலை மோசமாக இருந்தால் தேவையில்லாத குலுங்கல்களும் அதிர்வுகளும் இருந்திருக்கும். வானிலை மோசமானதாகவும் பலமான காற்று வீசும் நாளாகவும் அமைந்தால் பலூன் பயணம் ரத்துசெய்யப்பட்டு பணம் திருப்பி வழங்கப்படும்.

கடல் மட்டத்திலிருந்து 1,500 அடி உயரத்தில் இருக்கிறோம் என்று பைலட் அறிவித்து விட்டு, “டைட்டானிக் பற்றி கேள்விபட்டிருக்கிறீர்களா?” என்று விளையாட்டாக பயமுறுத்தும் தொனியில் கேட்டார். பெண்கள் பதற்றத்துடன் இருப்பதைப் பார்த்து, “முதல் தடவையாக பறக்கிறீர்களா?” என்று கேட்டார். ஆமாம் என்று தலையாட்டிய போது, அவர் சொன்னார் ‘எனக்கு இது இரண்டாவது தடவை!” என்று.

சில தடவைகள் பலூனை, சிம்னிக்களின் மேல் பகுதிக்கு 20-50 அடிக்கு நெருக்கமாக இறங்க அனுமதித்தார், அடிக்கடி இந்த பள்ளத்தாக்கின் ஆழத்திற்கு எங்களை அழைத்துச் சென்றார். ஆனால் நாங்கள் பயப்படுவதற்கு அவகாசமே கொடுக்காமல், வானிலை தெய்வங்கள் எங்களுக்கு சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்திருந்தன.

## மெதுவாக தரையிறங்குதல்

வெகு சீக்கிரத்தில், சமதளத்தைத் தொடுவதற்கான நேரம் வந்தது, தரையிறங்குதல் என்பது முற்றிலும் ஒருங்கிணைப்பாளர்களின் பணியாக விளங்குகிறது. பலூன் கீழே வருவதைப் பார்த்தவுடன் ஒரு நீண்ட லாரி ஒரு சில நிமிடங்கள் பின் தொடர்ந்து வந்தது, நான்கு பலசாலிகள் பேஸ்கட்டிலிருந்து கயிறைப் பிடித்து தொங்கிக்கொண்டே மெதுவாக பலூனை கீழே இறக்கி லாரியின் கேரேஜ் மீது துல்லியமாக தரையிறங்கச் செய்தனர். இறுக்கி பிடிக்க வேண்டிய அல்லது குந்தி உட்கார்ந்திருக்க வேண்டிய அவசியமே எழவில்லை, நாங்கள் நின்றுகொண்டிருந்த நிலையிலே தரையிறக்கம் நடந்தது, ஒவ்வொருவராக பேஸ்கட்டிலிருந்து வெளிவர அவர்கள் உதவினர்.

உறுதியளித்தவாறு, சாம்பெயின் நிகழ்ச்சி தொடங்கியது. சம்பிரதாயப் படி பாட்டிலைத் தட்டி திறக்கையில், இந்த சாம்பெயின் ஆல்கஹால் இல்லாதது என்று கேப்டன் அறிவித்து உற்சாகத்தைக் குறைத்தார்! ஆனால் அனைவரும் அதை ரசித்துக் குடித்தோம். மற்றுமொரு ஆச்சர்யம் எங்களுக்காகக் காத்திருந்தது; எங்கள் பேஸ்கட்டில் இருந்த ஒரு தேனிலவு ஜோடிக்காக கேக் வரவழைக்கப்பட்டு வெட்டப்பட்டது. எங்கள் அனைவருக்கும் ஒரு மெடல் வழங்கப்பட்டு இந்த அனுபவம் இனிதே முடித்துவைக்கப்பட்டது!







*பாதாள நகரத்தின் நுழைவாயில்.*

## பாதாள நகரங்கள்

அடுத்த நாள் கேமக்ளி மற்றும் தேரின்காயு ஆகிய பாதாள நகரங்களுக்கு நாங்கள் சென்றோம், அவை உலோக காலத்தில் ட்ரோக்லோடைட்ஸ்களால் (குகையில் வாழ்பவர்கள்) உருவாக்கப்பட்டவையாகும், பின்னர் மூன்றாம் நூற்றாண்டில் ரோமானிய மன்னர்களுக்கு பயந்து தப்பி ஓடிய கிறிஸ்தவர்களால் இது கைப்பற்றப்பட்டது. நாங்கள் குனிந்தவாறே உயரம் குறைந்த நீண்ட சுரங்கத்தில் சென்றோம், எல்லா நேரமும் தலை இடித்துக்கொள்ளாதவாறு கவனத்துடன், சமையலறை, படுக்கையறை, தொழுவங்கள் மற்றும் தேவாலயங்கள் போன்றவை பற்றிய விவரங்களைத் தெரிந்து கொண்டோம்.

தெரின்காயுவில் 160 சதுர கிமீ-க்கும் அதிகமான பரப்பளவில் ஏறக்குறைய 200 சிறிய 'கிராமங்கள்' உள்ளன. அவை சுரங்கப் பாதைகள், மறைவான வழிகள், இரகசிய அறைகள் போன்றவற்றைக் கொண்டுள்ளன. ஒரு காலத்தில் இந்த நகரம் பாதாளத்தில் 11 அடுக்கு ஆழத்தில் 20,000 பேர் வசிக்கும் வீடாக இருந்தது.

துருக்கியின் மற்ற பகுதிகளில், சாப்பாட்டு பிரியர்களுக்கு மகிழ்ச்சியான இடமாக கேப்படோசியாவும் விளங்குகிறது. நாங்கள் பலவிதமான கபாப்கள், இறால்கள் மற்றும் மீன் வகைகளைத் தேர்வு செய்தோம், ஆனால் சைவம் உண்பவர்களுக்கும் பலவகையான உணவுகள் இருந்தது. இந்தியர்களுக்கு, குறிப்பாக தென்னிந்தியர்களுக்கு, ஒரு நல்ல செய்தி என்னவென்றால், அவர்களின் பேட்டா ரொட்டிகளுடன், வழக்கமான அரிசி சாதமும், அதனுடன் சில வகையான கொட்டைகள் அல்லது வேறு உணவும் இருந்தது.

உறுதியளிக்கப் பட்டவாறு, கேப்படோசியா சிறப்பான உணவையும் அனுபவத்தையும் கொடுக்கும் ஒரு சிறந்த இடம் என்பது நிரூபிக்கப்பட்டது!

படங்கள்: பர்வேஸ் பகத்

வடிவமைப்பு:
S கிருஷ்ணப் பிரதீஷ்

# Join the Traditional South Asian Reception

## RI Convention, Toronto

Invite your global partners who support your service projects.
Bring your Rotary friends to show how Rotary works globally.
Opportunity to meet all the world leaders of Rotary.

**Venue:**
**The Ritz-Carlton Hotel**
Ball Room, 181, Wellington Street West, Toronto,
ON M5V 3G7, Canada. Tel: +1 416-585-2500



RID C. Basker
& Malathi Basker

**We cordially invite**
**the Rotary family of South Asia**
**to a traditional reception**
**on Saturday, June 23rd, 2018**
**at The Ritz-Carlton Hotel**
**between 5.00 pm - 7.00 pm**



Chairman - PDG R. Theenachandran
& Vasanthi Theenachandran

## Registration Fee: INR 5,000 / US $ 75 per person

Payment can be made by cheque payable at par or DD favouring
R. THEENACHANDRAN payable at MADURAI, TAMIL NADU and send to:

PDG R. Theenachandran, Chairman - South Asian Reception
Devi House, 281-4, Sivagangai Main Road, Gomathipuram, Madurai - 625020 Tamil Nadu, India.
Tel: +91 452 4370027, Mob: +91 94430 53301 E-mail: theena3000@gmail.com

# மண்ணில்லா பயிரிடுதலை ஆலப்புழா மேம்படுத்துகிறது

ஜெய்ஸ்ரீ




*ரோட்டரியினர் காய்கறி சாகுபடி பைகளை பொதுமக்களுக்கு விநியோகம் செய்கிறார்கள்.*

"எங்கள் நகரத்தில் உள்ள குடும்பத்தினர் கள், தங்கள் வீட்டின் பின் பக்கத்திலோ அல்லது மாடியிலோ காய்கறிகளை பயிரிடுகின்றனர். இந்த காய்கறிகளில் வேதி பூச்சிக்கொல்லி மருந்து சேர்க்கப்படுவதில்லை," என்கிறார் ஊமன் தாமஸ், RC ஆலப்புழா, D 3211 ரோட்டரி சங்க உறுப்பினர்.

DG சுரேஷ் மேத்யூ அவர்களால் துவக்கிவைக்கப்பட்ட மதிப்புமிக்க திட்டப்பணியான — REAP (Rotary's Empowerment of Agricultural Production)-ஐ, இந்த சங்கம் முன்னேற்றி வருகிறது. நகர மக்களுக்கு இயற்கையான முறையில் காய்கறிகள் சாகுபடி செய்யத் தேவையான பைகளை சங்கம் வழங்கியுள்ளது. இந்த சாகுபடிப் பைகள் பல விதங்களில் தனித்துவமானது - இவற்றில் தென்னை நார்க்கழிவு உரம் இடப்பட்டு லேசான எடையுடன் குறைந்தளவு தண்ணீரை உறிஞ்சுகிறது. இவற்றில் மண் இல்லை. எனவே மக்கள் இவற்றைத் தங்களின் மாடியில் கூட வைத்துக்கொள்ளலாம். காளான்கள் மற்றும் 'அசோலா' என்ற ஒரு வகையான பெரணிச் செடி மற்றும் இதர பொருட்களைக் கொண்டு இந்த இயற்கை உரம் தயாரிக்கப்படுகிறது.

பிரசிடென்ட் குமாரசாமி பிள்ளையின் யோசனை இது, இவர் கொச்சி கயர் போர்டில் 40 வருடங்கள் பணியாற்றி, அதிலிருந்து ஓய்வு பெற்றவர். 'கயர் போர்டு சேர்மன் சி பி ராதாகிருஷ்ணன், எனது தொடக்க விழாவிற்கு தலைமை தாங்கினார். காய்கறி வளர்ப்பிற்கான சாகுபடிப் பைகளை பிரபலமாக்குவது பற்றி நான் அவருடன் பேசினேன். அவர் எங்களுக்கு உதவி செய்வதாக ஒப்புக்கொண்டார்,' என்கிறார் பிள்ளை. தென்னை நார்க்கழிவு என்பது கயிறு திரிக்கும்போது பெறப்படுகின்ற ஒரு உப விளைபொருள் ஆகும். இந்தத் திட்டப்பணியின் சாத்தியக்கூறுகளைப் பற்றி ஒரு கள ஆய்வை மத்திய கயிறு ஆராய்ச்சி நிறுவனம் (CCRI) நடத்தியது. 1,000 சாகுபடிப் பைகளை வழங்கியதன் மூலம் கடந்த டிசம்பர் மாதத்தில் சங்கம் தொடங்கிய இந்தத் திட்டப்பணிக்கு பெரும் ஆதரவு கிடைத்தது. இதுவரை, இந்த குடியிருப்பாளர்களுக்கு 2,500 பைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

ஐரோப்பாவில் குறிப்பாக நெதர்லாந்தில் தென்னை நார்க்கழிவு அலங்காரச் செடிகள் மற்றும் காய்கறி வளர்ப்பிற்கும் அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது என்றார். இது அதிகமான நுண்துளைகள் கொண்டது, அதன் எடையைப் போல மூன்று மடங்கு தண்ணீரைத் தேக்கிவைத்து செடிகளின் வளர்ச்சிக்காக மெதுவாக வெளிவிடுகிறது. இந்தியாவில் சாகுபடிக்காக தென்னை நார்க்கழிவு குறைவாகவே பயன்படுத்தப்படுகிறது. கேரள கடலோரப் பகுதிகளில் தென்னை நார்க்கழிவு குவிக்கப்பட்டு ஆரம்பத்தில் வீணான பொருளாக கருதப்பட்டது, அதற்குப் பின்பு தான், ஏற்றுமதிச் சந்தையில் பணத்தை வாரியளிக்கும் பொருளாக மாறியது, கடந்த வருடத்தில் ரூபாய் 1,000 கோடி மதிப்பில் தென்னை நார்க்கழிவு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது.

கேரள அரசின் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் துறையின் ஒரு பிரிவான கேரள காய்கறி மற்றும் கனிகள் மேம்பாட்டுக் கழகத்திலிருந்து, இந்த சங்கம் பயனாளர்களுக்கு விதைகள் மற்றும் நாற்றுக்களுடன் 10 சாகுபடிப் பைகளை ஒவ்வொரு பயனாளருக்கும் வழங்கியது. பயனாளர்கள் நாற்றுக்களை நன்கு கவனித்துக்கொள்வதை உறுதி செய்ய இந்த சங்கம் ஒவ்வொரு பைக்கும் ரூ15 வாங்குகிறது.

ஆலப்புழா வாசிகளான மீரா மற்றும் ஜெயலட்சுமி, சாகுபடிப் பை பயன்படுத்திய அனுபவத்தைச் சொல்லும்போது, தங்களுடைய விளைச்சலிலிருந்து சுமார் நான்கு கிலோ அளவிற்கு தக்காளி, கத்தரிக்காய் மற்றும் மிளகாய் போன்றவை கிடைத்ததாகவும், இயற்கை உரத்தை பயன்படுத்துவதால் தாவரங்களின் வளர்ச்சி வேகமாக இருக்கிறது என்றும் சொன்னார்கள்.

# ரோட்டரி ரத்த வங்கியில்
# நீரிழிவு நோய் முகாம்

வி. முத்துக்குமரன்

ஏழாண்டுகளுக்கு முன் ராஜபாளையம் ரோட்டரி சங்கம் (D 3212) விருதுநகர் மாவட்டத்தில் உள்ள ராஜபாளையத்தில் PAC ராமசாமி ராஜா ரோட்டரி ரத்த வங்கியை தொடங்கியது.

மொத்தம் ரூ.15 லட்சம் மதிப்புள்ள உபகரணங்கள் அந்த ரத்த வங்கிக்குத் தேவையாக இருந்தது. அப்போதைய சங்கத் தலைவர் PR ராம சுப்பிரமணிய ராஜா அதற்கு நன்கொடை அளித்தார். அவரது தந்தை PAC ராம சாமி ராஜாவின் பெயரில் ரத்த வங்கி உருவானது.

பல மருத்துவமனை களுக்கு ரத்தம் தேவைப் படுவது அதிகரித்தது. இதையடுத்து, இந்த சங்கம் அண்மையில் உலகளாவிய நன் கொடை 35 ஆயிரம் டாலர் மதிப்பில் சகல வசதிகளுடன் கூடிய ஆம்புலன்ஸ் வாகனத்தையும் அளித்தது. இதற்கு அமெரிக்கா, கனடா நாடுகளின் D 5580 10 ரோட்டரி சங்கங்களும் வடக்கு டொகாடோ நாட்டின் ஃபார்கோ மூர்ஹெட் AM ரோட்டரி சங்கம் மற்றும் TRF ஆகியவையும் உதவின.

ரத்த தான முகாமிற்குப் பயன் படுத்தப்படாத சமயங்களில் அந்த ஆம்புலன்ஸ் மாவட்டம் முழுவதும் ரத்த அழுத்தம், நீரிழிவு நோய் பரிசோதனை முகாமுக்குப் பயன்படுத்தப்படுகிறது. மாவட்ட மானிய துணைக் குழுத் தலைவர் டாக்டர் N. கோபாலகிருஷ்ணன் இது குறித்து விவரித்தார்:

கடந்த ஆண்டு கிராமப் பகுதிகளில் இதுபோல் பரிசோதனை முகாம்களை நடத்திய பொழுது, அந்தக் கிராம மக்கள் தங்களுக்குச் சர்க்கரை நோய், மற்றும் இரத்த அழுத்தம் இருப்பதைப் பற்றியே அறிந்திருக்கவில்லை. அதையடுத்து, DG டாக்டர் K. விஜயகுமார் இந்த ஆம்புலன்ஸ் வாகனத்தை இதுபோல் ஏழை எளியவர்களுக்கு உடல் நலப் பரிசோதனைக்காகப் பயன்படுத்தலாம் என்ற யோசனை தெரிவித்தார்.

உலகளாவிய மானிய உதவியைப் பெறுவதற்கு விண்ணப்பிக்கும்போது, இந்த ஆய்வு முடிவு களையும் ரோட்டரி சங்கம் இணைத்து தகவல் தெரிவித்தது. அதன்படி, கூடுதலான மெர்க்குரி, டிஜிட்டல் ரத்த அழுத்த உபகரணங்கள், சர்க்கரை நோய் கண்டறியும் கருவிகள், அவை தொடர்பான ஸ்ட்ரிப்கள் ஆகியவற்றையும் தனது கோரிக்கைப் பட்டியலில் இணைத்தது. அத்துடன், கிராமப் பகுதியினருக்காக ஐம்பது நீரிழிவு முகாம்களை நடத்துவதாகவும் உறுதி அளித்தது.



*கிராமப்புற தொழிலாளர்களுக்கு இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோய் பரிசோதனை முகாம்.*

### காப்பாற்றப்பட்ட வாக்குறுதி

அதன்படி ரோட்டரி சங்கம் தான் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றியது. கிராமப்புறங்களில் அவ்வாறே, 50 சர்க்கரை நோய் - ரத்த அழுத்த முகாம்கள் நடத்தப்பட்டன. 7,500 பேர் பயனடைந்தனர்.

இந்த ஆம்புலன்ஸ் வாகனத்தை மாவட்டத்தில் உள்ள இதர ரோட்டரி சங்கங்களும் இதுபோன்ற மருத்துவ முகாம்களுக்கு பயன்படுத்திக் கொள்ளலாம் என்றார் Dr. கோபால கிருஷ்ணன்.

# அவள் நினைத்தால்

ரோட்டரி செய்தி குழு



RI மாவட்டம் 3060-இல் பெண் உறுப்பினர் சேர்க்கையை அதிகப்படுத்த RC செனோராஸ் ஜாம்நகர் மற்றும் RC தேவபூமி துவாரகா ஏற்பாடு செய்திருந்த சகி சிந்து என்ற தலைப்பில் சங்கங்களுக்கிடையே பெண்கள் உச்சிமாநாடு துவாரகாவில் நடந்தது. இந்த மாநாட்டில் தொடர்ச்சியாக இரு வார்த்தைகளையே முழங்கிக்கொண்டிருந்தனர் - அவள் நினைத்தால்.

DG ருச்சீர் ஜானி மற்றும் அவரின் மனைவி ஷோஹாங்கியின் ஆலோசனையின்படி, D 3060 உடன் தொடர்புடைய அனைத்து பெண்களும் நிச்சயமாக ஆண் ரொட்டேரியன்களுடன் சேர்ந்து கலந்துகொள்ள வேண்டும் என்று DG அழைப்பு அனுப்பியதால், இந்த மாநாட்டில் அனைவரும் கலந்துகொண்டார்கள்.

அதிகமான பெண் உறுப்பினர்களைச் சேர்க்கவேண்டும் என்ற தனது இலட்சியத் திட்டத்தை நிறைவேற்ற, DG ஜானி, பெண் உறுப்பினர் சேர்க்கையில் கவனம் செலுத்த உறுப்பினர் குழுவுக்குள் ஒரு விஷேச பதவியை உருவாக்கியுள்ளார், இந்த பொறுப்பு டாக்டர் கல்பனா காந்தேரியா அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. ரோட்டரிக்கு அதிகமான பெண்களைச் சேர்ப்பதில் கவனம் செலுத்த சங்கங்களுக்கிடையே ஒரு பெண்கள் உச்சிமாநாடு நடத்த வேண்டும் என இவர் கேட்டுக்கொள்ளப்பட்டார்.




இந்த மாநாட்டில், வரலாற்றிலிருந்து பிரபலமான இந்தியப் பெண்களின் வெற்றிகரமான வாழ்க்கையைக் குறிப்பிடும் விதமாக ரோட்டரி மற்றும் இதர தலைவர்களின் ஊக்கப்படுத்தும் பேச்சுக்கள் இடம்பெற்றன. ஒரு பெண் ஒரு விஷயத்தை மனப்பூர்வமாக முடிவெடுத்து அதில் தன்னுடைய கவனத்தைச் செலுத்தினால், அவளால் எதையும் சாதிக்க முடியும் என்பதே இதன் அடிப்படைச் செய்தியாக இருந்தது.■

# அமைதித் தூதுவராக சைக்கிள் பயணம்

ரஷீதா பகத்

ஒரு வர்ணமயமான Tour de Rotaryயின் நான்காவது வருடத்தில், உற்சாகமான பங்கேற்பாளர்கள் 800 பேர் கலந்துகொண்ட சைக்கிள் பேரணி, சென்னை நகர வீதிகளில் கடல் போன்ற ஆரஞ்சு நிற பாதுகாப்புக் கவசங்களை பரப்பி விட்டது போல தெரிந்தது. ADGP சைலேந்திர பாபு பீனிக்ஸ் மார்க்கெட் சிட்டியிலிருந்து கொடியசைத்துத் துவக்கிவைத்தார்.

10, 50 மற்றும் 100 கிமீ என மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்ட இந்த பேரணியில் பாபு 100 கிமீ தூர பயணத்தைத் தேர்ந்தெடுத்தார்.

'உற்சாகமான சைக்கிள் ஓட்டுபவர்கள் காலை 5 மணிக்கெல்லாம் போட்டி நடக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தனர், இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை பிரிவுகளிலிருந்து 150 NCC வீரர்கள் கலந்துகொண்டனர். இந்த நிகழ்ச்சியில் 30 பள்ளிக் குழந்தைகளும் கலந்துகொண்டனர்,' என்றார் RC மெட்ராஸ் மிட்டவுன் தலைவர் உஷா குமார். இச்சங்கம் ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்ச்சிக்கு DG ஆர் ஸ்ரீனிவாசன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார்.

வண்ணமயத்துடன் துடிப்புமிக்க செயல்பாடுகளுடன், Anytime Fitness நிறுவனத்தால் ஆயத்தப்படுத்தல் மற்றும் ஜூம்பா அமர்வுகள் நடத்தப்பட்டன. பங்கேற்ற ஒவ்வொருவரும் ஒரு பதக்கம், ஒரு கூடிஸ் பேக் மற்றும் ரீபோக் நிறுவனத்தின் ரூ.750 மதிப்புள்ள ஒரு பரிசுக் கூப்பன், இது தவிர கடுமையான செயல்பாட்டைத் தொடங்கும் முன்பு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்த வருடத்தின் நோக்கம் புற்றுநோய் பாதுகாப்பைப் பற்றியது, அதனால் உலக புற்றுநோய் தினத்துடன் இணைத்து இந்த பேரணி நடத்தப்பட்டது. புற்றுநோய்த் துறையில் செயல்படுகின்ற Jeevan Stem Cell Foundationக்கு இந்த சங்கம் ரூ.1 இலட்சம் அடையாள நன்கொடையாக வழங்கியது. திரட்டப்படுகின்ற எஞ்சிய தொகை, புற்றுநோய் திட்டங்களுக்கு பயன்படுத்தப்படும்.

## அமைதி மற்றும் நல்லிணக்கம்

இந்த சங்கம் மற்றொரு திட்டப் பணியை செய்திருப்பதாகவும், அத்திட்டப்பணிக்காக PRIP கேரி ஹுவாங் அவர்களிடமிருந்து ஒரு பாராட்டுக் கடிதம் பெற்றிருப்பதாகவும் உஷா சொன்னார். ரோட்டரியின் முக்கியக் குறிக்கோள்களில் ஒன்று அமைதியை பரப்புவது. ஒவ்வொரு வருடமும் ரோட்டரியின் பிறந்த தினம் உலக அமைதி மற்றும் நல்லிணக்க தினமாக ரொட்டேரியன்கள் மற்றும் ரோட்டரி குடும்பத்தினரால் கொண்டாடப்படுகிறது. 'சிறிய சச்சரவுகள், தவறான புரிதல்கள், வகுப்புவாத மோதல்கள், பிராந்திய வேற்றுமைகள், குழுவாதம்' போன்றவற்றால் உலகம் பாதிக்கப்பட்டு, உலக அமைதிக்கு இவையெல்லாம் பங்கம் விளைவிக்கிறது. எனவே உலக அமைதி மற்றும் நல்லிணக்கத்தைக் கொண்டுசெல்ல ஒரு திட்டப்பணியைத் தொடங்க அவரது சங்கம் முடிவெடுத்தது.

உலக அமைதி நம் ஒவ்வொருவரிடமிருந்து தொடங்குகிறது என நம்புவதால், RC மெட்ராஸ் மிட்டவுனின் இந்நாள் மற்றும் முன்னாள் தலைவர் அம்பலவாணன், ரொட்டேரியன்கள் அமைதியை ஏற்படுத்த உறுதிமொழி ஏற்கவும், Four Way Testகாக தங்களை மறுபடியும் அர்ப்பணித்துக்கொள்ளவும் ஒரு திட்டப்பணி அமைக்க முடிவெடுத்துள்ளார். சிகாகோவில் முதல் ரோட்டரி மாநாடு நடந்த தினமான 1905, பிப்ரவரி 23 அன்று அத்தகைய ஒரு உறுதிமொழி ஏற்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

சென்னையில் பிப்ரவரி 18 அன்று நடந்த 3232 மாவட்ட மாநாட்டில், இந்த திட்டப்பணியை RI டைரக்டர் சி பாஸ்கர் துவக்கிவைத்தார்.



# 90 நாளில் போலியோவுக்கு ரூ.30 லட்சம்

வி. முத்துக்குமரன்




DG *ஆஷா பிரசன்னக்குமார் மற்றும்* PDG *மதுரா சத்ரபதி, ஸ்ரீகாந்த் சத்ரபதி மற்றும்* Rtns *இளவரசன், பிரசாந்த், ஷோபா, ராம்தாஸ்* TRF *அறங்காவலர் தலைவர் பால் நெட்சன் மற்றும்* TRF *அறங்காவலர் சுஷில் குப்தா* PRID *மனோஜ் தேசாய் அவர்களுடன்.*

அது ரோட்டரியின் மாயமோ, மந்திரமோ தெரியாது. பெங்களூர் டௌன் டவுண் ரோட்டரி சங்கத்தின் (D 3190) ரொட்டேரியன்கள், ரோட்டராக்டர்கள், இன்டெராக்டர்கள் இணைந்து இளம்பிள்ளை வாத நோயை ஒழிப்பு தீவிர பிரசாரத்திற்காக (End Polio Now campaign) மூன்றே மாதத்தில், அதாவது 90 நாட்களில் ரூ.30 லட்சத்தைத் திரட்டியிருக்கிறார்கள்.

இந்த பிரசாரத்துக்கான நிதி திரட்டும் பணி கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தொடங்கப்பட்டது. ரோட்டரி சங்க உறுப்பினர்கள், ஆர்விசிஇ பொறியியல் கல்லூரியைச் சார்ந்த ரோட்டராக்டர்கள் MES கிஷோர் கேந்திராவைச் சார்ந்த இன்டராக்டர்கள் மற்றும் போலீஸ் பப்ளிக் பள்ளியைச் சேர்ந்தவர்கள் பல்வேறு இடங்களில் இந்த நிதி திரட்டியதுடன் பிரசாரக் குறிப்பில் கையெழுத்துகளையும் திரட்டியுள்ளனர்.

இளம்பிள்ளை வாத ஒழிப்புக்காக ரோட்டரி உலகளாவிய முயற்சிகளை பெங்களூரு, அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசிப்போர் எல்லோரும் அறியும் வண்ணம் இந்தப் பிரசாரத்தை நாங்கள் அமைத்தோம். அதன் விளைவு எங்களாலேயே நம்ப முடியாத அளவுக்கு நல்ல பலன் தந்திருக்கிறது என்று சங்கத் தலைவர் ரகு அல்லம் தெரிவித்தார்.

போலியோ ஒழிப்புப் இயக்கத்திற்காகப் பாடுபட்டு வரும் ரோட்டரி மாவட்ட முன்னாள் ஆளுநர் மதுரா சத்ரபதி, அவரது சகா முன்னாள் மாவட்ட ஆளுநர் ஸ்ரீகாந்த் சத்ரபதி ஆகியோர் இது தொடர்பாக கெட்டோ (Ketto) எனப்படும் சமூக வலைதளங்கள் வழியாக ரூ.1 லட்சம் திரட்டி பணியைத் தொடங்கிவைத்தனர். ரோட்டரி இன்டர்நேஷனல் முன்னாள் இயக்குநர் பாண்டுரங்க செட்டியே எனக்கு ஊக்குவிக்கும் சக்தியாக இருக்கிறார். அத்துடன் ரோட்டரி ஃபவுண்டேஷனுக்காக வழக்கமாக செலுத்தும் அவரது நன்கொடையும் முக்கிய காரணம் என்றார்.

### பல்முனை அணுகுமுறை

முடிந்த வரையில் பங்களிப்பு செலுத்துங்கள் என்று ரகு அல்லம் விடுத்த வேண்டுகோளை அடுத்து, ரோட்டரி சங்க உறுப்பினர்கள் இந்த போலியோ ஒழிப்பு நிதி திரட்டும் பணியில் ஈடுபடத் தொடங்கினர். ரோட்டேரியன்கள் ரூ.1.5 லட்சம் அளித்தபோது, ரோட்டராக்டர்கள், இன்டராக்டர்கள் மொத்தம் ரூ.50 ஆயிரம் அளித்தனர். அங்காடி வளாகங்கள், கல்லூரிகள், ஓட்டல்கள், வீட்டுவசதி சங்கங்கள் ஆகியோரிடம் நிதி திரட்டினர்.

தனி தொழிலகப் பிரிவினர் முதல் நான்கு ஆடை உற்பத்தி நிறுவனங்களின் தொழிலாளர்கள் மூலம் மொத்தம் ரூ.1.5 லட்சமும்; பிரஸ்டீஜ் குழும ரியல் எஸ்டேட் பிரிவினர் ஆகியோரிடம் ரூ.5 லட்சமும்; மீதி ரூ.50 ஆயிரம் ரோட்டரி சங்கத்தைச் சாராதவர்களிடமும் திரட்டப்பட்டது. மொத்தம் ரூ.10 லட்சம் வசூலிக்கப்பட்டது.

திரட்டப்பட்ட நிதி பெங்களூருவில் நடைபெற்ற ரோட்டரி-கார்ப்பரேட் சமூகப் பொறுப்புணர்வு குறித்த மாநாட்டில் (Rotary&CSR conclave) தி ரோட்டரி ஃபவுண்டேஷன் அறங்காவல் குழுத் தலைவர் பால் நெட்செலிடம் அளிக்கப்பட்டது. மாவட்ட ரோட்டரி ஆளுநர் ஆஷா பிரசன்னகுமார் இந்த உன்னதப் பணிக்காக ரோட்டரி பங்களிப்பாக ரூ.20 லட்சத்துக்கான காசோலையை இரு முறை அதே மேடையில் வழங்கினார்.

அத்துடன், போலியோ ஒழிப்பில் ரோட்டரி கூட்டாளியான பில் கேட்ஸ் தம்பதியின் ஃபவுண்டேஷன் ஏற்கெனவே அளித்த உறுதிமொழியின்படி இந்த மாவட்டம் திரட்டிய ரூ.30 லட்சத்தைப் போல் இரட்டிப்பு தொகையை அளிக்கும் என்று கூறினார்.

இந்த மகத்தான நிதி திரட்டும் பணியை இன்னும் செய்வதில் ரோட்டரி சங்க உறுப்பினர்கள் தற்போது மிகுந்த உற்சாகத்துடன் காணப்படுகிறார்கள் என்று கூறிய ரகு, இனிமேல், போலியோ ஒழிப்பு இயக்கத்துக்காக நிதி திரட்டுவதில் புதிதாகப் பொறுப்பேற்கும் நிர்வாகக் குழுவினர் திட்டமிட்டுச் செயல்படவேண்டும் என்றார்.■

# நட்சத்திரங்களின் கூட்டுவிளைவு

ரோட்டரி செய்திக் குழு




*மக்களவை சபாநாயகர் சுமித்ரா மகாஜன் அவர்களை DG BM சிவராஜ், PDG ராஜேந்திர ராய், PDG உல்லாஸ் கொலாட்கர் மற்றும் மனோன்மணி சிவராஜ் கௌரவிக்கின்றனர்.*

தானே ரேமண்ட் மைதானத்தில், தாரங்கன் என்ற தலைப்பில் நடைபெற்ற மாவட்ட மாநாடு D 3142னின் அம்சங்கள் நடைபெற்றது.

DG B M சிவராஜ் உறுப்பினராக இருக்கும், RC தானே நார்த் எண்ட் ஏற்பாடு செய்திருந்த இரண்டு நாள் DisCon நிகழ்ச்சிக்கு, 2,400க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

சிறப்பு விருந்தினரான மக்களவை சபாநாயகர் சுமித்ரா மகாஜன் குத்துவிளக்கு ஏற்றினார், அவருடன் DG சிவராஜ், அவர் மனைவி மனோன்மணி, RIPR, PDG 3190 ராஜேந்திர ராய் மற்றும் அவர் மனைவியும் குத்துவிளக்கு ஏற்றினர். மாநாட்டுத் தலைவர் சந்தீப் சால்வி மற்றும் விழா நடத்தும் சங்கத்தின் தலைவர் ஹேமந்த் ஆரோரா மற்றும் அவர் மனைவி சங்கீதா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

சுமித்ரா மஹாஜன் தன்னுடைய உரையின்போது, இந்த சமூகத்தில் மற்றவர்களின் நலனையும் சௌகரியத் தையும் கவனத்தில் கொள்ளுமாறு ரொட்டேரியன்களை கட்டாயப்படுத்துகின்ற தன்னை மீறிய சேவையின் கருத்தைப் பின்பற்றுவதாகக் கூறினார். ஒரு அமைப்பாக சமுதாயத்திற்குச் சேவை செய்யும்போது, மிகப்பெரிய மாற்றத்தையும், மாறுபட்ட வலிமையைப் பெற்று முழுமையடையும் என்றார்.

அதிக எண்ணிக்கையிலான பெண்கள் பங்கேற்றதைப் பற்றிச் சொல்லும்போது, "ஒரு வலிமையான சமுதாயத்தை கட்டமைக்க பெண்கள் எப்பொழுதும் ஆண்களுக்கு துணைபுரிய வேண்டும்; 'ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருக்கிறாள்' என்று சொல்கின்ற நாட்கள் காணாமல் போய்விட்டன. இப்போது ஒன்றிணைந்து நடப்பதற்கான நேரம் ஆகும், 'பின்னால்' என்ற வார்த்தைக்கு பதிலாக 'அருகில்' என்று மாற்றப்படுவதற்கான நேரமும் வந்துள்ளது. இதைத் தான் நீங்கள் ரோட்டரியில் செய்துகொண்டிருக்கிறீர்கள் - உங்கள் மனைவியை உங்களுடன் சேர்த்துக் கொள்ளும்போது, நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பதை அவர்களும் புரிந்து கொள்ள முடியும், என கூறினார்.

RI தலைவரின் கருத்தைச் சொல்லும்போது, சங்கங்களை வலிமைப்படுத்துவது, மனிதநேயமுள்ள திட்டங்கள் மற்றும் ரோட்டரியின் பொதுத்தோற்றத்தை மேம்படுத்துவது ஆகியவற்றில் நாம் முக்கியமாக கவனம் செலுத்த வேண்டும் என்றார் PDG ராஜேந்திர ராய்.

தடுப்பணைகள், கழிவறை கட்டிக்கொடுத்தல், பசுமைத் திட்டங்கள், இரத்த மாற்று மையங்கள் மற்றும் செயற்கை கைகால் பொருத்தும் மையங்கள் போன்ற அதிக எண்ணிக்கையிலான சமூகத் திட்டங்களைச் செயல்படுத்தும் மாவட்டச் சங்கங்களை பாராட்டினார்.

இந்த வருடத்தில் 1,000 புதிய உறுப்பினர்களை யும் 30 புதிய சங்கங்களை சேர்ப்பது என இலக்காகவும், $3 மில்லியனை TRF இலக்காக வைத்து, அதன் சேவைத் திட்டங்களை பல்வேறு விதங்களில் விரிவாக்க திட்ட மிட்டுள்ளது என்று DG சிவராஜ் கூறினார்.

மணல்கலை நிபுணர் மனிஷா ஸ்வார்ன்கர் ரோட்டரியின் சித்திரத்தை வரைந்து திறமையை வெளிப்படுத்தினார்.

# FIND A CLUB

ANYWHERE IN THE WORLD!



Get Rotary's free Club Locator app and find a meeting wherever you go!

www.rotary.org/clublocator


Rotary

## Rotary at a glance

| | | |
|---|---|---|
| Rotarians | : | 12,31,653 |
| Clubs | : | 35,748 |
| Districts | : | 539 |
| Rotaractors | : | 2,52,931* |
| Clubs | : | 10,997* |
| Interactors | : | 5,21,180* |
| Clubs | : | 22,660* |
| RCC members: | | 2,24,549* |
| RCC | : | 9,736* |

* As on April 2, 2018

# Membership Summary

As on April 1, 2018

| RI Zone | RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians | Rotaract Clubs | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|---|
| 5 | 2981 | 112 | 4,644 | 222 | 60 | 225 | 170 |
| 5 | 2982 | 67 | 3,008 | 101 | 61 | 112 | 43 |
| 5 | 3000 | 126 | 5,271 | 453 | 292 | 661 | 195 |
| 4 | 3011 | 76 | 3,370 | 650 | 57 | 109 | 25 |
| 4 | 3012 | 87 | 3,425 | 667 | 70 | 129 | 55 |
| 5 | 3020 | 92 | 4,228 | 210 | 117 | 461 | 351 |
| 4 | 3030 | 92 | 5,063 | 625 | 81 | 310 | 164 |
| 4 | 3040 | 94 | 2,070 | 223 | 56 | 123 | 137 |
| 4 | 3053 | 73 | 2,785 | 425 | 17 | 47 | 94 |
| 4 | 3054 | 130 | 6,363 | 1,007 | 94 | 307 | 469 |
| 4 | 3060 | 98 | 4,203 | 446 | 61 | 122 | 132 |
| 4 | 3070 | 103 | 3,055 | 294 | 68 | 157 | 54 |
| 4 | 3080 | 77 | 3,324 | 224 | 73 | 216 | 108 |
| 4 | 3090 | 80 | 2,169 | 90 | 32 | 36 | 122 |
| 4 | 3100* | 74 | 1,718 | 73 | 11 | 72 | 146 |
| 6 | 3110 | 115 | 4,039 | 316 | 51 | 49 | 104 |
| 6 | 3120 | 77 | 3,304 | 359 | 37 | 58 | 51 |
| 4 | 3131 | 131 | 5,534 | 1,116 | 111 | 279 | 80 |
| 4 | 3132 | 105 | 4,118 | 428 | 66 | 203 | 140 |
| 4 | 3141 | 89 | 5,425 | 1,165 | 120 | 252 | 81 |
| 4 | 3142 | 83 | 3,151 | 483 | 69 | 195 | 65 |
| 5 | 3150 | 98 | 3,630 | 362 | 93 | 229 | 109 |
| 5 | 3160 | 70 | 2,461 | 131 | 27 | 48 | 81 |
| 5 | 3170 | 127 | 5,636 | 406 | 59 | 308 | 161 |
| 5 | 3181 | 71 | 3,135 | 232 | 33 | 179 | 104 |
| 5 | 3182 | 83 | 3,414 | 258 | 36 | 274 | 91 |
| 5 | 3190 | 129 | 5,144 | 610 | 150 | 355 | 50 |
| 5 | 3201 | 140 | 5,231 | 319 | 100 | 131 | 47 |
| 5 | 3202 | 128 | 4,857 | 242 | 104 | 435 | 46 |
| 5 | 3211 | 137 | 4,487 | 270 | 12 | 89 | 123 |
| 5 | 3212 | 97 | 3,964 | 296 | 113 | 277 | 122 |
| 5 | 3231 | 68 | 2,887 | 120 | 54 | 196 | 237 |
| 5 | 3232 | 104 | 4,164 | 579 | 145 | 310 | 80 |
| 6 | 3240 | 87 | 3,038 | 350 | 61 | 147 | 152 |
| 6 | 3250 | 98 | 3,779 | 672 | 49 | 207 | 180 |
| 6 | 3261 | 68 | 2,513 | 295 | 16 | 102 | 42 |
| 6 | 3262 | 96 | 3,325 | 382 | 44 | 69 | 75 |
| 6 | 3291 | 146 | 3,821 | 716 | 81 | 131 | 590 |
| **India Total** | | **3,728** | **145,753** | **15,817** | **2,781** | **7,610** | **5,076** |
| 5 | 3220 | 69 | 1,938 | 244 | 84 | 200 | 75 |
| 6 | 3271 | 81 | 1,463 | 254 | 52 | 16 | 13 |
| 6 | 3272 | 155 | 3,159 | 460 | 43 | 36 | 37 |
| 6 | 3281 | 205 | 5,854 | 833 | 230 | 85 | 186 |
| 6 | 3282 | 140 | 4,024 | 388 | 132 | 45 | 39 |
| 6 | 3292 | 114 | 4,449 | 673 | 122 | 115 | 108 |
| **S Asia Total** | | **4,492** | **166,640** | **18,669** | **3,444** | **8,107** | **5,534** |

**Non-districted.*

*Source: RI South Asia Office*

# தர்பங்காவில் ரோட்டரி (எல்என்-4) முகாம்

ரோட்டரி செய்தி குழு



தர்பங்கா ரோட்டரி சங்கம் (D 3250) சார்பில் செயல்படுவதற்கான பரிசு (Gift of Mobility) என்ற திட்டத்தின் கீழ் செயற்கைக் கை பொருத்தும் முகாம் (LN 4 artificial hand fitment camp) அண்மையில் நடத்தப் பட்டது. பூனா டௌன் டவுன் ரோட்டரி சங்கம் (D 3131), எஸ்.வி. மருத்துவ மனை ஆகியவற்றுடன் இணைந்து லஹரியசராய் ஆதர்ஷ் மத்திய வித்தியாலயத்தில் நடத்தப்பட்ட இந்த ஒரு நாள் முகாமை பிகார் உணவு மற்றும் நுகர்வோர் விவகாரத் துறை அமைச்சர் மதன் சாஹ்னி தொடங்கிவைத்தார். நிகழ்ச்சியில் சட்டப்பேரவை உறுப்பினர் சஞ்சய் சரோஜி மற்றும் DGN கோபால் கெம்கா முன்னிலை வகித்தார்.

இந்திய ரோட்டரி சங்க வரலாற்றில் முதல் முறையாக நடைபெறும் இத்தகைய முகாமில் தங்களுக்கு செயற்கைக் கைகள் பொருத்தப்பட்டதற்கு மன மகிழ்வடைந்துள்ளனர் என்று ரோட்டரி சங்கத் தலைவர் டாக்டர் கௌரிசங்கர் ஜா பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

இந்த முகாமில் நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்று, செயற்கைக் கைகள் பொருத்தப்பட்டு, பலனடைந்தனர். ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த 25 டாக்டர்கள் சேவையாற்றினர். அத்துடன், SV மருத்துவ மனையிலிருந்து இரு சிறப்பு மருத்துவ நிபுணர்களும் 7 துணை மருத்துவர்களும், செயற்கை உறுப்புகளைச் சரியான வகையில் பொருத்துவதற்கான பணிகளில் ஈடுபட்டனர்.

இந்த முகாமில் பங்கேற்று, பலனடைந்தவர்களைப் பார்க்கும்போது மனம் நிறைவடைகிறது. அவர்களால் எழுதவும் வாகனங்களை இயக்கவும் தினசரி வேலைகளைச் சுலபமாகச் செய்ய முடிவதை நேரில் காணும்போதும் மகிழ்கிறோம் என்று ஜா குறிப்பிட்டார்.

இந்த செயற்கைக் கை பொருத்துவதற்கான முகாமை மாதாந்திர நிகழ்வாக மேற் கொள்வதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ளது. இதற்காக பூனா டௌன் டவுன் ரோட்டரி சங்கமும் எஸ்வி மருத்துவ மனையும் ஏப்ரல் மாத இறுதியில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட இருக்கின்றன.■

---

மாநாடு

# டொராண்டா மாநாடு குறித்த செயலி

ரண்டி ட்ரூஸின்

கனடா நாட்டுத் தலைநகர் டொராண்டோவில் ஜூன் 23 முதல் 27 தேதி வரையில் நடைபெறும் ரோட்டரி சர்வதேச மாநாட்டிற்குச் செல்லப் போகிறீர்களா? மாநாடு குறித்தும் நகரைப் பற்றியும் அறிந்துகொள்ள சில பயனுள்ள செயலிகள் (App) கீழே தரப்பட்டுள்ளன.

மாநாடு குறித்த தடங்களை அறிந்து கொள்ள ரோட்டரி நிகழ்வு செயலி மிக முக்கியம். தினசரி அட்டவணைகள், நிகழ்ச்சிகளில் பேசுவோரைப் பற்றிய விவரங்களை அறிந்துகொள்ளவும், குறிப்புகளையும் டவுன்லோடு செய்வ தோடு மட்டுமின்றி இதர ரோட்டரி அமைப்பினருடன் தொடர்பு ஏற்படுத் திக் கொள்ளவும், புகைப்படங்களைப் பகிர்ந்து கொள்ளவும் பயன்படும். மேலும், நடைபெறும் அமர்வுகளை மதிப்பிடுவது, மாநாட்டு அமைப்பாளர்களைக் குறித்த பின்னூட்டங்களைப் பதிவேற்றுவதற்கு இந்த செயலி பயன்படும்.




இந்த செயலியை வரும் மே 18ம் தேதி முதல் பதவிறக்கிக் கொள்ளலாம். உங்களது கைபேசியின் செயலி தளத்தில் (app store) Rotary Events என்ற தேடுபொறியின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

பயண செயலி (The Transit App) கனடா உள்பட 11 நாடுகளில் உள்ள நகரங்களையும் அதைச் சுற்றிய பகுதிகளையும் அறிந்துகொள்ள உதவும். இந்த செயலி பஸ்கள், சுரங்கப் பாதைகள், தெரு கார்கள் ஆகியவற்றில் செல்லும்போதும் பதிவிறக்கிப் பார்த்துக் கொள்ளலாம். செல்ல வேண்டிய இடம், முகவரி, இதர விவரங்களைப் பதிவிட் டால், விவரங்களை அந்த செயலி மூலம் அறிந்துகொள்ளலாம்.

டொராண்டோவுக்கென தனி செயலியும் உள்ளது. BlogTO எனப்படும் அந்த செயலி நகரில் உள்ள சிறந்த உணவகங்கள், மதுபானக் கூடங்கள், இதர பொழுதுபோக்கு இடங்கள் குறித்த உங்களது ஆர்வத்துக்கான இடங்களைப் பற்றிய விவரங்களை அறிந்து கொள்ளலாம்.

டொராண்டோ வரைபடங்கள், நடந்து செல்வதற்கான இடங்கள், உலகப் பிரசித்தி பெற்ற இடங்கள், யாரும் அதிக அறிந்திராத சில இடங்கள் ஆகியவற்றைப் பற்றியும் அறிந்துகொள்ளலாம்.

பதிவு செய்துகொள்ள இணையம் : riconvention.org



Wordsworld

# கதைகளின் கதை

சந்தியா ராவ்

***எழுதப்பட்ட மற்றும் விற்பனையான சிறந்த புத்தகங்களைப் பற்றிய ஏன், எங்கே, எப்படி போன்ற சுவாரஸ்யமான செய்திகள்***

சுவீடன் எழுத்தாளர் ஆஸ்ட்ரிட் லிண்ட்கிரென்-ஐ எனக்கு ரொம்ப பிடிக்கும். குழந்தைகளுக்காக அதிக புத்தகம் எழுதியிருந்தாலும், பல ஆண்டுகளாக ஒரு புத்தக ஆசிரியராக பணியாற்றினார், மேலும் ஒரு பயப்படாத அரசியல் விமர்ச கராகவும் விளங்கினார். ஒரு சுவீடனின் அலுவலக இணையதளத்தில் டேவிட் வில்ஸ் எழுதிய கட்டுரையின் தலைப்பு: “ஆஸ்ட்ரிட் லிண்ட்கிரென் பேசினார், மக்கள் கேட்டனர்.”

ஆர்வத்தைத் தூண்டியதால், நான் இதைத் தேடிக் கண்டுபிடித்தேன்: “தனது 68வது வயதில் சுவீடனின் எக்ஸ்பிரசன் என்ற நாளிதழுக்கு, சுவீடனின் வரி அமைப்பில் உள்ள ஓட்டைகளைப் பற்றி ஒரு அபிப்பிராயம் தெரிவித்து ஒரு கட்டுரை அனுப்பினார், சுய தொழில் செய்யும் ஒரு எழுத்தாளரான அவர், தனது வருமானத்தில் 102 சதவீதம் வரி செலுத்த வேண்டியிருந்தது. இதை ஒரு கதை சொல்லும் பாணியில் எழுதினார் ஆஸ்ட்ரிட். அது உடனடியான பாதிப்பை ஏற்படுத்தியது. 1976இல் பதிப்பிக்கப்பட்ட ‘பாம்பெரிபோஸ்ஸா இன் மோனிஸ்மானியா’, முதல் பக்கச் செய்திகளில் வந்தது மட்டுமில்லாமல், கடந்த 44 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த சமூக ஜனநாயக அரசாங்கம் வீழ்வதற்கும் வழிவகுத்தது.”

அடிக்கடி பிரச்சனைகளைப் பற்றி பத்திரிக்கையாளர்கள் அவரிடம் அபிப்பிராயம் கேட்டு, அவர் சொல்வதை வெளியிட்டனர், ஐரோப்பிய ஒன்றியம் EU-வின் உறுப்பினர் சேர்க்கையில் சுவீடனின் கோரிக்கை பற்றிய பிரச்சனைக்கு, அவர் மிகவும் தூண்டுகோலாக இருந்தார்-இதை அவர் எதிர்த்தார்-EU-வை ஆதரிக்கும் பத்திரிக்கை, அவரிடம் பேசக் கூடாது என்ற நிலைப்பாட்டை எடுத்தது” என்று வில்ஸ் எழுதுகிறார்.
சுவீடன் EU-வின் ஒரு அங்கம் என்பதை நாம் அறிவோம்.

இதே ஆஸ்ட்ரிட் லிண்ட்கிரென் தான், ஒன்பது வயதுள்ள, முகம் முழுதும் புள்ளிகளாக, சிவப்பு நிற கூந்தல் உள்ள சிறுமி பிப்பி லாங்ஸ்டிரம்ப் பற்றிய ஒரு குழந்தைகளுக்கான புத்தகம் எழுதியதற்காகப் பிரபலமடைந்தார். இது 70க்கும் மேற்பட்ட மொழிகளிலும், ஹிந்தியில் ‘பிப்பி லாம்பேமோஜ்’ என்ற பெயரிலும் மொழிபெயர்க்கப்பட்டது, 1940களில் முதன் முதலில் வெளியிடப்பட்ட போது, இந்தப் புத்தகம் ஒரு நல்ல சமுகத்தை சீர்குலைப்பதாகக் கூறி, அதை தடை செய்ய சிலர் நீண்டநாள் போராடினர். இந்த புத்தகத்தின் தொடர்ச்சியாக மூன்றாம் பாகம், பிப்பி இன் தி சவுத் சீஸ், அதன் இனவெறி தொடர்பான எழுத்துக்களுக்காக சமீபத்தில் சுவீடன் நூலகங்களில் தடை செய்யப்பட்டது. ஒரு சுவாரஸ்யமான விஷயம், பிப்பி ஒரு கதாப்பாத்திரமாக இருந்தாலும் கூட, அது உண்மையில் ஆஸ்ட்ரிட் மகளின் கற்பனையில் பிறந்தது.

9 அல்லது 10 வயதில் காரின், நோய்வாய்ப்பட்டு படுக்கையில் இருந்தபோது, பொழுதுபோகாமல் தன் அம்மாவிடம் “பிப்பி லாங்ஸ்டிரம்ப் பற்றி ஒரு கதை சொல்லுங்கள்” என்று கேட்டாள். அதன் பின் நடந்ததை உலகம் அறியும்.

இதே போன்ற சம்பவங்கள் அமீஷ் திரிபாதிக்கும் நடந்தது. இவர் சிவனின் முத்தொகுப்பு: ஒரு மனிதனாக சிவனின் புராணத்தின் மறு-கற்பனை என்ற புத்தகத்தை எழுதி பிரபலமானவர். பல வருடங்களுக்கு முன்பு, எனக்கு இந்த புத்தகங்கள் (மெலுகாவின் அமரர்கள், நாகர்களின் இரகசியம், வாயுபுத்திரர்களின் வாக்கு) பிடிக்கவில்லை என்று 14/15 வயதுச் சிறுவர்களிடம் சொல்லி, பெரும் தவறு செய்துவிட்டேன். எதிர்பார்த்தது போல, அவர்கள் கோபப்பட்டனர். ஆனால் இந்திய இளைஞர்கள் (அப்போது குறைந்தபட்சம்) நல்ல முறையில் நடந்துகொண்டனர், இல்லையென்றால் நான் பலவிதங்களில் குத்திக் கொல்லப்பட்டிருப்பேன்.

எல்லா விதங்களிலும் அமீஷ் திரிபாதி மிக நேர்த்தியான சந்தைப்படுத்தல் உத்தியைக் கடைப்பிடித்தார், அவரின் மனைவி பிரீத்தியின் முயற்சிக்கு நல்ல பலன் கிடைத்தது. அவரின் முதல் புத்தகம், மெலுகாவின் அமரர்கள் வெளியிடும்போது, புத்தகக் கடைகளுக்கு முதல் அத்தியாயத்தின் சிலவற்றை இலவச நகல்களாக கொடுக்கப் பரிந்துரைத்தார். இது வாசிப்பாளர்களுக்கு ஆர்வத்தைக் கொடுத்தது; இயல்பாகவே அவர்கள் இந்த புத்தகத்தை வாங்கினர், ஒரு வாரத்திற்குள் அது அதிகமாக விற்பனையாகும் புத்தகமாக மாறியது. இப்போது திரிபாதியால் பல புத்தகங்களைக் கொடுத்து, நல்ல வாசகர்களையும் மில்லியன் கணக்கில் அவருடைய புத்தகங்களின் விற்பனையையும் உறுதிசெய்கிறார்.

சரி இவையெல்லாம் இப்போதிருக்கிற உலகம். பழங்காலத்தில் எப்படி இருந்திருக்கும்?



உதாரணமாக, இராமாயண காலம் எப்படி இருந்திருக்கும்? கிமு 500 காலகட்டத்தில், வால்மீகி முதன் முதலில் இராமாயணத்தை சமஸ்கிருதத்தில் எழுதினார் எனக் கருதப்படுகிறது. வால்மீகியின் இராமாயணம் தான் 'மூலக்கதை' என்று சொல்லப்படுகிறது. எனினும், 300க்கும் அதிகமான இராமாயண பதிப்புகள் இருக்கிறது: தமிழில் கம்பர் எழுதிய கம்பராமாயணம்; அவாதியில் துளசிதாஸ் எழுதிய ராம்சரித்மானஸ்; ஏக்நாத் மராத்தியில் எழுதிய பாவர்த்த இராமாயணம்; பெங்காலியில் கிரிட்டிபாஸ் ஓஜா எழுதிய கிரிட்டிவாசி இராமாயணம், இப்படி மேலும் பல. இவற்றிக்கு இடையில் தாய் ராமகீன், க்மெர் ரீம்கெர், மற்றும் லா ஃப்ரா லக் ஃப்ரா லாம் போன்ற நாட்டுப்புற, பழங்குடி மற்றும் இலக்கியப் பதிப்புகளும் இருக்கின்றன.

வால்மீகி, ரத்னாக்கர் என்ற பெயரில் பிறந்து எப்படி வால்மீகி ஆனார் என்பதே இதற்குள் இருக்கும் ஒரு கதை. அவர் ஒரு திருடனாக இருந்தார் எனச் சொல்லப்படுகிறது. புதிய பாதைக்குச் செல்லுமாறு, ஒருநாள் ஒரு ஞானி அவரை அறிவுறுத்தினார். தன் குடும்பத்தினரின் சாப்பாடு மற்றும் தேவைகளுக்காக திருடனாக மாறிவிட்டதை ரத்னாக்கர் உணர ஆரம்பித்தார். அந்த ஞானியுடனான சந்திப்பிற்கு பின் அவர் தன்னுடைய மனைவி மற்றும் குழந்தைகளிடம் கேட்கிறார்: நான் திருடியதிலிருந்து கிடைக்கும் பொருட்களால் நீங்கள் சந்தோஷமாக வாழ்கிறீர்கள், இதைப் பார்க்கும்போது, என்னுடைய பாவங்களிலும் நீங்கள் பங்கெடுக்க ஆசைப்படுவதாக நான் நினைத்துக் கொள்ளலாமா?

அவரின் மனைவி மற்றும் குழந்தைகள் மறுத்துவிட்டனர், ரத்னாக்கர் அதிர்ச்சியடைந்தார். உண்மையை அறிந்த பின், இனி என்ன செய்ய வேண்டும் என்பதை உணர்ந்தார். தன்னிடமுள்ள ஒரு நல்ல மனதை கண்டறிந்து, அதன் இயல்பைப் பற்றித் தெரிந்துகொள்ள தவமிருக்க ஆரம்பித்தார். மெய்ஞ்ஞான நிலைக்குச் சென்றார், கரையான்கள் அவரைச் சுற்றி புற்று அமைக்க ஆரம்பித்தது. இது தான் அவர் முனிவர் வால்மீகி என்ற பெயரை பெற காரணம்- சமஸ்கிருதத்தில் 'வால்மீக்' என்றால் கரையான் என்று பொருள்.

1936ல் 1037 பக்கங்கள் கொண்ட கான் வித் தி வின்ட் முதன் முதலில் பதிப்பிட்ட போது அதன் விலை வெறும் மூன்று டாலர்கள் தான். பணவீக்கத்தைக் கணக்கிடும்போது, இன்றைய மதிப்பில் இதன் விலை $54 இருக்கலாம் என்று இன்டர்நெட் ஆதாரங்கள் மற்றும் கால்குலேட்டர்களும் தெரிவிக்கின்றன! ஒரு மலிவான வாசிப்பாக இல்லை! 1981ல் நியூ யார்க் டைம்ஸ் பத்திரிகையில் எட்வின் மெக்டவல் எழுதிய ஒரு கட்டுரையில், "ஒரு கட்டத்தில் இந்த புத்தகம் வெளியிடப்படாது என்றே நினைத்தோம், ஏனென்றால் அதன் ஆசிரியரே மூன்று ஆண்டுகளாக அதில் ஈடுபட்ட பின்பு அதைக் கிடப்பில் போட்டுவிட்டார்." 1935ல் தனது அட்லாண்டா ஹோட்டலின் வரவேற்பறையில் நடந்த ஒரு சந்திப்பை, மெக்மில்லன் ஆசிரியர் ஹெரால்டு எஸ்.லாதம் ஞாபகப்படுத்திச் சொல்கிறார்: "மார்க்கரெட் மிட்செல் சோஃபாவில் உட்கார்ந்திருக்கிறார், அவருக்கு பக்கத்தில் நான் இதுவரைக்கு பார்த்திராத அளவு மிகப்பெரிய கையெழுத்துப் பிரதி." அவருடைய தோள்பட்டை உயரம் வரை கட்டுகள் இருந்தது. அவர் எழுந்து சொன்னார்: "என்னுடைய மனம் மாறுவதற்குள் இதை எடுத்துக் கொள்ளுங்கள்." ஏன் என்று யோசிக்க முடிகிறதா? அந்த பக்கங்களில் மறைந்து இருந்தது பேன்ஸி, ஸ்கார்லெட் ஓ'ஹரா இல்லை!

ஏன் மார்க்கரெட் மிட்செல் தன்னுடைய கையெழுத்துப் பிரதியை காட்ட விரும்பவில்லை? "அவர் தன்னுடைய மறுப்பைத் தெரிவித்தார்.... 'அந்த மாநிலங்களுக்கிடையே உள்ள ஒரு போரைப் பற்றி தென்னக மாகாணங்களின் கண்ணோட்டத்தில் எழுதப்பட்ட நாவலை ஒரு வடக்கத்திய பதிப்பகத்தார் ஏற்றுக்கொள்வார் என்று நான் நம்பவில்லை," என்கிறார் மெக்டொனால்ட்.

"எனக்கு நிறைய எழுத்தாள நண்பர்கள் இருக்கிறார்கள், இவர்களின் கதைக்குப் பின்னால் இருக்கிற கதையைக் கேட்கும்போது கோபித்துக் கொள்வார்கள்," என்று நைஜீரிய எழுத்தாளர் சிமமந்தா என்கோஸி அடிச்சி சலோன்-க்கான பேட்டியில் சொன்னார். கற்பனை வானத்திலிருந்து வராது; நீங்கள் எதிலாவது ஈடுபட வேண்டும். எனது புனைவுகள்




என் வாழ்க்கையிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன, ஆனால் மற்றவர்களின் வாழ்க்கையிலிருந்து தான் கிடைக்கிறது."

உண்மையில் கதைக்குள் இருக்கும் கதைகள் மிகவும் விசித்திரமானவை. உங்களுக்குப் பிடித்த எழுத்தாளர்களின் இணையதளத்தை பாருங்கள், நிஜமாக சொல்கிறேன் உங்களுக்குப் பல ஆச்சர்யங்கள் காத்திருக்கும். எனக்குப் பிடித்தமான எழுத்தாளர்களில் ஒருவர் அமிதவ் கோஷ் இந்தியா, சீனா மற்றும் கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் இடையே நடந்த கஞ்சா வணிகத்தைப் பற்றி நிறைய பேர் அவரின் ஐபிஸ் ட்ரையாலாஜியில் (சீ ஆஃப் பாப்பிஸ், ரிவர் ஆஃப் ஸ்மோக், ஃப்லட் ஆஃப் ஃபயர்) கண்டறிந்தனர். இது அவ்வளவு எளிதல்ல என ஒப்புக்கொள்கிறேன், ஆனால் மறுபடியும் உருவாக்கிய உலகத்தையும், எப்படி அதை உருவாக்கினார் என்பதும் அற்புதமானது. இது தான் ஜாஸ் சென் அவரைப்பற்றி Scroll.inல் சொல்கையில்: "ஒரு மிகச் சிறந்த பாராட்டு என்னுடைய நண்பனிடமிருந்து கிடைத்தது, மறைந்த அற்புதமான எழுத்தாளரான சுனில் கங்கோபாத்யாய், இவர் என்னுடைய ஒரு நாவலை வெளியிடும்போது சொன்னார், 'ஏ தோ தேக்ச்சி பங்களா போய், சுது இங்க்ரிஜிதே லேகா! (ஆனால் இது ஒரு பெங்காலி புத்தகம், ஆங்கிலத்தில் மட்டும் எழுதப்பட்டுள்ளது!") இதைவிட நல்லதாக கூறமுடியாது.

*கட்டுரையாளர் ஒரு பிள்ளைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிக்கையாளர்*

# என்றும் இளமை

ஷீலா நம்பியார்

வயதைக் கணக்கிட இரு அம்சங்கள் இருக்கின்றன. நீங்கள் இந்த பூமியில் எந்தனை வருடங்கள் வாழ்ந்திருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்து கால வயது கணக்கிடப்படுகிறது. உங்கள் உடற்கூறு அல்லது 'அசல்' வயது, உங்கள் உடலமைப்பின் தற்போதைய நிலையில் உள்ள அடிப்படை செல்களின் அளவைக் குறிப்பிடுகிறது. இந்த இரண்டும் ஒரே மாதிரி இருக்கவேண்டிய அவசியமில்லை. காலவயதின் அடிப்படையில் ஒருவர் 30 வயதுடையவராக இருக்கலாம், ஆனால் 55 வயதுடையவருக்கு இருக்க வேண்டிய உடலும் மனமும் அவருக்கு இருக்கும். அதிக எடை, மந்தத்தன்மை, பக்குவப்படுத்தாத தசைகள், ஞாபகசக்தி, ஆக்கத்திறன் மற்றும் குறைவான உடலுறுதி போன்றவை அவருக்கு இருக்கலாம். அவருக்கு லாண்டரி பட்டியல் போல இருக்கிற மருத்துவ நிலைமைகளாலும் அவற்றைக் குணப்படுத்துவதற்கான மாத்திரைகளாலும் அவர் மன அழுத்தத்திலும் மனச்சோர்விலும் இருக்கலாம்.

இதற்கு நேர்மாறாக, காலத்தால் 50 வயதைக் கடந்தவராக இருப்பார், ஆனால் சக்தி, உடலுறுதி, வலிமை, "வாழ்க்கையை மகிழ்ச்சியுடன் வாழ்தல்" போன்றவற்றின் அடிப்படையில் பார்க்கும்போது அவர் 35 வயதினரைப் போல இருக்கலாம்.

### அசல் வயது அல்லது உடல் வயதை நிர்ணயிக்கும் காரணிகள் எவை?

இரத்த அழுத்தம், இதயத் துடிப்பு போன்ற காரணிகளும், இரத்தச் சர்க்கரை மற்றும் கொழுப்பு, பார்வைத் திறன், நுரையீரல், இதயம், குரல் நாண்கள், சருமத் தடிப்பு, ஆற்றல் நிலைகள், வெளிப்புறத் தோற்றம், உங்கள் தசைகளின் நிலைமை மற்றும் முறுக்கு, நுண்ணறியும் திறன், ஞாபக சக்தி, சுயசார்பின் அளவு, கொழுப்பு சத வீதம், ஒல்லியான தேகம் மற்றும் உடற்பயிற்சி நிலைகள் (இதய தசைகளின் தாங்கும் திறன், வளையும் தன்மை, வலிமை, சுறுசுறுப்பு, அனிச்சை செயல்கள், சமநிலை, ஒருங்கிணைப்பு மற்றும் பல) போன்ற இதர வளர்சிதை மாற்ற காரணிகளும் உள்ளன.

### உங்களுடைய "அசல்" வயது அல்லது உடல் வயதை எது நிர்ணயிக்கிறது?

ஒரு நல்ல அல்லது மோசமான உடல் தரத்தை மரபணுக்கள் நிர்ணயிக்கின்றன. வாழ்க்கை முறைகள் தான், வயதாகும் செயல்பாட்டின் நிரந்தர தீர்மானக் காரணிகளாக இருக்கிறது. எனினும் உங்கள் மரபணுக்கள் நன்றாக இருந்தாலும், புகையிலை, மது, போதைமருந்து போன்றவற்றால் உடலைப் பழக்கப்படுத்தியிருந்தாலும், தினசரி ஊட்டச்சத்து இல்லா உணவு மற்றும் போதிய உடற்பயிற்சியின்மை போன்ற மோசமான வாழ்க்கை முறைகளையும் கடைப்பிடிப்பவராக இருந்தால் விரைவில் வயதானவராக மாறுவது நிச்சயம்.

வயதாவதைத் தடுத்து நிறுத்த குறைக்கக் முடிகின்ற சில வாழ்க்கைமுறை நடவடிக்கைகள் இங்கே கொடுக்கப்படுள்ளன:

- ஆன்டி-ஆக்ஸிடன்ட்கள், தாது உப்புக்கள், விட்டமின்கள், நார்ச்சத்து அதிகமுள்ள பழங்கள், காய்கறிகள், மற்றும் தானிய வகைகள் போன்றவை புரதம் மற்றும் உயர்தர கொழுப்புகளைத் தருகிறது. பதப்படுத்தப்பட்ட அல்லது தீட்டிய உணவு, புகையிலை மற்றும் அளவுக்கதிகமான மதுவைத் தவிர்க்கவும்.
- நல்ல திட்டமிட்ட உடற்பயிற்சி; இதயப் பயிற்சிகளான ஓடுவது, வேகமாக நடப்பது, சைக்கிள் ஓட்டுவது அல்லது ஏரோபிக் செயல்கள் உள்ளடக்கியதாக இருக்கவேண்டும். தசைகளைக் கட்டமைக்க வலிமையாக்கும் பயிற்சியும் தசைகளின் வளைந்து





கொடுக்கும் தன்மையைப் பராமரிக்க மடக்கி நீட்டும் பயிற்சியும் அதே அளவுக்குச் செய்யவேண்டும்.

வயது ஏறும்போது தசைகள் வலுவிழத்தல் அல்லது திறன் குன்றிப்போதல் மற்றும் பயன்படுத்தாமல் இருப்பது ஆகியவையே நடமாடும் குறைபாட்டிற்கு முக்கியக் காரணம். இது அடிப்படையான வேலைகளைச் செய்வதைக் கூட பாதிக்கிறது. யோகா மற்றும் மொத்த உடலை நீட்டி மடக்கும் பயிற்சிகள் போன்ற செயல்பாடுகள் உடலை வலிகளிலிருந்து தற்காத்துக்கொள்ளவும் தசை சமநிலையின்மை காரணமாக மோசமான நிலைப்பாட்டைத் தடுக்கவும் உதவுகின்றன.

வயதாவதைத் தடுக்கும் மாத்திரைகளை ஒரு போதும் நாம் நாடாமல் இருக்க உடற்பயிற்சி மிகச்சிறந்த வழி. தோல் சுருக்கம் நீங்கும் என்று விளம்பரப்படுத்தப்படும் விலையுயர்ந்த சரும கிரீம்கள், காஸ்மெட்டிக் அறுவைச்சிகிச்சை, லேசர் மூலம் நீக்குதல், போடாக்ஸ் (Botox) போன்றவை வயதாவதைக் குறிக்கின்ற மேலோட்டமான அறிகுறிகளைப் போக்குவதற்கான தீர்வுகளே!

- வயது ஏற உடல் எடை கூடுவது தவிர்க்க முடியாதது அல்ல. சரியான ஊட்டச்சத்து மற்றும் உடற்பயிற்சி வாயிலாக உங்கள் உடல் எடை மற்றும் உங்கள் உடலின் தரத்தைக் கூட அதிகரிக்கலாம்.
- மனஅழுத்தம் நமது தினசரி வாழ்க்கையில் ஒரு அங்கமாக இருக்கிறது. இதை முழுவதுமாக நீக்குவது என்பது கொஞ்சம் அதிகப்படியான எதிர்பார்ப்புதான். எனினும், தியானம், தளர்வுபடுத்தும் செயல்கள், நேர மேலாண்மை மற்றும் பயிற்சி போன்றவற்றால் மன அழுத்தத்தை நன்றாகக் கட்டுப்படுத்தலாம். சூழ்நிலை மன அழுத்தத்தை வேறுவிதமாக சமாளிக்க மனதிற்கு பயிற்சி கொடுக்க வேண்டும்.
- பொழுதுபோக்கு அல்லது உங்களுக்குப் பிடித்தமான மற்றும் ஆர்வமான ஏதாவது ஒன்றில் ஈடுபடுவது போன்ற சாதாரண செயல்கள் முதுமை பற்றிய கண்ணோட்டத்தை மாற்றலாம்.
- உறவுகளுக்கிடையே பிணைப்பை வலுபடுத்துங்கள். குடும்பத்தினர் அல்லது நண்பர்களுடன் நல்லவிதமான உறவுடன் இருப்பது உங்கள் வாழ்க்கைக்கான அர்த்தத்தை அதிகப்படுத்தும்.
- தூக்கம் என்பது ஓய்வு மட்டுமல்ல, அது உடல்வலிமையை மீண்டும் பெறுவதற்கான ஒரு வழி ஆகும். நீண்ட காலம் தூக்கம் கெடுவதால் நீரிழிவு, உடல் எடை அதிகரித்தல், மிகை இரத்த அழுத்தம், மனச்சோர்வு, ஞாபகசக்தி மற்றும் கவனம் குறைபாட்டுப் பிரச்சனைகள் போன்றவை ஏற்படும் என கருதப்படுகிறது. வேலை சார்ந்த தூக்கமின்மை (ஷிப்ட் பணியாளர்கள், மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் போன்றோர்), மோசமான தூக்கப் பழக்கம், மனஅழுத்தம், உடல் எடை அதிகரிப்பு, படுக்கும் நேரத்தில் அதிகமாக சாப்பிடுவது போன்றவை மோசமான தூக்கத்திற்கு வழிவகுக்கும். தரமான தூக்கமானது ஆக்கபூர்வமான வாழ்க்கையுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளது.

**அசல் வயதை எப்படி மதிப்பிடுவீர்கள்? உங்களை எவ்வளவு இளமையானவராக நீங்கள் நினைக்கிறீர்கள் என்பதைப் பொறுத்தே பின்வரும் கேள்விகளை கேளுங்கள் –**

- ◆ உங்கள் வாழ்க்கையும், வேலையையும் சந்தோஷமாக அனுபவிக்கிறீர்களா?
- ◆ வலுவான, பேணும் உறவுகள் இருக்கிறதா?
- ◆ தினசரி உடற்பயிற்சி, நன்றாகத் தூங்குதல் மற்றும் சத்தான உணவை சாப்பிடுதல் போன்றவற்றைச் செய்கிறீர்களா?
- ◆ தினமும் காலையில் படுக்கையை விட்டு எழுவது உங்களுக்கு சந்தோஷமாக இருக்கிறதா?
- ◆ வாழ்க்கையில் அர்த்தம் இருப்பதாக உணருகிறீர்களா அல்லது என்ன செய்வது என்பது தெரியாமல் குழம்பியிருக்கிறீர்களா?
- ◆ ஏதாவது செயல்பாடு அல்லது பொழுது போக்கு போன்றவற்றில் விருப்பம் இருக்கிறதா?

**உங்கள் உடல்தகுதியைச் சோதிக்கவும்**

- ❒ படிக்கட்டுகளில் உங்களால் ஓடவோ அல்லது நடக்கவோ முடிகிறதா?
- ❒ மூட்டுகளை வளைக்காமல் உங்களால் தரையைத் தொடமுடிகிறதா?
- ❒ ஒரு மைல் தூரத்திற்கு எவ்வளவு வேகமாக உங்களால் நடக்க முடியும் மற்றும் களைப்பிலிருந்து எவ்வளவு சீக்கிரமாக மீண்டு வரமுடியும்? (இது ஒரு மைல் நடைப்பயிற்சி சோதனை என அழைக்கப்படுகிறது, ஒரு ஜிம் அமைப்பிலும் இதை மதிப்பிடலாம்.)
- ❒ உங்கள் எடை, கொழுப்பு சதவீதம் மற்றும் உங்கள் இடுப்பு சுற்றளவு என்ன?
- ❒ சரியான புஷ்அப்ஸ் மற்றும் உட்கார்ந்து எழுந்திருப்பது எத்தனை செய்ய முடியும்?
- ❒ ஒவ்வொரு நாளும் அடிப்படை சத்து மருந்துகளுடன் எவ்வளவு மருந்துகள் எடுத்துக்கொள்கிறீர்கள்?

முதுமை, மனித உடலின் ஒரு இயற்கையான செயல்பாடு அதைக் கண்டிப்பாக மாற்ற முடியாது. இருப்பினும், சுயமாகவும், ஆக்கத்திறனுடனும் இருப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் சுயமாக மேற்கொள்வதன் மூலம் மனதார அதைச் செய்ய முடியும்.

*மகப்பேறு மற்றும் மகளிர் மருத்துவர், உடல்நிலை-வாழ்க்கைமுறை ஆலோசகரான ஆசிரியர், இரண்டு புத்தகங்களை வெளியிட்டுள்ளார்: கெட் சைஸ் வைஸ்; கெயின் டூ லாஸ் www.drsheela.nambiar.com*

*வடிவமைப்பு : என் கிருஷ்ணமூர்த்தி*



# நடன வாழ்க்கை

சீதா ரத்னாக்கர்

மேடு பள்ளமாக இருக்கும் கடல் அலைகளையும், தென்றலில் அசைந்தாடும் இலைகளையும், வானத்தில் பட்டாசுகள் வெடித்தபின் கீழே விழும்போதும், தோகை விரித்தாடும் மயில், பறவைக் கூட்டங்கள் பறக்கும்போதும் அல்லது விறுவிறுவென செல்லும் பாம்பையும் பார்த்ததுண்டா மற்றும் அதன் அற்புதமான நடன இயல்புகளை கண்டு வியந்ததுண்டா? ஒவ்வொரு உயிரினத்தின் படைப்பிலும் அசைவுகள், லயம் மற்றும் கருணை இருக்கிறது. இது மனிதனுக்குக் கூடப் பொருந்தும். நடன அமைப்பாளர் திரைமறைவிலிருந்து நம் அனைவருக்கும் ஒரு பொதுவான தாளத்தைக் கொடுத்துள்ளார் - அதுதான் இதய ஒலி - நமது எண்ணங்களையும் அசைவுகளையும் இந்த சந்தத்துடன் இணைக்கும்போது, அது வாழ்க்கையின் நடனமாக மாற்றம் அடைகிறது. உலகிற்கு வால்டயரின் ஆழ்ந்த கருத்து இதுதான்: “வாசி த்தலையும் நடனமாடுதலையும் நம்முடைய பொழுதுபோக்குகளாகக் கொள்வோம்; இவ்விரண்டு பொழுதுபோக்குகளும் நம் உலகிற்கு எவ்வொரு தீங்கும் செய்யாது.”

இந்திய பாரம்பரிய நடனம் வாழையடி வாழையாக குரு-சிஷ்யன் அல்லது ஆசான்-மாணவன் என வாய்மொழியாக கற்றுத்தரப்படுகிற ஒரு வாழும் கலை ஆகும். “மாபெரும் தேசங்கள் தங்கள் சுயசரிதையை மூன்று ஏடுகளில் பொறிக்கின்றன - செயல்களின் ஏடு, சொற்களின் ஏடு மற்றும் கலைகளின் ஏடு.” பரத முனிவரின் நாட்டிய சாஸ்திரம் என்ற ஓர் அளப்பரிய கலைக்களஞ்சிய நூல் இந்தியாவில் நமக்கு சரித்திரச் சொத்தாகக் கிடைத்திருப்பது பெருமையே, அது கிமு 200 இல் இயற்றப்பட்டதாகவும், நிகழ்த்துக் கலைகளைச் சித்தரிக்கும் 6,000 கவிதை வரிகள் கொண்டுள்ளதாகவும் நம்பப்படுகிறது. பார்வையாளர்கள்

தங்கள் சுயநினைவின் ஆழத்திற்கே சென்று ஆன்மிக, ஒழுக்க விஷயங்களில் சிந்தை செலுத்த ஏதுவான ஓர் உலகிற்கு அவர்களைக் கொண்டுசெல்வதே கேளிக்கையின் அடிப்படை நோக்கம் என்பதை இந்த தொன்மையான நூல் வலியுறுத்துகிறது.

இந்தியாவில் பெரும்பாலான மன்னர்கள் கலைகளைப் போற்றி ஆதரித்தனர் என்பதால், இங்கே பாரம்பரியக் கலைகளுக்கு உயர் மதிப்பு அளிக்கப்பட்டது. அவர்கள் தலைசிறந்த கலைஞர்களை அரண்மனை நாட்டியக்காரர்களாகவும், இசைஞானிகளாகவும், கவிஞர் களாகவும் நியமித்தனர், அவர்களின் ஒன்றிணைந்த பங்களிப்புகள் மாபெரும் படைப்புகளாக உருவாகின. 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், சின்னையா, பொன்னையா, சிவானந்தம் மற்றும் வடிவேலு ஆகிய நான்கு திறமையான சகோதரர்கள் பரதநாட்டியத்தில் சிறந்து விளங்கினர். தஞ்சை நால்வர் என அனைவராலும் அறியப்பட்ட அவர்கள், 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தஞ்சையில் மராத்திய மன்னர் 2 ஆம் சரபோஜியின் அவையில் சேவகம் செய்தனர், பிறகு திருவனந்தபுரத்தில் கவிதையிலும் இசையிலும் வல்லவரான ஸ்வாதி திருநாள் மன்னரின் அரச வைக்குச் சென்றனர். அவர்கள் இயற்றிய நடனங்கள் இன்றும் கூட அரங்கேற்றப்படுகிறது மேலும் ஒரு கலைஞரின் திறமைகளை மதிப்பிடும் ஓர் அளவுகோலாகக் கருதப்படுகிறது. இசையும் நாட்டியமும் கோவில் சடங்கு மற்றும் வழிபாட்டில் ஒரு முக்கிய பங்காக இருந்தது, மேலும் இந்தக் கலைக்குச் சொந்தக்காரர்கள் தேவதாசி அல்லது இறை அடியார்கள் என்றழைக்கப்பட்டனர். அந்நிய ஆட்சியாளர்கள் நம் நாட்டில் படையெடுத்தபோது, அரசவை நாட்டியக்காரர்கள் விலைமகள்களாக மாற கட்டாயப் படுத்தப்பட்டனர். ஒரு சமயத்தில் மதிக்கத்தக்க இடத்தில் இருந்த அந்தக் கலை தாழ்ந்த நிலைக்குச் சறுக்கியது. 1930ஆம் ஆண்டில் ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில், தேவதாசி தடைச் சட்டத்தை அறிமுகப்படுத்தி, 1947 ஆம் ஆண்டு அது நிறைவேற்றப்பட்டது, மேலும் கோவில்களில் நடனமாட கோவில் நாட்டியகாரர்களுக்கு தடைவிதிக்கப்பட்டது. இவர்களில் நிறைய பேர் வறுமை நிலைக்கு ஆளாயினர், பாரம்பரிய நடனம் அழியக்கூடிய நிலைக்குச் சென்றது. அதிர்ஷ்டவசமாக, ஒரு சில தைரியமான ஆட்களின் உறுதியால் இது வாழ்ந்துகொண்டிருக்கிறது, எஞ்சியிருந்த திறமையான தேவதாசி கள் நகரங்களுக்கு தப்பிச் சென்று நடன ஆசிரியர்களாகவும் மேடைக் கலைஞர்களாகவும் மாறினர். ஆரம்பத்தில், மரியாதை மிக்க குடும்பத்தில் இருந்து ஒரு சில தைரியமான பெண்கள் நடனத்தைக் கற்க முன்வந்தனர், ஆனால் ஒரு கடுமையான எதிர்ப்பை அவர்கள் எதிர்கொண்டனர். டி.பாலச ரஸ்வதி மற்றும் கலாஷேத்ரா கவின் கலைக்கூடத்தின் நிறுவன-இயக்குனர் ருக்மணி தேவி அருண்டேல் போன்றோரின் உறுதிமிக்க கடுமையான ஈடுபாடு, இந்த தொன்மையான கலை வடிவத்திற்கு ஆதரவைப் பெறவும் இந்தக் கலை வடிவத்துக்கான மரியாதையை மீட்டுத் தரவும் பேருதவியாக இருந்தது. கோவில் நாட்டியக்காரர்களின் பாரம்பரிய குடும்பத்தில் வந்த ஏழாவது தலைமுறைக்கு ஒரு எடுத்து க்காட்டாக தஞ்சாவூர் பால சரஸ்வதி விளங்குகிறார், அத்துடன் 20ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் பரதநாட்டியத்தை அரங்கேற்றவும் இழந்த பெருமையை மீட்டெடுக்கவும் இசைஞானிகள் பல கஷ்டங்களை அனுபவித்தனர். நடனத்துக்கான ஏற்பையும் பாராட்டையும் கண்டுபிடிப்பதற்கான பயணம் மிகவும் கடுமையானதாக இருந்துள்ளது, ஆனால் இன்று இது ஒரு தொன்மையான பாரம்பரியக் கலை என்று நம்மால் பெருமையாகச் சொல்லிக்கொள்ள முடிகிறது.

இந்தியாவின் வேறுபட்ட பாரம்பரிய நடனங்கள் நாட்டின்



**19th** *நூற்றாண்டின் தஞ்சை சகோதரர்கள்* **-** *சின்னையா, பொன்னைய்யா , வடிவேலு, சிவானந்தம்.*

பல்வேறு பகுதிகளுக்கு ஏற்ற மாதிரி எட்டு விதமான பாணிகளில் பிரிக்கப்படுகிறது - தமிழ்நாட்டில் பரதநாட்டியம், ஆந்திராவில் குச்சுப்பிடி, கேரளாவில் கதகளி மற்றும் மோகினியாட்டம், ஒடிசாவில் ஒடிசி, உத்தரப்பிரதேசத்தில் கதக், மணிப்பூரில் மணிபுரி மற்றும் அஸ்ஸாமில் சத்திரியா. அனைத்து விதமான பாணிகளும் நாட்டிய சாஸ்திரத்தின் அடிப்படையில் அமைந்திருக்கிறது ஆனால் ஒவ்வொன்றும் அதன் பிராந்தியத்தின் கலாச்சாரப் பண்புகளுடன் சேர்த்து தனக்கென்று ஒரு தனித்துவ அடையாளத்தை உருவாக்கியுள்ளது. நடனங்கள் பெரும்பாலும் புராணங்கள், நாட்டுப்புற மற்றும் வட்டார சுவையைச் சேர்க்கும் உள்ளூர் கதைகள் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்திருக்கின்றன. வரலாற்றுக் கதாபாத்திரங்களின் நற்பண்புகள் மற்றும் நல்லொழுக்கங்களை பாராட்டியும் வழிபாட்டு இடங்களில் தெய்வங்களை வழிபடுவதன் மூலமும் இப்பகுதியின் பழக்கவழக்கங்கள், கட்டிடக்கலைகள், தாவரங்கள் மற்றும் விலங்கினங்களை அவைகள் விவரிக்கின்றன. பழைமையான சமஸ்கிருத இலக்கியம் முதல் தற்காலத்திற்கு ஏற்புடைய உள்ளூர் மொழிகளிலும் வட்டார வழக்கிலும் எழுதப்பட்ட பாடல்கள் வரை பலவகையான பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அந்தப் பகுதியின் பாரம்பரிய வகையிலிருந்து இசையும் அதனுடன் இணைந்த இசைக்கருவிகளும், பாரம் பரியமாக கச்சேரிகள் மற்றும் சடங்குகள் ஆகியவற்றில் பயன்படுத்தப்படுகின்றன. இப்பகுதியில் நெய்தபட்டால் ஆடைகள் உருவாக்கப்படுகின்றன, மேலும் நகைகளும் இதர அலங்காரங்களும் உள்ளூர் பாணியில் இருக்க வேண்டுமென்பதற்காக அந்தப் பகுதியிலேயே உருவாக்கப்படுகின்றன. ஆசிரியரிடமிருந்து மாணவர்களுக்கு தலைமுறை தலைமுறையாக ஒப்படைக்கப்பட்டு, இந்த மரபுகள் கவனமாக பாதுகாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாரம்பரிய நாட்டியக்காரர்கள் அவற்றுக்கு உண்மையாக இருக்க உணர்வுப்பூர்வமான முயற்சிகளை மேற்கொள்கிறார்கள். தேவதாசி பரம்பரையில் இருந்து வந்த ‘கலைமாமணி’ கே.ஜே.சரஸா அவர்களிடம் நேரடிப் பார்வையில் என் சகோதரி, ரத்னா (பாப்பா) குமாருடன் சேர்ந்து பரதத்தைக் கற்பதற்கான அதிர்ஷடம் எனக்கு இருந்தது. பாரம்பரிய நடன அசை வுகளில் எங்களுடைய நடனத் திறமைகளை அவர் பட்டை தீட்டினார், இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் நாட்டியமாடுவதற்கான பாக்கியமும் எங்களுக்குக் கிடைத்தது. நான் நாற்பதாண்டுகளுக்கு முன்னரே நடனமாடுவதை நிறுத்திவிட்டேன், ஆனால் என் சகோதரி கடந்த 43 வருடங்களாக அமெரிக்காவில் ஹூஸ்டன், டெக்சாஸில் உள்ள அவரது அஞ்சலி சென்டர் ஃபார் பெர்ஃபார்மிங் ஆர்ட்ஸ் மையத்தில் நடனமாடியும்





கற்பித்தும் வருகிறார். எதிர்கால தலைமுறை நடனக் கலைஞர்களை உருவாக்க இந்த மாபெரும் பாரம்பரியத்தை கற்றுக்கொடுப்பதன் மூலம் நமது உயர்ந்த கலாச்சார பாரம்பரியத்தை அவர் தொடர்ந்து பரப்பி வருகிறார்.

சமீப ஆண்டுகளில், ஆந்திரா விலிருந்து விலாசினி நாட்டியம், ஒடிசாவிலிருந்து மயூர்பஞ்ச் சாவ், மேற்கு வங்காளத்திலிருந்து புருலியா சாவ் மற்றும் ஜார்கண்டிலிருந்து செரேகெல்ல சாவ் போன்ற பல்வேறு பகுதிகளில் நிகழ்த்தப்படுகின்ற நடன வடிவங்கள் பாரம்பரிய வகைகளில் சேர்க்கப்பட்டுள்ளன. பல நூற்றாண்டுகளுக்கு இந்தத் துடிப்பான நடன வடிவங்களின் அழகுகளை பாதுகாப்பதற்கு பாரம்பரியத்தைப் பின்பற்றுதலே முக்கியமாகும். நடனம், பிராந்தியத்திலிருந்து தேசியத்திற்கும் பிறகு உலகளவில், மொழி மற்றும் மத எல்லைகளையும் அழிப்பதன் மூலமும், சர்வதேச பார்வையாளர்களின் ஏற்பைப் பெறுவதன் மூலமும் இன்னும் கூடுதலான வகையில் பரவுகிறது. இன்று, படைப்பின் வெளிப்பாட்டின் ஒவ்வொரு வகையையும் மதிக்கப்படுகிறது, பாரம்பரியம் மற்றும் பரிசோதனை முழுமையான இணக்கத்துடன் இணைந்திருக்க முடியும். ஓஷோ அதை சுருக்கமாக கூறுகிறார்: “வாழ்க்கையில் அன்புடன் இருப்பதே ஆக்கபூர்வமானதாக இருப்பதாகும். நீங்கள் கொஞ்சம் இசையும், கொஞ்சம் கவிதையும், கொஞ்சம் நடனமும் சேர்க்கவேண்டும். நீங்கள் அதன் அழகை மேம்படுத்த விரும்பினால் இவற்றைச் சேர்த்து உங்கள் வாழ்க்கையை நேசித்தாலே உங்களால் ஆக்கப்பூர்வமாக வாழ முடியும்.” இந்த உலகத்தின் அழகை மேம்படுத்துகின்ற தெளிவான ரசிகர்கள் அல்லது கலைத் திறனாய்வாளர்களாக ஆவதற்கு நடனம் பற்றிய நம்முடைய புரிதலை இன்னும் கொஞ்சம் மேம்படுத் திக்கொள்வதற்கும், கலையழகை சிறப்பாகப் புரிந்துகொள்வதற்கும் நாம் கடுமையாக முயற்சிப்போம். ■



*சென்னை கலாக்ஷேத்ரா ஃபவுண்டேஷன் நிறுவனர் ருக்மணி தேவி அருண்டேல்.*



**கிழக்கு கும்பகோணம் ரோட்டரி சங்கம்** (D 2981)

சோழபுரம் அரசு உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு விதைப் பந்துகள் தயாரிக்க சங்கத்தினர் கற்றுக்கொடுத்தனர். அவர்களது மனதில் மரம் நட்டு வளர்ப்பதன் அவசியத்தை உணர்த்தவும் சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தவும் இந்தத் திட்டம் உதவும்.

**சேலம் காஸ்மோஸ் ரோட்டரி சங்கம்** (D 2982)

அமெரிக்காவின் ரோட்டரி மாவட்டம் 5330 மற்றும் சேலம் மத்தி ரோட்டரி சங்கம் மற்றும் TRF ஆகியவற்றின் மூலம் உலகளாவிய மானிய உதவியில் புறநகரில் உள்ள அரசுத் தொடக்கப் பள்ளியில் கழிப்பறைப் பகுதி கட்டி, திறந்து வைக்கப்பட்டது. அதற்கான மொத்த மதிப்பு ரூ.4 லட்சம்.




**இந்திரபுரம் பரிவார் ரோட்டரி சங்கம்** (D 3012)

சிறு வயதில் ரயில் விபத்தில் கால் இழந்த ராஜாபாபு என்பவருக்கு ரூ.1.40 லட்சம் மதிப்பிலான பாட்டரியில் இயங்கும் ஆட்டோ ரிக்ஷா நன்கொடையாக வழங்ககப்பட்டது. மாற்றுத் திறனாளியான அவர் ஒரு சிறந்த கிரிக்கெட் வீரராக இருக்கிறார். கான்பூர் அணிக்காக விளையாடுகிறார்.



**கரூர் அமராவதி ரோட்டரி சங்கம்** (D 3000)

கரூர் நகரில் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குநர் C. பாஸ்கர் தொடங்கிவைத்த இந்த முகாமில் 200 பேர் மருத்துவப் பரிசோதனை செய்துகொண்டு பயனடைந்தனர். இதற்கு ரூ.65 ஆயிரம் பயன்படுத்தப்பட்டது.



# சேவைகள்

**கோத்தபெட்டா ரோட்டரி சங்கம்** (D 3020)
ஒரு மருத்துவ முகாமில் காது கேளாதோர், வாய் பேசாதோருக்கான சிறப்பு சிகிச்சை நடத்தப்பட்டது. நூற்றுக்கும் மேற்பட்டோர் பயனடைந்தனர். மிகச் சலுகை விலையில் காதுகேட்கும் கருவிகளும் வழங்கப்பட்டன.




**உதம்பூர் ரோட்டரி சங்கம்** (D 3070)




தாத்தி கிராமத்தில் ஊராட்சி இல்லத்தில் கண் பரிசோதனை முகாம் நடத்தப்பட்டது. அதில் 170 பேருக்கு கண் பரிசோதனையும், 20 பேருக்கு ரோட்டரி கண் மற்றும் காது-மூக்கு-தொண்டை மருத்துவமனையில் கண்புரை அறுவைச் சிகிச்சையும் செய்யப்பட்டது.

**மத்திய குவாலியர் ரோட்டரி சங்கம்** (D 3053)
சங்கம் தத்து எடுத்துள்ள பள்ளிக்கு வகுப்பறைகளில் மாணவர்கள் வசதியாக அமர்ந்து படிக்கவும் எழுதவும் மர பெஞ்சுகள், மேசைகள் வழங்கப்பட்டன. சங்கத்தின் தலைவர் சியாம் அகர்வால், PDG பூபேந்திர ஜெயின், கல்வியாளர் அனிதா அகர்வால் ஆகியோர் முன்னிலையில் இதற்கான நிகழ்ச்சி நடைபெற்றது.







**பாராபங்கி ரோட்டரி சங்கம்** (D 3120)
மகளிர் அழகுசாதனக் கடை உரிமையாளர் மீரா வர்மாவுக்கு சர்வதேச மகளிர் தினத்தையொட்டி ரோட்டரி சங்கம் சார்பில் பாராட்டு விழா நடத்தப்பட்டது. பல பெண்களுக்கு ஆடை வடிவமைப்பு, தையல் பயிற்சியை அளித்து உதவிய சேவையைப் பாராட்டி இந்த விழா நடத்தப்பட்டது.

**பண்டி ரோட்டரி சங்கம்** (D 3054)
சட்டமன்ற உறுப்பினரும் ரோட்டரி சங்க உறுப்பினருமான அசோக் டோங்ராவின் பிறந்த நாளையொட்டி பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. இந்த முகாமில் 21 மருத்து வர்கள் பங்கேற்று, 3,500 நோயாளிகளுக்குப் பரிசோதனைகள் செய்து மருந்துகளும் வழங்கப்பட்டது.



**மும்பை மலபார் ஹில் ரோட்டரி சங்கம்** (D 3141)

மும்பை, காட்டன் கிரீன் மற்றும் சேவ்ரி ஆகிய பகுதிகளில் உள்ள செயின்ட் ஜூட் இந்தியா குழந்தை நல மையங்களில் புற்றுநோயால் பாதித்த சிறுவர்களுடன் ரோட்டரியினர் பொங்கல் பண்டிகையை கொண்டாடினர். சங்கம் கடந்தாண்டு இமையத்திற்கு இரண்டு அடுக்குகளைக் கொண்ட கட்டடம் கட்டுவதற்காக ரூ.1.80 கோடி நன்கொடை அளித்தது.



**நியூ செஞ்சுரி பிதார் ரோட்டரி சங்கம்** (D 3160)

சாலையோரம் செருப்புத் தைக்கும் தொழிலாளிகள் கோடையைச் சமாளிப்பதற்காக 30 குடைகளும், குடிநீர்ப் பாட்டில்களும் வழங்கப்பட்டன. இக்குடைகளுக்கு A.G. பஸ்வராஜ் தன்னூர் நன்கொடை அளித்து உதவினார்.




**புத்தூர் ஸ்வர்ணா ரோட்டரி சங்கம்** (D 3181)

பாதுகாப்பாக வாகனம் ஓட்டுவது குறித்த விழிப்புணர்வுப் பிரசார பதாகை ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்பட்டது. மாவட்ட ஆளுநர் சுரேஷ் செங்கப்பா, எச்பிசிஎல் நிறுவனத்தின் துணைப் பொதுமேலாளர் வஸந்த் ராவ் ஆகியோர் இணைந்து இந்தப் பிரசாரத்தைத் தொடங்கிவைத்தனர். இதையடுத்து, சுங்கச் சாவடிகளில் விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டன.



**முடிகரே ரோட்டரி சங்கம்** (D 3182)

நகரை சுற்றியுள்ள ஐந்து அரசுப்பள்ளிகளில் Smart classes அமைக்கப்பட்டன. ரோட்டரி சங்கத்தின் Happy Schools திட்டத்தின் கீழ் இந்த வகுப்புகள் அமைக்கப்பட்டன. தங்களது கற்பிக்கும் முறைக்குப் பெரிதும் உதவும் வகையில் வகுப்புகள் அமைக்கப்பட்டதற்குப் பள்ளி ஆசிரியர்கள் தங்களது நன்றிகளைத் தெரிவித்தனர்.




**பெங்களூர் ஒயிட்ஃபீல்டு சென்டரல் ரோட்டரி சங்கம்** (D 3190)

ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பின் 113ஆவது ஆண்டினையொட்டி 3 கிமீ தூரம் நடக்கும் நடை நிகழ்ச்சியில் 9 ரோட்டரி சங்கங்களுடன் மாவட்ட ஆளுநர் ஆஷா பிரசன்னகுமார் தலைமையிலான நடை நிகழ்ச்சியில் 200 பேர் போலியோவை ஒழிப்போம் என்ற வாசக அட்டைகளையும் ஏந்திய படி நடைபயணம் செய்தனர்.



# சேவைகள்



**கொச்சி மிலன் ரோட்டரி சங்கம்** (D 3201)
தர்பார் ஹால் பகுதியில் உள்ள குளத்தைத் தூய்மைப் படுத்தும் பணியில் 'அன்போடு கொச்சி' என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனத்துடன் இணைந்து ரோட்டரி சங்கத்தினர் ஈடுபட்டனர். நீர் நிலைகளைப் பாதுகாப்பதன் அவசியம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.




**சிவகாசி ஸ்பார்க்லர் ரோட்டரி சங்கம்** (D 3212)
விருதுநகர் மாவட்டத்தில் மாணவர்களுக் காக திருவிழா நடத்தப்பட்டது. அதில் 25 பள்ளிகளைச் சேர்ந்த 600 மாணவர்கள் பங்கேற்றனர். மாடலிங், பூ வேலைப்பாடு, சுடோகு, பொது அறிவுப் போட்டி, மாறுவேடப் போட்டி, நாட்டியப் போட்டி, ஆடை அலங்கார அணிவகுப்பு ஆகியவை இடம்பெற்றன.



**வடக்கு வேலூர் ரோட்டரி சங்கம்** (D 3231)
வெண்ணம்பள்ளி மேல்நிலைப் பள்ளியில் சானடரி நாப்கின்களை அழிக்கும் கருவி நிறுவப்பட்டது. இந்த சுகாதாரப் பாதுகாப்புத் திட்டத்தில் நானூற்றுக்கும் மேற்பட்ட மாணவிகள் பயன்பெறுவர்.



**கத்வா ரோட்டரி சங்கம்** (D 3240)
மேற்குவங்கம் போஸ்ட்கிராம் கிராமத்தில் அமைக்கப்பட்ட ஒரு தொடக்கப்பள்ளிக்கு பெஞ்சுகள் வழங்கப்பட்டன. இது வரை அப்பள்ளிச் சிறுவர்கள் தரையில் அமர்ந்தே பாடம் கற்றனர். இந்த பெஞ்சுகளுக்காக ஒவ்வொரு உறுப்பினரும் தலா ரூ. 2,500 நன்கொடை அளித்தனர்.



**தமோஹ் ரோட்டரி சங்கம்** (D 3261)
சிறுவர்களுக்காக ஒரு மருத்துவ முகாம் மத்திய பிரதேசத்தின் தமோஹ் என்னும் ஊரில் ரோட்டரி சங்கத்தால் நடத்தப்பட்டது. சிறப்பாக நடைபெற்ற இந்த முகாம் அனைத்து தரப்பினரின் வரவேற்பையும் பாராட்டையும் பெற்றது.

ஒருங்கிணைப்பு: V முத்துக்குமாரன்
வடிவமைப்பு: L குணசேகரன்

# உயிர் காக்க கற்றுக்கொள்வோம்

கிரண் ஜேஹ்ரா

ஆம்புலன்ஸுக்காக 108-ஐ அழைக்குமாறு தனது தோழியிடம் சொல்லிவிட்டு, சினேகா தாமஸ் போம்மை உடல் முன் நெஞ்சை அழுத்தியும், வாயில் வாய் வைத்து செயற்கைச் சுவாசமும் கொடுத்துக் கொண்டிருந்தார். இது அவசர காலத்தில் அடிப்படை முதலுதவி பற்றி கொச்சியில் உள்ள பவன்ஸ் வித்தியா மந்திர் பள்ளியில் RC மேற்கு கொச்சி நடத்திய பயிற்சியாகும். “ஏதாவது ஒரு நாள் நிஜமாகவே இது போல செய்ய வேண்டியிருக்கலாம், ஆம்புலன்ஸ் வருவதற்கு முன்பு என்ன செய்யவேண்டும் என்பதைத் தெரிந்து கொள்வது, வாழ்விற்கும் சாவிற்கும் இடையே ஒரு பெரிய வித்தியாசத்தை உருவாக்கும்” என்கிறார் Samaritan Programme இல் பங்கெடுத்தவரான பள்ளியின் மாணவி சினேகா. இது விபத்துக் காலங்களில் உயிர்களை எப்படிக் காப்பாற்றுவது குறித்த ஒரு முழுமையான பயிற்சிதிட்டம். சங்கத்தின் தலைவர் அஜித்குமார் கோபிநாத்தின் இத்திட்டம் RC மேற்கு கொச்சின், D 3201, VPS லேக் ஷோர் மருத்துவமனை மற்றும் கொச்சி நகர காவல்துறை ஆகியவற்றுடன் இணைந்து தொடங்கப்பட்டது.

திடீரென ஒரு நண்பனை இழந்த நிகழ்வு அவசரகால விபத்து பராமரிப்பு பற்றி மக்களுக்கு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் அவசியத்தை அவருக்குள் ஏற்படுத்தியது. “ஒரு உணவகத்தில் இரவு உணவை சாப்பிடும் போது, மரணத்திற்கு இலக்காகிவிட்டாள் என் தோழி. யாராவது அவரது இதயத்துடிப்பை மீட்டெடுத்து, உடனடியாக CPR கொடுத் திருந்தால் அவளைக் காப்பாற்றி இருந்திருக்கலாம் என்று டாக்டர்கள் கூறினர். துரதிருஷ்டவசமாக நம்மில் பலருக்கு இதைப் பற்றி அதிகமாகத் தெரிவதில்லை. மதிப்புமிக்க உயிர்களைக் காப்பாற்ற நமக்கு முதலுதவி பற்றிய அறிவு முக்கியமானது” என்கிறார் கோபிநாத், இவர் Project Samaritan பற்றி கொச்சியில்



*பள்ளி மாணவி ஒருவர் முதலுதவி புரிய கற்றுக்கொள்கிறார்.*



*காவல்துறையினருக்கு உயிர்காக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது.*

பள்ளி மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்.

லேக் ஷோர் மருத்துவமனையில் நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணரான டாக்டர் அருண் ஊமன் உடன் இணைந்து, எலும்பியல் அறுவை சிகிச்சை நிபுணரான டாக்டர் நாசர் சாண்டி, உயிர் காக்கும் திறன்கள் குறித்த ஒரு 3-நிலை பயிற்சியை வடிவமைத்தார். இதை யார் வேண்டுமானாலும் செய்யலாம்; இதற்கு கருவிகளோ அல்லது பணமோ தேவைப்படாது. பள்ளிகள் மற்றும் பொது இடங்களில் அவசரகால தயார்நிலையை அதிகரிப்பதும், அவசரகால சூழ்நிலைகளில் மக்களின் உதவியை மேம்படுத்துவதும் தான் இதன் குறிக்கோள். சுருக்கமாக, “இந்த ஒலி-ஒளி காட்சி வகுப்பு, ஒரு ஷோகேஸ் பொம்மையின் உதவியுடனும் ஒரு உயிரைக் காப்பாற்ற ஒவ்வொரு வாய்ப்புகளையும் பயன்படுத்த பங்கேற்பாளர்களை ஊக்கப்படுத்துகிறது” என்கிறார்.

நிலை 1இல் 40 பள்ளிகளைச் சேர்ந்த 9,000 மாணவர்களுக்கும், நிலை 2இல் ஏறக்குறைய 500 மாணவர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. “இந்தத் திறனை குழந்தைகள் வெகு இயல்பாகக் கற்றுக்கொள்கிறார்கள்” என்கிறார் ஏற்கனவே இந்த பயிற்சி இங்கே நடத்தப்பட்ட தேவக்கள் வித்யோதயா பள்ளியின் முதல்வர் எஸ்தர் ஆக்னஸ். “மாணவியர் இதைக் கற்றுக்கொள்ள விரும்புகிறார்கள், ஆர்வத்துடன் கவனம் செலுத்துகிறார்கள். அத்துடன், இந்த பயிற்சி அவர்களின் நடத்தை மாற்றத்தையும் ஊக்கப்படுத்துகிறது. இது வீடு, பள்ளி மற்றும் பெரிய சமுதாயத்தில் உள்ள மற்றவர்களுக்கும் பலனளிக்கும்.” நாட்டிலுள்ள ஆறு நகரங்களில் உள்ள கேந்திரியா வித்தியாலயா பள்ளிகளின் ஆசிரியர்கள் 50 பேருக்கும் பயிற்சி அளித்துள்ளது.

சமீபத்தில் இந்தச் சங்கம் நகர போக்குவரத்து காவல்துறைக்கும் இப்பயிற்சித் திட்டத்தை நீடித்துள்ளது. “அவர்களில் சிலருக்கு எப்படி நாடித்துடிப்பு பார்க்கவேண்டும் என்பது கூடத் தெரியாது,” என்கிறார் கோபிநாத், நெடுஞ்சாலைகளில் ஏற்படும் விபத்து/அவசரகாலத்தில் முதல் ஆளாக செல்பவர்கள் இவர்கள் தான் என அவர் மேலும் கூறினார். காவல் துறை, ஆட்டோ ஓட்டுனர்கள் மற்றும் கட்டடத் தொழிலாளிகள் போன்றோர் உள்ளடங்கிய 102 உறுப்பினர்களுக்கு லேக் ஷோர் மருத்துவமனையில் ஒரு நாள் சான்றிதழ் பயிற்சி நடத்தப்பட்டது, காவல்துறை ஆணையர் MP தினேஷ் இதை மிகவும் பாராட்டினார்.

“யாராவது உடல்நிலை சரியில்லாமல் பேச்சுமூச்சற்றுப் போனாலோ அல்லது மாரடைப்பால் பாதிக்கப்பட்டாலோ, யாராவது ஒருவர் இந்தச் சூழ்நிலையை கையிலெடுத்து விரைவாகவும் சரியாகவும் செயல்படக்கூடிய புத்தி சாலித்தனத்தைப் பெற்றிருக்க வேண்டும். இது போன்ற அவசரகாலங்களில் ஒவ்வொருவரையும் களத்தில் இறங்கவைத்து நேர்மறையாகச் செயல்பட இந்தப் பயிற்சித் திட்டம் ஈடுபடுத்துகிறது.” மூச்சுத்திணறல் முதல் மாரடைப்பு வரை, இது போன்ற 19 சூழ்நிலைகளில் ஒரு உயிரைக் காப்பாற்ற சரியான நடைமுறைகளைச் செயல்படுத்துவதற்கு Good Samaritan Programme கற்றுக்கொடுக்கிறது. “ஒரு உயிரைக் காப்பாற்றுவது என்பது அழகானது. ஆனால், இது சரியான வழியில் செய்யப்படவேண்டும். ஒரு நல்ல சமாரியனாக இருப்பதற்கு இதுதான் தாரக மந்திரம்” என்கிறார்.■






# ஏன் கிரிக்கெட் பேட்ஸ்மேன்களுக்கு மட்டும் சாதகமாக இருக்கவேண்டும்

TCA ஸ்ரீனிவாச ராகவன்

வளர்ச்சியடைந்த ஒருவர், ஆட்டத்தில் வெற்றியோ அல்லது தோல்வியோ அடைந்து டிவியில் அழுவதைப் பார்க்கையில் எரிச்சலாக வருகிறது. குறிப்பாக கிரிக்கெட் வீரர்கள் ரொம்ப உணர்ச்சி வயப்படுகிறார்கள். கொல்கத்தாவில் வினோத் காம்ப்ளி அழுகிறார், கபில்தேவ் மேட்ச் ஃபிக்சிங் பற்றி கேட்கையில் தன்னைக் காக்க அழுகிறார், இன்ஜமாம் உல்-ஹக் தனது கடைசி ஆட்டத்தில் ஆட்டமிழந்தபோது கண்ணீர் விட்டார், ஆசிய கோப்பை இறுதி ஆட்டத்தில் தோல்வியடைந்ததால் ஒட்டுமொத்த வங்கதேச அணியே உடைந்து போனது, நியூசிலாந்து அணியுடன் தோல்வியடைந்ததால் மொத்த தென்னாப்பிரிக்கா அணியும் அழுதது இது ஒரு எரிச்சல் கொடுக்கும் நீண்ட பட்டியல்.

இந்த கிரை பேபி ஹால் ஆஃப் ஃபேம்-க்கு இப்போதைய புதுவரவு, மூன்று ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்கள். இதில் ஒரு வித்தியாசம் உள்ளது: அவர்கள் அடைந்த வெற்றிக்கோ அல்லது தோல்விக்கோ அழவில்லை; பந்தை சேதப்படுத்தி கேமராவில் மாட்டிக் கொண்டதால் அழுகிறார்கள். இவர்கள் அழுதிருந்தாலும் கூட எனக்கு சந்தேகம், ஏனென்றால் நிர்ணயிக்கப்பட்டவாறு 'பந்தின் நிலையை மாற்ற' எல்லாரும் கூடி சதி செய்தனர். அனேகமாக அவர்கள் மாட்டிக்கொண்டு, குற்றம் சாட்டப்பட்டதால் இந்த நிலை வந்திருக்கலாம். இதே போல ஒரு வரம்புமீறிய செயல் 18 ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் நடந்ததற்கு, அவர்கள் அனுப்பப்பட்டிருக்க வேண்டும், உண்மையில் அப்போது ஆஸ்திரேலியா ஒரு குற்றவாளிகள் தீவு தான்.

பந்தை சேதப்படுத்துவதன் விளக்கம் 'பந்தின் நிலையை மாற்ற முயற்சிப்பது' எனக்கு எப்போதும் குழப்பத்தையே கொடுக்கிறது. அதாவது, கனமான, அதிகமான வளைவுகளுடன் ஒரு பேட்ஸ்மேன் தன்னுடைய மட்டையைக் கொண்டு முறைகேடாகச் செயல்படும்போது – ஏன் பவுலர்கள் பந்துகளில் சேதம் விளைவிக்கக்கூடாது? சொல்லப்போனால் ஒரு பேட்ஸ்மேன், ஒவ்வொரு பந்து வீசப்படும்போதும் அதாவது ஒரு பந்துக்கு ஒரு மட்டை வீதம் ஆறு மட்டைகளை மாற்றலாம், வைடுகள் இருந்தால் அது இன்னும் அதிகமாகும், ஏன் பவுலர் ஒரு ஓவருக்கு ஆறு வெவ்வேறு பந்துகள் வீச அனுமதிக்கவில்லை? மேலும் அவை மூன்று சிவப்பு பந்துகள் மற்றும் மூன்று வெள்ளை பந்துகளாகக் கூட இருக்கலாம், அனைத்தும் வெவ்வேறு விதமான தன்மையைக் கொண்டவையாக இருக்கலாம், பவுலர் விரும்பும் எந்த கலவையை வேண்டுமானாலும் தேர்ந்தெடுக்கலாம். ஆட்டம் இந்த பேட்ஸ்மேன்களுக்கு மட்டும் சாதகமாக இருக்கிறது என்றில்லாமல், ஆட்டத்திற்கு நன்மை பயக்க வேண்டுமென்பதற்காக பந்தை சேதப்படுத்துவதை இது நிறுத்தும்.

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ICC), 50 ஓவர் போட்டிகளில் ஒவ்வொரு அணியும், தலா முனைக்கு ஒன்று வீதம் இரண்டு பந்துகளைப் பயன்படுத்த அனுமதித்து இருக்கிறது. அதனால் ஒவ்வொரு பந்தும் 25 ஓவர்களுக்கு மட்டும் பயன்படுத்தப்படுகிறது, இது 'அதன் தன்மையை மாற்றுவதற்கான' தேவையை குறைக்கிறது. இதில் ஒரு சின்ன மாற்றத்தை சேர்க்க விரும்புகிறேன்: ஒவ்வொரு அணியும், ஒவ்வொரு முனையிலிருந்தும் ஏன் சிவப்பு மற்றும் வெள்ளைப் பந்துகளை பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது? பேட்ஸ்மேன்களுக்கு சாதகமாக இருப்பதில் ஒரு சார்புத்தன்மையும், ஃபீல்டிங் செய்பவர்கள் பந்தை சேதப்படுத்த வேண்டிய கட்டாயத்தையும் இது குறைக்கும்.

சில வருடங்களுக்கு முன்பு, 50 ஓவர் ஆட்டத்தை 25 ஓவர்களாக இரண்டு இன்னிங்ஸ்களாக விளையாட சச்சின் டெண்டுல்கர் பரிந்துரை செய்தார். ICC அவரின் பரிந்துரையை ஒப்புக்கொண்டிருந்தால், ஒவ்வொரு அணியும் நான்கு பந்துகள் வைத்து ஆடுவார்கள், இதை கீறுவதோ அல்லது தடவுவதோ அல்லது சர்க்கரை கலந்த எச்சிலை அதன்மீது துப்புவதோ அல்லது புருவத்திலிருந்து வாசலினை எடுத்து தேய்ப்பதோ குறைக்கப்பட்டிருக்கும்.

*சில வருடங்களுக்கு முன்பு, 50 ஓவர் ஆட்டத்தை 25 ஓவர்களாக இரண்டு இன்னிங்ஸ்களாக விளையாட சச்சின் டெண்டுல்கர் பரிந்துரை செய்தார்.*

மேலும் இரண்டு விஷயங்கள் எனக்குப் புரியவில்லை. முதலாவது, பிட்சின் தன்மையை மாற்ற வீரர்கள் மீதுள்ள கட்டுப்பாடுகள் – பேட்ஸ்மேனை ஒரு ஸ்பின்னர் அவுட்டாக்காத படி, இரண்டு கிரீஸ்களுக்கு அருகில் உங்கள் ஷூக்களால் சிறு கீறல்களை உருவாக்க முடியாது, பேட்ஸ்மேன் இருக்கும்போது, அவனுக்கு எப்படி தைரியம் இருக்கும்? ஆனால் பிட்ச் தயாரிக்கும் போதே இது போன்றவற்றை செய்ய எந்த வழிமுறையும் இல்லை. விளைவு: பந்துக்கு அதன் எடை, நிறம், உயரம் மேற்கொண்டு எல்லாமே கட்டுப்படுத்தப்பட்டது போல, பிட்சுக்கு தரநிலை எதுவுமில்லை.

இரண்டாவது, கடந்த 15 வருடங்களாக பவுண்டரி எல்லையின் தூரத்திற்கு எந்தவித கட்டுப்பாடு களும் இல்லாத நிலையில், இப்போது டிவி ரசிகர்களின் ஆர்வப் பசிக்காக ஆட்டக்காரர்கள் அடித்து ஆடுவதற்காக அது குறைக்கப்பட்டுள்ளது. முன்னர் சராசரியாக 70 யார்டுகள் இருந்தது; இப்போது ஏறக்குறைய 55 யார்டுகள் இருக்கிறது, அதனால் பேட்ஸ்மேன்கள் எளிதாக சிக்ஸர் அடிக்க முடிகிறது. ஏன் இதையும் தரநிலைப்படுத்த முடியாது?

பவுலர்களுக்காக மிகவும் வருந்துவதற்கு எந்தக் காரணமும் இல்லை எனச் சொல்கிறது. முடிவில் அனைத்துமே சமநிலையாகிவிடும். IPL-இல், சாதாரண பவுலர்கள் கூட ஒரு ஆட்டத்திற்கு லட்சக்கணக்கில் சம்பாதிக்கிறார்கள் – வெறும் நான்கு ஓவர்கள் மட்டும் பந்து வீசுவதற்கு. ■

# செய்திச் சிதறல்கள்

## NGOக்கு அரசு நன்கொடைகள்



இளவரசர் ஹாரி மற்றும் மேகன் மார்க்கில் திருமணத்தில் கலந்துகொண்டு நன்கொடை பெறும் ஏழு அறக்கட்டளைகளில் ஒன்று, மும்பையைச் சேர்ந்த மைனா மஹிலா அறக்கட்டளை. மே மாதம் நடைபெறும் தங்களின் திருமணத்தில் கலந்துகொள்பவர்கள் பரிசுப் பொருட்களுக்குப் பதிலாக இந்த அறக்கட்டளைகளுக்கு உதவி செய்யுமாறு வேண்டுகோள் விடுத்திருக்கிறது இந்த அரச ஜோடி. சேரியைச் சேர்ந்த பெண்கள் சானிடரி பேடுகளை உற்பத்தி செய்து குறைந்த விலைக்கு அவர்களின் சமூகத்தில் விற்க NGO அவர்களை பணியமர்த்தியிருக்கிறது, மேலும் மாதவிடாய் காலங்களில் சமுதாயத்திலிருந்து விலக்கி வைக்கப்படுவதை அறவே நீக்க வேண்டுமென விரும்புகிறது.



## சியாசின் வீரர்களுக்கு ஆக்சிஜன்

சியாசினில் உறைபனி, பனி உறைந்த காற்று, கடுமையான நிலப்பரப்பு மற்றும் ஆக்ஸிஜன் குறைந்த நிலை போன்ற இன்னல்களுக்கு இடையே நாட்டைக் காக்கும் இந்திய ராணுவ வீரர்களின் நலனுக்காக, சுமீதா மற்றும் யோகேஷ் சித்டே, ஒரு ஆக்சிஜன் தயாரிக்கும் நிலயத்தை அமைப்பதற்கு உதவ தங்கள் நகைகளை விற்று ரூ.1.25 லட்சம் திரட்டிக் கொடுத்து ஒரு முன்மாதிரியாக விளங்குகின்றனர். கடல் மட்டத்திலிருந்து 22,000 உயரத்தில் இருக்கும் இது தான் உலகின் உயரமான போர்க்களம். ராணுவத்தால் ஆக்சிஜன் சிலிண்டர்களை நிரப்ப பயன்படுத்தப்படும் இந்த தொழிற்சாலையின் மதிப்பு ரூ 1.1 கோடி. சுமீதா ஒரு ராணுவ மேஜரின் அம்மா, சியாசின் ராணுவ முகாமில் தங்கியிருக்கும் போது அவர் இந்தக் கடுமையான பருவநிலையை அனுபவித்திருக்கிறார்.

## PAN கார்டில் ‘மூன்றாம் பாலினம்’’




PAN கார்டு ஆண் மற்றும் பெண் கட்டங்களுக்கு அடுத்து-‘மூன்றாம் பாலினம்’ - என்ற கட்டத்தை சேர்க்குமாறு மத்திய நேரடி வரிகள் வாரியம் அறிவித்துள்ளது. திருநங்கைகளுக்கு சம உரிமையையும் சட்ட அந்தஸ்தையும் வழங்க 2014 ஆண்டில் உச்சநீதிமன்ற தீர்ப்பு அளித்ததன்படி, ஆதார் விண்ணப்பப் படிவங்களில் ஏற்கனவே மூன்றாம் பாலின வகை சேர்க்கப்பட்டுள்ளது. ரேஷ்மா பிரசாத் என்ற ஒரு திருநங்கை தாக்கல் செய்த மனு மீதான விசாரணைக்கு பதிலளிக்கையில் இந்த தீர்ப்பு வந்தது, இவரின் PAN கார்டு மற்றும் ஆதார் கார்டில் பாலினம் பொருத்தமில்லாமல் இருந்ததால் தொழில் தொடங்குவதற்குப் பதிவு செய்ய முடியவில்லை.

## பெற்றோர்களுக்கான விடுமுறை வீட்டுப்பாடம்




பள்ளிகள் மாணவர்களுக்கு விடுமுறை வீட்டுப்பாடம் கொடுக்கையில், சென்னையில் ஒரு பள்ளி பெற்றோர்களுக்கு மனதுக்கு இதமான 17 விடுமுறை ஒப்படைப்புகளின் பட்டியலை அனுப்பியிருக்கிறது. இது சமூக ஊடகங்களில் பரபரப்பாக விவாதிக்கப்படும் விஷயமாகியுள்ளது. இந்தப் பட்டியல் தங்கள் குழந்தைகளுடன் நல்ல பற்றுதலை ஏற்படுத்துவதற்கு ஊக்கமளிப்பதையும், நவீன தொழில்நுட்ப ரீதியாக முன்னேறிய வாழ்க்கை முறையை நோக்கி செல்லும் போது குடும்பத்தை இழந்துகொண்டிருக்கின்ற முக்கியமான வாழ்க்கைப் பாடங்களையும் மதிப்புகளையும் கற்பிப்பதையும் உள்ளடக்கியுள்ளது. இந்த செயல்பாடுகளின் புகைப்படங்களை பள்ளி திறக்கும் நாளில் மாணவர்கள் சமர்ப்பிக்க வேண்டும்.



## சாலை நெறிசலை முறியடிக்க விமான டாக்ஸி

போக்குவரத்து நெரிசலில் போது, விமான டாக்ஸி போக்குவரத்தைப் பற்றி கற்பனை செய்தவர்களின் கனவு நனவாகப் போகிறது. வோலோகாப்டர் என்ற ஜெர்மன் நிறுவனம் பறக்கும் டாக்ஸிகளை அறிமுகப்படுத்துகிறது. சமீபத்தில் இந்நிறுவனம் துபாயில் அவற்றை பரிசோதித்தது. சுரங்கப் பாதை ரயில் நிலையம் போல கூரை மீது ’வோலோ-போர்ட்டுகள்’ அமைக்கப்பட்டு, ஒவ்வொரு மணிநேரத்திலும் 1000 பயணிகள் தங்களின் சொந்த பறக்கும் டாக்ஸியிலிருந்து ஏறவும், இறங்கவும் பயணம் செய்வார்கள். ஒவ்வொரு பயணத்துக்குப் பின் ரோபோட்டுகள் டாக்ஸியின் பேட்டரியை மாற்றிவிடும், ஏனெனில் விமானம் 30 நிமிட நேரத்தில் அதிகபட்சமாக 17 மைல் வரை பறக்க முடியும். 2019 ஆண்டில் முன்மாதிரி வடிவம் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்த 10 ஆண்டுகள் வரை ஆகலாம்.

ஒருங்கிணைப்பு: ஜெய்ஸ்ரீ, வடிவமைப்பு: S கிருஷ்ணப் பிரதீஷ்




Join 2018-19 RI President Barry Rassin at the 110th Rotary International Convention for a memorable week of inspiration, friendship, and fun. You'll be able to connect with people of action from around the world — and Capture the Moment forever.

Take advantage of the limited-time registration rate of US$350* from 23 to 27 June.

**REGISTER ONLINE AT RICONVENTION.ORG**

*Registration must be paid in full between 23 and 27 June 2018 to receive the US$350 rate. All rates inclusive of VAT.

Rotary | 2019 HAMBURG

**ROTARY INTERNATIONAL CONVENTION**
**HAMBURG, GERMANY 1-5 JUNE 2019**